248

பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றகீதம்

சைத்தூன் கிஸ்ஸா

பேட்டை ஆமூர்
வாலைபாவா சாகிபவர்கள் குமாரர்
அப்துல்காதர் சாகிபவர்க ளியற்றியது

இட்டா. பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்,
சென்னை சக்கரவர்த்தி பிரஸ்
இதன் விலை] 1947 [அணா 0-10-0
நெ. 189, தங்கசாலை வீதி, மதராஸ்.

Q7:332
N47

பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றகீம்

சைத்தூன் கிஸ்ஸா

பேட்டை ஆமூர்

வாலேபாவா சாகிபவர்கள் குமாரர்

அப்துல்காதர் சாகிபவர்க ளியற்றியது

காயற்பட்டணம்

கண்ணகுமது மகுதூமுகம்மதுப்புலவர்

அ வ ர் க ளா ல்

பார்வையிடப்பட்ட பிரதிக்கிணங்க

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்.

இதன் விலை] 1947. [அணா 10.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகீம்

சைத்தான் கிஸ்ஸா

அல்ஹம்துலில்லாஹி றப்பல் ஆலமீன் வானம் பூமி அரசு குறுசு சுவர்க்கம் நரகமலை கடல் மரமுதலிய பறவைகளும், நாற்கால் சீவன்களும், மலக்குகள் மனிதர்கள் ஜின்கள் படையுண்ட படைப்புகள் யாவற்றும் புகழும் புகழ்ச்சிகளெல்லாம் அல்லாகுத்தஆலா ஒருவனுக்கே லாயக்காயிருக்கின்றன. இன்னமவன் எப்படிப்பட்ட சாஹிபேயானல் தன் அடியார்களுடைய குற்றங்களைப் பொறுத்து சுவர்க்கத்தில் சேர்க்கப்பட்ட றகீம் அவனன்றி இரண்டு லோகத்திலும் உதவி யொத்தாசை செய்பவர்கள் ஒருவருமில்லை. இன்னம் ஸிஅத்தும் ஸுறாதும் அவன் தூதராகிய முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கும் அலியாமார்களுக்கும் அஸ்ஹாபிமார்களுக்குமாம். ஆமீன் இந்த கிஸ்ஸாவானது இந்தக் கிதாபிலிருந்தது. இதனை இந்தி பார்சி வாசிக்கத் தெரியாதவர்கள் எளிதில் அறிந்து மகிழ்வுகொள்ளும்படி தமிழில் வெள்ளை மொழியாகக் கொஞ்சம் வசனமாகவும் கொஞ்சம் கவியாகவும் சகல பேரும் வாசிக்கும்படி இன்புற்றுப்பேட்டை ஆமூரிலிருக்கும் வாலைபாவா சாகிபு அவர்கள் குமாரர் அப்துல்காதிர்சாகிபு அருளிச் செய்தது.

அலங்காரக்கண்ணி

முகம்மதனீபு வேட்டைக்குப்போதல்

ஆதிஅனுப்பும்வேதமுறையின்படி அறிந்துசகலோரும்
அணுவளவாகிலும்பிசகிடாமல் அதபுடனேநடக்க
மானும்புலியும்ஒருதுறையில்தண்ணீர் மகிழ்வுடனேகுடிக்க
பாம்புங்கீரியுமோரிடங்கூடி படுத்துநித்திரைசெய்ய
அப்படிஅரசாயுமறுகத்தா யிருந்தாரரசாண்டு
சகலதேசத்துராசர்களெல்லாம் இவர்கைக்குள்ளாக
அடங்கியொடுங்கிட ஆண்டுவருகிற அந்தநாளையிலே
ஒருநாள்முகம்மது அனிபாகாட்டுக்கு உற்றவேட்டையாட
நாடிதன்கூடநாலுபேர்தன்னை நடத்திடத்தானழைத்தார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 MAY 1941
MADRAS

இரண்டுவீரர்கள் அபுபக்கர்சித்திக்கு இற்றபிள்ளைகளாம்
இரண்டுசூரர்கள்உமர்கத்தாபின் உத்தபிள்ளைகளாம்
இந்த-அஞ்சுபேருமொன்ருய்க்கூடி ஆலோசனைசெய்து
காட்டுக்குப்போயினியவேட்டைகளாடிட கொண்டாரந்நேரம்
வேட்டையின் ஆயுதமெடுத்தார்கைகளில் வேண்டுமானதெல்லாம்
பூட்டியேகொண்டார் அஞ்சுபேர்களும் புலிபோல்பரியேறி
விட்டார்குதிரையை அஞ்சுபேர்களும் மதினநகர்நீங்கி
காற்றைப்போலப்பறந்ததுகுதிரைகள் காடுமலைகளெல்லாம்
அப்படிகுதிரைகள்பறந்துபோகிற அந்நேரவேளையிலே
செந்தூள்பறந்து தூசியெழும்பிடச் சூரர்கள்கண்டார்கள்
கருந்தூள்பறந்து தூசியெழும்பிடக் கண்டாரந்நேரம்
அதிசயமாகவேபார்த்துநிற்கிருர் அஞ்சுராஜர்களும்
அந்தவேளையிலென்னகாண்கிருர் அஞ்சுராஜர்களும்
குதிரைநாற்பத்தொன்றைக்கண்டார் அஞ்சுராஜர்களும்
அப்போதுகண்டாள்சையித்தூனிந்த அஞ்சுபேரைக்காட்டில்
மின்னல்மின்றுற்போலக்குதிரைகளை விட்டாள்சைத்தூனும்
காற்றைப்போலவேபறந்தினிவந்தாள் காட்டில்சைத்தூனும்
அஞ்சுபேரையும்வளைத்துக்கொண்டாள் ஆங்காரத்தோடு
காகம்பருந்துகள்பறந்திடமுடியா காட்டில்பெரியகாடு
சிங்கம்புலிகளும்திரிகிறதில்லை சேர்ந்தபெரியகாடு
எனக்குச்சகலமும்பயந்துஒளித்திடும் என்றன்சொந்தக்காடு
அந்தக்காட்டினில்தைரியமாக அலைந்துதிரிகிறீர்கள்
கொஞ்சமும்எந்தன்பயமில்லாமல் கூடித்திரிகிறீர்கள்
உங்களுயிருவேண்டுமாயிருந்தால் வரமாட்டீரிங்கே
முடிவுகாலுங்களுக்காச்சுது யென்றுமொழிந்தாள்சையித்தூனும்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அரசர்முகம்மதனிபு
பசுக்கள்புலியேமிரட்டுவாராய் பேசுருயென்முன்னை
கோழிகள்நரியைமிரட்டுவாராம் கொதிக்கிருயென்முன்னை
எலிகள்பூனையைமிரட்டுவாராய் எதிர்த்தாயென்முன்னை
நீ-பெண்ணுபிறந்தவளென்முன்னதிகமா பேசுருய்வீருய்
ஆணுருகொண்டவனென்னைநீமிரட்ட ஆகுமாவுன்னுலே
என்றவார்த்தையைக்கேட்டு இருகண்ணெருப்பாகி
அந்தவேளையில்சையித்தூனுக்கு அதிககோபமாச்சு
என்னைப்பெண்ணென்றெப்படியறிந்தா யென்ருள்சைத்தூனும்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு இருகண்ணெருப்பாகி

நல்லதுநல்லதுசொல்கிறேன்கேளு நானறிந்தவயணம்
குதிரையேறிநீவந்திடும்போது கொங்கையசையக்கண்டேன்
அங்குபடியினில்பாதங்கள்ரண்டும் அதிர்ந்துஆடக்கண்டேன்
அந்தவார்த்தைகள்முழுதுங்கேட்டு அப்போதுசைபித்தூனு
ஆனாலாகட்டும்பெண்ணுநானிருந்தால் அதினால்குறைவில்லே
நெஞ்சஞ்சாமல்பேசிடும்வீரா யென்சொல்லைக்கேளு
வாரியடித்தேன்கணக்கில்லாமல் வலியவீரர்களை
சூறைகொடுத்தேன்கணங்கில்லாமல் சூரதீரர்களை
மல்லேஜட்டிகள்பல்லேயிளித்திட மாறிமாறிஅடித்தேன்
கணக்கில்லாமல்ராஜாக்கள் தலையைக் கத்தியாலறுத்தேன்
என்னோடெதிர்க்கஇந்தஉலகினில் எதிர்ஒருவருண்டோ
இப்படிப்பட்டவள்என்பேருனக்கு என்னுதெரியாதா
சிங்கங்கள்கதறிடவெட்டிக்கெலித்திடும் சைபித்தூனென்பேரு
யானைகள்கிழித்திடவெட்டிக்கெலித்திடும் சைபித்தூனென்பேரு
இராஜர்கள்தலையைவெட்டிப்பிளந்திடும் சைபித்தூனென்பேரு
ஜட்டிகள்தலையைவெட்டியெறிந்திடும் சைபித்தூனென்பேரு
எந்தன்பேரைக்கேட்டாலொன்றும் தண்ணீர்குடிக்காது
என்னுடதகப்பன்இறமெனும்பட்டணம் இருக்கிறான்ராஜாவா
அப்படிப்பட்டவயிற்றில்பிறந்த ஆண்சிங்கம்நானே
பதினேழுலட்சம்படைக்கி அதிபதியார்என்தகப்பன்
என்றசொல்லேக்காதிலேகேட்டு இறைபுலிஅலிமகனர்
என்பெயருனக்குத்தெரியுமாபெண்ணே யென்றாரப்போது
பூமியிலுள்ளவையெல்லாம்நடுங்கும் புலிஅலிமகனுன்
அல்லாபுலியெனபெயர்மிகப்பெற்ற அலியார்பெருமகனுன்
ஆதிதூதரின்பேரப்பிள்ளைநான் ஆண்மையுள்ளவனுன்
உயர்ந்தகுலத்தில்பிறந்தோனுனும் என்பேர்முகம்மதனிபு
வலியில்சண்டையில்தந்திரயுக்தியில் வல்லமையுள்ளவனுன்
என்றவார்த்தையைக்காதிலேகேட்டு எதிர்த்துசைத்தூனு
நல்லதுஉன்னுடையவல்லமையெல்லாம் நானறிவேன்பாரு
இப்போதுஎன்னுடன்சண்டைநீசெய்திடு அலியின்மகனாரே
வல்லமையெல்லாம்என்முன்காட்டிடு அலியின்மகனாரே
என்றவார்த்தையைக்காதிலேகேட்டு ஏகனலிமகனர்
சொன்னாரப்போதுசைத்தூனுக்கு சேதியொன்றுகேளு
அடிக்கிறதில்லையுன்னைநாங்கள் ஆங்காரங்கொண்டு
எதிரிஅடித்தபின்நாங்களடிப்பது எங்கள்வழக்கம்யென்றார்

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போசைத்தூனு
ஈட்டியையெடுத்து தலைமேல்சுழட்டி யெறிந்தான் அந்நேரம்
கோட்டையிடியைப்போலச்சத்தமிட்டு குத்தினளப்போது
முகம்மதனி இடையிலேபட்டது முகம்மதனிபாவும்
அந்தக்குத்தினல்சுழண்டுவிழுந்தார் முகம்மதனிபாவும்
மூர்ச்சையாய்ப்போனாரந்த அடியினல் முகம்மதனிபாவும்
ஆதியின்கட்டளையிப்படியிருந்தது முகம்மதனிபாவுக்கு
அந்தசைத்தூன்பெண்சாதியாக ஆதிநாட்டமுண்டு
அதனல்பதகுபெற்றுள்சைத்தூன் அந்தவேளையிலே
புலியைப்பசுவும்வெல்வதுமுண்டோ இந்தப்பூமியிலே
பூனையைஎலிகள்வெல்வதுமுண்டோ இந்தப்பூமியிலே
நரியைக்கோழிகள்வெல்வதுமுண்டோ இந்தப்பூமியிலே
நாயனுட்டபடிநடந்துமுடிந்தது நாமென்னசெய்வோம்
முகம்மது அனிபைவெல்லமுடியுமா வைட்டால்குத்தாலே
எத்தனைவீரரோமாண்டாரிவர்கை வாளின்குத்தாலே
எத்தனைசூரரோமாண்டாரிவர்கை ஈட்டியின் குத்தாலே
அப்படியிருக்கபெண்ணுலாமா அவரைக்கெலித்துக்கொள்ள
அந்தவேளையில் அப்படியிருந்தது முகம்மது அனிபாவும்
மூர்ச்சையாய்விழுந்துகிடந்தார்பூமியிலே முகம்மது அனிபாவுக்கு
அந்தவேளையில்சைத்தூன்கிட்டே அடுத்துநின்றுளாம்
கொஞ்சநேரம்பார்த்துசைத்தூன் குதிரைதனைவிட்டு
கீழேயிறங்கிக்கிட்டேபோனுள் கழுத்தையறுப்பதற்கு
கத்தியைவாங்கிக்கையிற்பிடித்துக் கழுத்தையறுக்கப்போனுள்
அந்தவேளையிலென்னமாகிடந்தார் முகம்மது அனிபாவும்
செத்தபிணம்போலிருந்தாரப்போது ஒன்றுந்தெரியாமல்
பேச்சுமூச்சுமில்லாமற்போச்சுது முகம்மது அனிபாவுக்கு
அப்படியிருக்கக்கண்டுசைத்தூன் அந்நேரவேளையிலே
கத்தியையுரையில்போட்டாளப்போ காரியமில்லையென
செத்தபிணத்தைஅறுப்பதுநமக்கு சாமர்த்தியமல்ல
அறுத்தால்வீணுகெட்டுபோம்கத்தி ஆகாதெனவெண்ணி
நாலுபேர்தன்னைப்பிடித்துக்கொண்டாள் நாலுகுதிரையோடு
திரும்பினள்சைத்தூன்தன்னுடையசீமைக்கி சீக்கிரமா அப்போது
தகப்பனிடத்துக்குவந்துசைத்தூன் சலாம்சொல்லிநின்றுள்
மகளைப்பார்த்துசந்தோஷமானன் மன்னன் அந்நேரம்
எந்தன்மகளேவேட்டைக்குப்போய்நீ என்னகொண்டுவந்தாய்

என்னென்னவேலைகள்முடித்துநீவந்தா யிப்போதுசொல்லு
என்றஉடனேசொன்னாள்சையித்தூன் யின்றுவேட்டையிலே
முகம்மது அனிபைவாரியடித்தேன் மன்னுதள் தான்போக
நாலுபேர்குதிரையும்பிடித்துநான்வந்தேன் நம்மிடசீமைக்கு
அலியின்பிள்ளையென்றொருவன்வந்தான் ஆங்காரங்கொண்டு
அதிககெட்டிக்காரனுமவனும் ஆண்மையுள்ளவீரன்
கூடவேநாலுபேர்தாங்களுமிருந்தார் குதிரைதானேறி
கொற்றவாளியின்பிள்ளையென்று கொன்றுபோட்டேனையா
என்றிவள்சொன்னசொல்லைக்கேட்டு எல்லாமந்திரிகளும்
இந்தப்பேச்சுகள்பொய்யென்றார்கள் ராஜர்முன்னாக
முகம்மது அனிபைவெல்வாருண்டோ வெட்டால்குத்தாலே
சீமைகளெங்கும்பெயர்பெற்றவர் சண்டைசெய்வதிலே
ஆண்சிங்கமாமுகம்மது அனிபு அலியார் தன்மகனும்
அலியாபேரைக்கேட்டாலிந்த அண்டம்புவிநடுங்கும்
பொல்லாக்காபர்தலைகளைவெட்டிப் பொடிபொடிசெய்த அலி
புத்திரனனபடியால்வெல்வது பொய்யென்றுசொன்னார்
அந்தச்சொல்களைக்காதிலேகேட்டு அப்போசைத்தூனு
மென்மேலாக ஆணையிட்டாள் மெய்யெனசைத்தூனு
பின்னுஞ்சொன்னாள்சைத்தூனப்போ பெரியோரேகேளும்
மதீனம்போய்நான்புலியலியோடு வல்லசண்டைசெய்வேன்
அவரைக்கெலித்துநான்வருவேனாகில் சைத்தூனென்பேரு
அப்படிகெலிக்காமல்போனால்பின்னும் இங்கேநான்வரமாட்டேன்
நானுவிதமாபந்தயஞ்சொன்னாள் நல்லசைத்தூனு

இறம்ராஜன் சண்டைக்கு விடுதல்

அந்தவேளையில்மந்திரிமார்கள் அரசன்தன்னைப்பார்த்து
எங்கள்சொல்லைக்கேட்டிடவேணும் இந்நேரவேளையிலே
என்றசொல்லைக்காதிலேகேட்டு ராஜனுமப்போது
ஓமந்திரிமார்களேயென்னசொல்லுகிறீர் மகிழ்வாகச்சொல்லும்
என்றஉடனேமந்திரிமார்கள் எழுந்துசொன்னார்கள்
ராஜாதிராஜர்கள்புகழும்சிங்க ராஜாவேகேளு
அரபுதேசத்துள்ளாரிவர்கள் ஆண்மையறியவேணும்
சிப்பாயிமார்கள்போலவிருக்கிறார் சூரர்நாலுபேரும்
சேவகமார்கள்போலவிருக்கிறார் தீரர்நாலுபேரும்

கெட்டிக்காரர்கள்போலவிருக்கிறார் இட்டேநாலுபேரும்
இவர்களேகுதிரையும்கத்தியும் இன்றுகொடுக்கவேணும்
நம்முடபடைகளையிங்கேயழைத்து இவர்கள்தன்னேடு
சண்டைக்குவிட்டுவேடிக்கைபார்ப்போம் சாமர்த்தியந்தன்னை
இவர்கள்வல்லமையறிவோமென்ருர் எல்லாமந்திரிகளும்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதுராசன்
மந்திரிமார்கள்சொல்லின்படியே மனதுசம்மதித்து
நால்பேர்தனக்குக்குதிரையும்கத்தியும் கொடுத்தானேராஜன்
படைகளையெல்லாம்முன்னேநிறுத்தினன் வேடிக்கைதான்பார்க்க
அந்தவேளையில்லுன்றுக்கொன்று ஆலோசனைசெய்தார்
நாலுபேர்களுமொருமனதாக நாடினர்அந்நேரம்
பிசபில்செய்வோமாகில்நமக்குப் பெரியபலனுகும்
கெலிப்போமாகில்பேர்மிகப்பெறுவோம் கெட்டிக்காரனென்று
வெட்டுப்பட்டுப்போவோமாகில் வீடுசுவர்க்கமாகும்
என்றுநினைத்துஏறினர்குதிரை எழுந்துநால்பேரும்
கத்தியையுருவிக்கையிலேபிடித்தார் காபர்கள்தன்னைவெட்ட
விட்டாற்காற்றைப்போலக்குதிரைகளை வேடிக்கைதான்காட்ட
புலிகள்போலஆங்காரங்கொண்டு புகுந்தார்படைக்குள்ளே
ஆட்டுகுலத்துக்குள்புலிபோல்புகுந்தார் ஆங்காரங்கொண்டு
துண்டுதுண்டாய்விழவேவெட்டினர் சூரர்தான்மடிய
குதிரைகள்துண்டாய்விழவேவெட்டினர் குவியமலைபோல
பிணங்காடாக்கினர்நாலுபேர்களும் பெரியபடையெல்லாம்
செந்தூள்பறந்துபோச்சுதுயெங்கும் சேனைகள்தெரியாமல்
கருந்தூள்பறந்துமூடிக்கொண்டது கண்களேதெரியாமல்
அந்தவேளையில்என்னசெய்தார் நாலுஅரசர்களும்
அல்லாதன்னைமனதில்நினைத்து அறுத்தார்காபர்களை
வீச்சுக்குவீச்சு துண்டுதுண்டாக விழுகுதேபிணங்கள்
தயிரின்குடம்போல்மூளைகள்சிதறி தரையில்விழுகுதுபார்
இரத்தஆறுகளோடிப்போச்சுது ராணுவர்தனக்குள்ளே
குப்பல்குப்பலாகப்பிணங்கள் குவிந்துபோச்சுதுபார்
அந்தவேளையிலென்னசொல்கிறுன் ராஜஇறமின்ராஜன்
வீரர்களேநால்பேரையீங்கள் விடாமல்பிடியென்ருன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதுபடைவீரர்
பிடிக்கப்போனரெல்லாம்வெட்டால் போனரிருதுண்டாக

அஞ்சி அஞ்சியேநின்றூரெல்லாம் அவர்களைப்பிடிக்காமல்
தூரமாகவிலகிநின்றூரெல்லாம் சூரரைப்பிடிக்காமல்
ஒருவகையிலுமகப்படவில்லை ஒருவராலுமப்போ
அந்தச்சேதியைக்காதிலேகேட்டாள் அரசன்மகள்சைத்தூன்
மெத்தையைவிட்டுக்கீழேயிறங்கினள் வேங்கைசைத்தூனும்
சீக்கிரமாகவேகுதிரையிலேறினள் சிங்கசைத்தூனும்
காற்றைப்போல்விட்டாள்குதிரையை கடுகசைத்தூனும்
சண்டைகள்முன்னேஓடியேவந்தாள் சாகிரதியமாக
கண்ணால்கண்டாள்சைத்தூன்ராணி கனத்தபடையெல்லாம்
மாண்டுகிடக்கிறபிணத்தைக்கண்டு மயங்கிசைத்தூனும்
சிப்பாய்மார்களேவெட்டிடவேண்டாம் சற்றுநேரம்நில்லு
சேதமாய்ப்போகுதுநம்மிடபடையெல்லாம் சற்றுநேரம்நில்லு
சண்டையைநிறுத்திப்போடுங்கள்நீங்கள் சருதார்மார்களே
கத்தியுங்குதிரையும்நீங்கள்கொடுத்தால் காரியமுண்டாகும்
உரோடிருக்காடினல்நீங்கள் என்சொல்லைக்கேளும்
உருண்டுமடிந்திடநாடினல்நீங்கள் ஓரேவெட்டில்போவீர்
முகம்மது அனிபை அடித்தாப்போல் மோதியடித்திடுவேன்
துண்டுதுண்டாய்ப்போகஉடல்களைத் தூளாய்ச்செய்திடுவேன்
வீணாமடிந்திடவேண்டாமென்றாள் வீரியசைத்தூனு
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அந்தநாலுபேரும்
சண்டையைநிறுத்திப்போட்டார்நாலு சருதார்மார்களும்
சைத்தூன்சொல்லின்படியேகொடுத்தார் சருதார்மார்களும்
சந்தோஷமாச்சுதுசைத்தூனுக்கு சருதார்மார்மேலே
அந்தவேளையிலென்னசெய்தாள் அரசன்மகள்சைத்தூன் [யும்
பிடித்தடைத்தினிசிறையினுள்போட்டாள் புலியெனும்நால்வரை

சைத்தூன் மதீனம் போகத் துணிதல்

தகப்பனைப்பார்த்துஎன்னசொல்லுகிறாள் சைத்தூனப்போது
சண்டைக்குப்போகிறேனலியைக்கெலித்திட சாமர்த்தியஞ்செய்து
பட்டணம்கைவசமாக்கிநான்வாரேன் பாரசண்டைசெய்து
எந்தன்பெயரைநிறுத்திநான்வாரேன் எல்லாம்பயந்திடவே
மதீனநகரம்நான்போறேனென்றாள் மகாராசனோடு
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதுராஜன்
என்னசொன்னாயென்னசொன்னா யெந்தன்மகளேநீ

அந்தப்பட்டணம்நீபோகவேண்டாம் அங்கேயிருப்போர்கள்
கொடியவம்பர்கள்வல்லமைக்காரர்கள் கொஞ்சமுமஞ்சார்கள்
போகநீவேண்டாம்போனால்விளையும் பொல்லாங்கென்பேரில்
ஆகாவேளைகளாகிடுமிங்கே ஆயத்ததிகமாகும்
பின்னாலென்னவந்துமுடியுமோ போகவேண்டாம்நீ
என்றசொல்லைக்காதிலேகேட்டு எழுந்துசையித்தூனு
பாதம்பணிந்துசொன்னாளப்போது பயப்படவேண்டாம்நீ
வெற்றிபெற்றுநான்வருவேனையா தடுத்திடவேண்டாம்நீ
சண்டைசெய்துகெலித்தவருவேன் தாரும்விடையென்றாள்
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போதுராசாவும்
போய்வாமகளேயென்றானப்போ பெரியராசாவும்
தகப்பன்சொல்லைசையித்தூனெழுந்து சண்டைசெய்வதற்கு
பட்டாகத்தியையெடுத்துப்பிடிந்தாள் பாங்காக்கைதனிலே
தண்டாயுதத்தைக்கூடவெடுத்தாள் சாமார்த்தியங்காட்ட
கத்தியையெடுத்துப்பூட்டிக்கொண்டாள் கழுத்திலப்போது
ஈட்டியையெடுத்துப்பிடித்தாள்கையில் எதிர்த்தபேரைக்குத்த
சண்டைஆயுதமெல்லாமெடுத்தாள் சைத்தூனந்நேரம்
குதிரையைக்கொண்டுவாயிங்கேயென்றாள் கொடியசைத்தூனும்
சிங்காரித்தார்நானாவிதமா சிறந்தகுதிரைதன்னை
குதிரையைநிறுத்தினார்சைத்தூன்முன்னே கொண்டுவந்துவீரர்
அந்தவேளையில்சைத்தூன்கூட அடிமையானபெண்கள்
நாற்பதுபேரும்ஆயுதம்பூட்டி நல்லகுதிரையேறி
வீரியத்தோடுவந்தினிநின்றார் சைத்தூன்முன்னாக
அவர்களைக்கண்டுசையித்தூனப்போ ஆங்காரங்கொண்டு
போட்டாள்காலைகுதிரையின்மேலே பெரியசையித்தூனு
அப்போதுகுதிரைவேகங்கொண்டது அடிகள்தூக்கிவைக்க
படபடவென்னநடந்துபோகுது பறவைபோல்குதிரை
தடதடவென்னநடந்துபோகுது தாண்டிகுதிரையுமே
நாற்பதுபெண்களும்கூடவேநடந்தார் நரியும்பசுவும்போல
மதினமாநகரைநோக்கியேவிட்டார் மண்டுகேன்தான்பறக்க

மூகம்மதனிபு எழுந்து மதீனம் போகுதல்

மூர்ச்சையாய்விழுந்துகிடந்தார்காட்டில் மூகம்மதுஅனிபாவும்
அவருடகுதிரைக்காரனுமப்போ அங்கேவந்துநின்று

ராஜருக்கெல்லாம்ராஜாவான ராஜாவேயின்று
இன்னம்தூங்குகிறீர்எழுந்திருமென்று உறத்தசத்தமாக
கூப்பிட்டுசொல்லிடமுகம்மது அனிபு கேட்டுஅப்பொழுது
கண்ணைமுழித்தெழுந்துகொண்டார் கனவுகண்டாப்போல்
எழுந்தவுடனேமுகம்மது அனிபு என்னசொல்லுகிறார்
நல்லகனவுகண்டோனிருந்தேன் நித்திரைசெய்யும்போது
என்னையெழுப்பினவய்ணமென்ன எனக்குச்சொல்லுமென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அடுமையப்போது
அரசாய்வந்தமுகம்மதுஅனிபோ அடியேன்சொல்லக்கேள்
தங்களைஸையித்தூனடித்தஅடியினால் தாங்கள்மூர்ச்சையாகி
கீழேநீர்வீழ்ந்துணர்வில்லாமல் களைபட்டுப்போனீர்
செத்தபிணம்போலானீரிப்போ ஸையித்தூன்குதிரையைவிட்டு
பார்த்தாள்கத்தியைக்கையிலேயுருவி பாரஸையித்தூனு
செத்தபிணம்போலிருந்திடக்கண்டு திரும்பிப்போனாளப்போ
குதிரைமேலேறினாலுபேரையும் குதிரையும்தான்பிடித்து
கொண்டுபோயினள்ஸைத்தூனென்று கூறினன்முன்னே
அந்தச்சொற்களைக்காதிலேகேட்டு முகம்மது அனிபாவும்
அதிகதுயரகொண்டாரப்போ முகம்மது அனிபாவும்
துக்கத்தோடுபோனார்ம்தினம் முகம்மது அனிபாவும்

தாயார் மகனைக்கண்டு சொல்லுதல்

வாடியமுகமாய்முகம்மது அனிபா வந்தார்வீட்டுக்கு
தாயார்மகனார்மூஞ்சியைப்பார்த்து தயவோடுசொல்வார்
என்றனுயிரேஎன்கண்மணியே என்னவயணத்தாலே
உறங்கியமுகமாய்வந்தாயென்று உருத்திவுருத்திக்கேட்டாள்
அதற்குஒன்றும்சொல்லவேயில்லை முகம்மது அனிபாவும்
அப்போதனிபுசீக்கிரமாக அடுமைதனைப்பார்த்து
நடந்தகாரியமெல்லாமிப்போ நானறியச்சொல்லு
சேதிகளெல்லாமறைப்பில்லாமல் தெரியஎனக்குச்சொல்லு
அனிபாகேட்கஆதியோடந்தமா யடுமைசொல்லிவந்தான்
ஸையித்தூனாலேபட்டபாடுகளின் சேதியெல்லாஞ்சொன்னான்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதனிபாவும்
மகனைப்பார்த்துஎன்னசொல்லுகிறார் அனிபுஅம்மாளும்
உலகினிலுள்ளவீரரைவெட்டினோர் உன்தந்தைஅலியார்

தேவுபரிகளைத்துண்டாய்வெட்டினூர் உன்தந்தை அலியார்
பூதசக்திகளைப்பொடிப்பொடியாக்கினூர் உன்தந்தை அலியார்
நீ-அப்படிப்பட்டமகனுய்ப்பிறந்தாய் ஆண்பிள்ளையொன்று
உந்தன்தாயார்எப்படிப்பட்ட வல்லமையுள்ளவளாம்
எத்தனைஜட்டியோமல்லாமல்மாண்டார் எண்ணிடமுடியாது
சண்டைக்கிப்பெரும்புலிஉந்தன்தாயார் சாமர்த்தியக்காரி
தன்மகனுகநீபிறந்தாயானல் தைரியமில்லாமல்
பெண்ணின்கையாலடிபட்டாய்நீ பேடிகன்போல்மகனே
வீரியமெல்லாமற்றுப்போச்சுதோ வேட்டை ஆடுகையில்
இப்படிப்பட்டபிள்ளையாகநீ யென்வயிற்றிற்பிறக்கலாமா
இதிலும்இறந்துபோகுதலெனக்கு ஈனமொன்றுமில்லை
ஆணுய்ப்பிறந்துநீயிருந்தாலவளை யடித்துகெலித்துவருவாய்
ஆணல்லாதலால்அவள்கையால்நீ அடிபட்டுவந்தாய்
என்றுதாயார்சொல்லிட முகம்மது அனிபாதான்கேட்டு
தலையைக்குனிந்தார்முகம்மதனிபு தாயார்சொல்கேட்டு

முகம்மதனிபு சையித்தூனை கெலிக்கப்போதல்

தாயார்சொன்னமொழியைக்கேட்டு தைரியமிகச்செய்து
அந்தவேளையிலென்னயெண்ணினூர் முகம்மதனிபாவும்
பெண்ணுய்ப்பிறந்தசைத்தூன்கூட பெரியசண்டைசெய்து
கெலித்திடவேணும்மதன்பின்னவளை கிடங்கிலடைக்கவேணும்
அவளுடநாற்பதுபாந்திமார்தங்களை சிறையிலடைக்கவேணு[ம்]
சிறையிலடைத்துவைத்தநாலுபேர்தங்கள் சிறையைமீட்கவேணும்
இறமெனும்பட்பிணம்புகுந்து அவ்வூரை யிடவேணுங்கொள்ளை
எதிர்த்திடும்பேர்களை துண்டுதுண்டா இரையாய்க்கொடுக்கவேணு[ம்]
ராஜனுடைவன்சேனைகள்முழுதையும் இசுலாமாக்கவேணும்
நகரைப்பிடித்துநம்ப கைவசமாக்கி நாம்பள்ஆளவேணும்
இப்படிநானுவிதமாமனதினுள் எண்ணினூரப்பொழுது
மனதுக்குள்ளவேசத்தியஞ்செய்து மனதுதுணிவாச்சு
வெற்றிபெறுமற்போனுல்மதீனம் வரவேகூடாது [ன்]
சண்டைசெய்துநான்கெலிக்காமற்போனுல் திரும்பிமேவரமாட்டே
இப்படிநினைக்கக்கோபமூண்டது அந்நேரவேளையிலே
கண்களிரண்டும்சிவந்துபோச்சுது முகம்மது அனிபாவுக்கு
படபடவென்னமீசைகள்துடிக்குது முகம்மது அனிபாவுக்கு
பல்லைநெறநெறவென்றுகடித்தார் முகம்மது அனிபாவும்

குதிரைக்காரனைக்கூப்பிட்டுச்சிக்கிரம் குதிரையைக்கொண்டுவோ
என்றசொல்லைக்காதிலேகேட்டு அப்போதுகுதிரைக்காரன்
சீனியையெடுத்துப்போட்டுகட்டினன் சிக்கிரமாயவனும்
சிங்காரித்துக்குதிரையையப்போ தீரவீரசூரன்
எதிரில்கொண்டுவந்துநிறுத்தின னிந்தப்பூமியசைய
அந்தவேளையில்முகம்மது அனிபு ஆயுதந்தனையெடுத்தார்
கத்தியையெடுத்துக்கையிலேபிடித்தார் கனத்தவீரசூரர்
அம்பையெடுத்தினிபோட்டார்தோளில் அனிபாவின்மகனா
சக்கரமெடுத்துக்கையில்பிடிததார் சமர்த்தரலிமகனர்
தண்டாயுதத்தையெடுத்துப்பிடித்தார் சையித்தூனைவெல்ல
கேடகமெடுத்துத்தோளில்போட்டார் கெட்டிக்காரவீரர்
குதிரைமேலேறினர்பூமியதிர்ந்திடக் கோபமிகவாகி
செந்தூள்பறந்திடவிட்டார்குதிரையை சையித்தூன்தனைநாடி
பூமியதிர்ந்திடவிட்டார்குதிரை பூவைகளதனைநாடி
கருந்தூள்பறந்திடவிட்டார்குதிரை காரிகைதனைநாடி
கூட அடிமையைமுகம்மது அனிபு கூடக்கூட்டிப்போனர்
இறமின்புறமாகுதிரையைவிட்டு ஏறிநடந்துபோனர்

பீலி அனிபா பாந்தியைக் கேட்குதல்

அந்தவேளையில்அனிபாதாயார் அடியாள்தனைப்பார்த்து
எந்தன்கண்மணியானமகனர் எங்கேகாணமென்றார்
ஈரல்கொழுந்தாயுகந்தமகனர் எங்கேகாணமென்றார்
ஏகன்புலிஅலியீன்றசெல்வனர் எங்கேகாணமென்றார்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபாந்திபெண்ணு
அம்மாசொல்வேன்காதுகொடுத்துக்கேள் அரசரும்மகனர்
கோபத்தோடுகண்கள்சிவந்து குதிரைமேல்தானேறி
ஆயுதம்பூண்டுபோனரெங்கையோ அறியேனென்றும்
கூட அடிமையைக்கூட்டியேபோனர் கொற்றவர்நானறியேன்
என்றசொல்லைக்காதிலேகேட்டு ஏங்கிஅனிபாவும்
நாம்பள்சொன்னசொல்லால்மகனுக்கு நாணமிகவாகி
நடந்துபோனர்குதிரைமேலேறி நானெங்கேகாண்பேன்
எந்தவழியாய்ப்போனதுமறியேன் என்னவேலையாச்சுது
எவ்விடங்கண்டுதேடிப்பிடிப்பேன் என்றுஎண்ணமாச்சு
அதிகப்படையினையுள்ளவள்சைத்தூன் அதிகெட்டிக்காரி
ஒன்பதுகோடிபடையினையுடையவன் இரமின்ராசாவும்

சத்துருவானவன் அவனைக்கெலித்திட சண்டைக்குப்பாலகனும்
போனபடியினாலென்னவிளையுமோ போவேமெனவெண்ணி
அப்போதுதாயார்சஞ்சலங்கொண்டு அதிககலக்கமாகி
வேதனையாகியேமனதுதுயரமாய் விசனமதிகப்பட்டார்

அனிபா அம்மாள் மகனைத் தேடிப்போகுதல்

அங்கேபோகொட்டாமல்மகனை அழைத்துவருமோமென்று
சீக்கிரமாகஆயுதமணிந்து சிங்கக்குதிரையேறி
இறமின்புறமாக்குதிரையைவிட்டார் எழுந்துபறக்கத்தூரு
இப்படிகாட்டின்புறமா அனிபு ஏகிநடக்கும்போது
இருந்தாப்போலஇருந்ததூசியும் எதிரிலெழும்பக்கண்டார்
கண்டார்சாற்பதுமேலொருகுதிரையும் காட்டினிலோடிவர
அதிகவேகமாய்வாராள்சைத்தூன் ஆங்காரங்கொண்டு
ஓற்றக்குதிரையைக்கண்டாள்சைத்தூன் ஓடிவந்துகிட்டே
என்னுடகாட்டினிலென்னமாய்வந்தா யென்றாள்சைத்தூனு
கொஞ்சமுமஞ்சாமலேவந்தாய் காட்டில்வேட்டையாட
என்னிடபயமில்லாமல்போச்சுதா உனக்கின்னேரம்
முடிவுநாள்கிட்டே ஆச்சுதுயென்றாள் மேகசைத்தூனும்
சண்டைசெய்யென்றாளென்னோடிப்போ சாமர்த்தியமாக
உன்னுடவல்லமைஎன்முன்காட்டு ஓத்தைக்குதிரைக்காரா
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதனிபாவும்
என்னசொன்னாயுந்தன்காடா யிதுவுமுன்பயித்தியமா
வேட்டையாடுவோர்க்கெல்லாம்காடுகள் வேண்டுமான இடமாம்
வீணுமொழிகளைப்பிறத்திடவேண்டாம் விருதுமிகக்காட்டி
ஆணில்உடைகளைஉடுத்திஆண்பால் ஆயுதம்தான்பூட்டி
காட்டில்வேட்டையாஆடநீவந்தது காரியமொன்றுமில்லை
வீட்டுக்குள்ளிருந்துநூலினை நூற்பது உனக்குத்தகுந்தவேலை
விருதுகளணிந்துஆடவர்போலப் பெண்கள்வேலையல்ல
அவ்வார்த்தைகாதிலேகேட்டு அப்போதுசைத்தூனு
பல்லைநெறநெறவென்றுகடித்தாள் பாவைசையித்தூனு
கண்கள்ரெண்டும்சிவந்துபோச்சுது கடுங்கோபத்தாலே
பெண்ணுநானென்றுஎப்படியறிந்தாய் பேடிஅல்லவேநான்
புலிகள்யானையைத்துண்டாய்நறுக்கிடும் பெரியசிங்கம்நானே
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அனிபா அம்மாளும்
உன்னுடமாரின்கொங்கைகள்ரெண்டும் அசையநான்கண்டேன்

குதிரையின் அங்குபடியினில்ரெண்டு காலுமதிரக்கண்டேன்
அதனுலுன்னைப்பெண்ணென்றறிந்தேன் ஆணல்லவென்று
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு ஆங்காரங்கொண்டு
நான்-பெண்ணுயிருந்துபிளந்தேன்வெட்டி பெரியராசர்களை
கணக்கில்லாதபேர்களுமாண்டார் என்கைவாளாலே
எண்ணிக்கையில்லாப்பேர்களுமாண்டார் என்கைவாளாலே
உன்னுடகாலமும்அடுத்ததுஎன்று உருவினளேகத்தி
கத்தியையுருவிஓங்கியேவெட்டினள் கடுங்கோபத்தாலே
அனீபுஅம்பாள்தலைமேல்வெட்டிட அப்போதனிபாவும்
கேடகத்தால்தாங்கினர்வேட்டை கொஞ்சமுமஞ்சாமல்
அந்தவெட்டினல்கேடகமறுந்து அந்தவெட்டுருகி
தலையில்நாலுவிரற்கடைஅறுந்து சஞ்சலமிகவாக
காயம்பட்டதுரெத்தமுமொழிகிட கண்மினுமினுப்பாகி
கிறுகிறுவென்றுசுழலுவதாகிக் குத்தினர்அனிபாவும்
அந்தவேளையிலென்னசெய்தாள் ஆங்காரசையித்தூனு
பாசக்கயிற்றினை அனிபாமேலே போட்டாளந்நோம்
மீனைப்பிடித்ததுபோலவேபிடித்தாள் அனிபாவம்மாளை
அந்தவேளையிலென்னசொன்னர் அனிபாவம்மாளும்
அல்லாதன்னைநாடிப்புகழ்ந்து அப்போதுஆக்கேட்டார்
உந்தன்காவலில்வைத்திடுயென்னை யிந்தவேளையிலே
உதவியொருவரில்லையேயெனக்கு உன்னையன்றியல்லால்
அந்தவேளையில்மூகம்மதனிபு ஆயாசங்கொண்டு
போரவழியில்வின்னமுமானர் பெற்றதாய்மேலே
ளன்னைத்தேடியென்தாயார்வருவார் என்னகுற்றமாமோ
எங்கேகண்டுபிடிப்பாரென்னை என்றுவிசனமாக
இப்படிநானுவிதமாயெண்ணி யிருந்திடும்வேளையிலே
அடிமையைப்பார்த்துச்சொன்னர்முகம்மது அனிபாஅந்நேரம்

வசனம்

இம்மேட்டின்மேலேறி நகமுகமுஞ் சுற்றிப்பார்; என்ன காரியங்கள் தெரிகிறதென்றுசொல்ல; அச்சொல்லைக் குலாம் கேட்டு அப்படி ஏறிப்பார்க்கையில் அங்கோர் சையித்தூன் நிற்கக் கண்டு, ஓ அமீரே! தங்களுடைய தாயாரமேலே சையித்தூன் பாசக்கயிற்றை விட்டுப் பிடித்திருக்கிருளென்று சொன்னர். அச்சொல்லை முகம்மது அனிபு கேட்டு இந்நேரம் நாம் உதவியாய்ப்

போகாமற்போனல் வீணுய்க் கொன்று போடுவாளென்றெண்ணி, மின்னல் மின்னிறாற் போலக் குதிரையை வோடவிட்டு அங்கு வந்து சேர்ந்தார். அங்கு தாயாரைக்கண்டு உடனே அக்கயிற்றை அறுத்துப்போட்டுத் தாயை மீட்டுக்கொண்டார். அதை சையித்தூன் கண்டு அதிக கோபத்தோடு நான் பிடித்த வேட்டையை விடுவித்து விட்டாயே; உன் பெயரென்ன? சீக்கிரமாகச்சொல். இன்னம் இந்த சவாரி யாரென்று கோபமாகக் கேட்டாள். அப்போது முகம்மதனிபு என் பெயர் முகம்மதனிபு. இவர்கள் என் தாயார். நானுன்னுடன் சண்டைசெய்யவந்தேன் என்னுடைய தாயார் எனக்காக என்னைத் தேடி வந்தாங்களென்று சொன்னார். அப்பொழுது சையித்தூன் என்னைப்போல உலகினில் பெண்வடிவானோர்களில் வல்லமையுள்ளவர்க ளொருவரு மில்லையென்று சொல்லிப் பின்னும் உன்னுடைய தாயார் மிகுந்த பெலக்கர முள்ளவள். யாதொரு அச்சமின்றி என்னுட னெதிர்த்துப் போராடினாள். ஆனாலும் நீ முன்னால் என் கை வாளின் வெட்டிற்குத் தப்பிப்பிழைத்துப்போனாய். அப்பொழுதே உன்னுடைய கழுத்தை அறுக்காமற் போயினேன். ஆகிலு மிப்போது உனக்கு முடிவின்காலங் கிட்டே நெருங்கினதென்று சொல்லி, ஒன்றுக்கொன்று ஆங்காரத்தோடு வெட்டத்துணிந்து கத்திகளையுருவி கையிற்பிடித்துக்கொண்டு, இடியும் இடியும்போலே மலையும் மலையும்போலே புலியும் புலியும்போலே ஆக்ரமித்து நல்ல சண்டை செய்தார்கள். அந்நேரவேளையில் பீவி அனிபா இரத்தம் ஒழுகும் காயத்தின்மேல் ஒரு துணியால் கட்டிக்கொண்டு தையம்மம் செய்து இரண்டு றக்ஆத்து நபில்த்தொழுதுக்கொண்டு கையுமெடுத்து அந்த ஆலாவினளவில் யாகரீம்-யாறகீம் இந்தச்சமையத்தில் என்பிள்ளைக்கு வெற்றியாகக்கொண்டு அவள் மிகுந்த பெலமுள்ளவளாயிருக்கிறாள். இப்பிள்ளை உன்னுடைய புலி அலி பின்பிள்ளை நீ வெற்றியைக்கொடு. அப்படி நீ கொடாவிட்டால் எங்களுடைய பெயர் போய்விடுமென்று கேட்ட துஆ-அந்நேரம் அந்த ஆலாவினிடத்தில் கபூலாய்விட்டது. அந்தச்சமயத்தில் சையித்தூனும் முகம்மது அனிபாவும் இருபேரும் கைகளில் கத்தியைஉருவி ஒருவர்க்கொருவர் வெட்டிக்கொண்டார்கள். அவ் வெட்டுகளை ஒருவர்க்கொருவர் படாமல் கேடகத்தினல் தாங்கிக் கொண்டார்கள். இப்படி வெகுநேரம் சண்டைசெய்து ஒருவர்க்கொருவர் தாழாமல் கடைசியில் முகம்மது அனிபு சைத்தூனைப்

பார்த்து நீ என்னுடைய இடையில் கையைப்போட்டு உன்னுடைய வல்லமையெல்லாங்கூட்டி என்னைத் தூக்கென்று சொல்ல, அப்பொழுது சைத்தூன் அதேபடி இடுப்பில் கையைக்கோர்த்து தன்பெலமெல்லாம் கூட்டி குதிரையின்மேலிருக்கிறவரைத் தூக்கினாள். அவர் எழும்பவில்லை. பின்னும் முகம் சிவக்கும்படியாக அதிக பெலமாகத் தூக்கினாள். அப்பொழுதும் எடுக்க முடியவில்லை. பின்பு முகம்மது அனிபு சைத்தூனுடைய இடுப்பில் தன்கையைமாட்டி ஒருசத்தமிட்டு மேலுக்குத்தூக்கித் தலைமேலாகச்செய்து வானத்தின் புறமாகத்தூக்கி யெறிந்துவிட்டார். அப்போது தாயார் மகனைப்பார்த்துக்கூவி, ஓ என்கண்மணியான மகனே! நீ சீக்கிரமாக சையித்தூனைக் கீழே விழவொட்டாமல் தாங்கிக்கொள். தாங்காவிடில் வீணாகயிறந்துபோவாள். ஆகையால் நீ தாங்காவிட்டால் உனக்கு நான் பால் கொடுத்ததை யொறுப்பிக்கேனென்று சொல்ல, அதை முகம்மதனிபு கேட்டு கீழே விழவொட்டாமல் கையாற்றாங்கிக் கீழேவிட்டார். அப்போது சைத்தூன் முகம்மதனிபாவைப் பார்த்து நானொரு விரதஞ் செய்துக்கொண்டேன். அதென்னவெனில் என்னுடன் சண்டைசெய்து என்னையார் கெலிக்கிறார்களோ அவருக்கே நான் மனைவி; ஆகையால் நான் தங்களுடைய அடியாள், தாங்கள் எனக்குப் புருஷனென்று சொன்னாள். அந்தச்சொல்லை முகம்மதனிபு கேட்டு நல்லது நீகுபுரைநீக்கி கலிமாவோதி நேர்வழியிலாகென்று சொன்னார். அதைக்கேட்டு உடனே சையித்தூன் கலிமாவோதி ஈமான்கொண்டாள் கூடி அவர்களுடைய 40-பாந்திகளும் கலிமாவோதி ஈமான்கொண்டு இசுலாமாகினார்கள்.

அப்பொழுது முகம்மது அனிபுந் தாயாரைப்பார்த்து நீ சையித்தூனையும் கூடயிந்த 40-பந்திகளையு மழைத்துக்கொண்டு மதீனத்திற்குப் போங்கள். நான் செய்துவந்த ஷாத்தின்படி இறமென்னும் பட்டணம்போம் அவ்வரசனோடு சண்டைசெய்து கெலித்து அவர்களை யிசுலாமாக்கி அந்த 4-பேரையு மீட்டுக்கொண்டு வாராமல் என் முகத்தை மதீனத்திற்குக் கொண்டு வரமாட்டேனென்று சொல்லி சைதூன் வல்லமைக்காரியென்று நம்பாமல் இரண்டு கையும் பிணித்து மற்ற 40-பாந்திகளையும் அதேபடக் கைகளைக் கட்டித் தாயாரின் புறமாக ஒப்பித்துவிட்டு மதீனம்போகச் சொல்லித் தான் இறமென்னும் பட்டணத்தை நாடிப் போயினர். பின்பு அனீபு அம்மாள் சைத்தூனையும் நாற்பது

பாந்திகளையும் கைக்கட்டோடு குதிரைகளின் மேலேறி மதீனத்தின் புறமாக வழிபிடித்து நடந்து போகையில் அக்காட்டில் ஒரு ராசன் தன்படைகளோடு வேட்டையாட வந்திருந்தான். அவன் வேட்டையாடி வருகிற சமயத்திலிரண்டு புலிகள் அவன் கண்ணில் எதிர்ப்பட்டது. அப்புலிகளின்மேல் தன் குதிரையைவிட்டான். புலிகள் முன்னும் குதிரை பின்னுமாக ஓடி வரும்போது அந்தக் கொடிய வரசனுடைய பார்வை இவர்களீபேரில் விழுந்தது. அப்பொழுதவன் தன் குதிரையை பீவி அனிபா சைத்தூன் (40) பாந்திகளுமாக வருகிறபாதை வந்து வளைந்து நீயார்? எங்கிருந்து வருகின்றாய்? இவர்களை எங்கே, கொண்டுபோகிறாய்? இவர்களும் யாரென்றுகேட்டான். அதற்கு பீவி அனிபா அப்பாதகனைப்பார்த்து நான் அலிபுலியாருடைய பெண்சாதி. இப்பெண் என்னுடைய மருமகள். மற்றவர்களெல்லாம் பாந்திகளாயிருக்கிறார்கள். நாங்கள் மதீனத்திற்குப் போகிறோமென்று சொல்ல, அதைச் சண்டாளவரசன் கேட்டு நீ உன் மருமகளை என் வசம் விட்டுவிட்டு உன்னுடைய பட்டணத்தை நோக்கி உன்வீடு போய்ச் சேரென்று சொன்னான். அச்சொல்லை பீவி அனிபா கேட்டு அதிக கோபங்கொண்டு இரண்டுபேரும் ஒன்றோடொன்றெதிர்தது அதிக சண்டைசெய்தார்கள். அந்நேர வேளையில் பீவி அனிபாவை அந்தக் கொடிய காபராகிய அரசன் தண்டாயுதத்தினா லடித்தான். அவ்வடி முன்னால் காயம்பட்டிருந்த காயத்தின்பேரில் விழுந்தது. அதனாலப்பொழுது பீவி அனிபாவிற்கு அதிக வருத்தந்தோன்றியது. அப்பொழுது பீவி அனிபா அந்த ஆலாவிடத்தில் (யாலப்பே) நான் உன்னுடைய புலியாருடைய மனைவி. ஆகையா லிந்நேரம்வளையில் என வெட்கத்தைக் காப்பாற்றி இருந்தது சுமனைவிட்டு மீட்கவேணுமென்று துஆக்கேட்க, அந்த துஆ அந்த ஆலாவினிடத்தில் கபூலாய் விட்டது. அந்நேரவேளையில் ஒருபக்கமாயிருந்து தூசி எழும்பினது. அந்தத்தூசி அவன்கண்ணில் வீழ்ந்தது. அதனாலவன் தன்கண்களைக் கசக்கிக்கொண்டிருந்தான். அந்தச்சமயத்தில் ஒரு மலக்கு வந்து அங்குபடியைப் பிடித்து ஒருநொடிக்குள் ஒருவர்கண்ணுக்குத் தெரியாமல் பீவி அனிபாவை அவ்விடம்விட்டு வீடடிற் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். பின்பு அரசன் தன் கண்களைக் கசக்கி முழிதது்ப் பார்த்துப் பார்க்கையில் தூசியுமில்லை பீவி அனிபாவுமில்லை. அங்கே சைத்தூனும் (40) பாந்திகளுமாத்திரமிருக்கக்கண்டு, அதிகசந்தோஷததோடு சைத்தூன நம்பள் கையில் அகப்பட்டுக்கொண்டாள் என்று பூரித்தான். அந்நேர

வேளையில் அவனுடைய படைகளும் மந்திரிமார்களுமாக வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது அவ்வரசன் அதிக தைரியங் கொண்டு சைத்தூனைப்பார்த்து, ஓ சங்கிரவடிவாளே! மாதே! தேனே! நீ யென்னைச்சேர ஒப்புக்கொள்ளென்று கொஞ்சமு மன மஞ்சாமற் சொன்னான். அவன் சொன்னதை சையித்தூன் கேட்டு அடா மடையா! புக்தியில்லாதவனே! ஆனால் நான் என்ன செய்வேன். இப்பொழுது என்னுடைய இரண்டு கையையுங் கட்டியிருக்கின்றது. அப்படி கட்டியில்லாமற்போனால் நீ என்னைக் கூப்பிட்ட நாவையும் உன்னுடைய இன்பத்தையும் மகிழ்ச்சியையும் நான் ஓடிப்போகும்படியாகத் தண்டனை கொடுத்து உன் தலையையும் களைந்துவிடுவேனென்று சொன்னாள்.

அந்நேரவேளையில் மந்திரிமார்கள் ராஜனைப்பார்த்து நீ என் ஆத்திரப்படுகிறாய். கிணற்றுத்தண்ணீரை வெள்ளங் கொண்டு போகுமா? ஒருபோதுங் கொண்டுபோகாது. உன்கையிற் சிக்கியிருக்கிற பெண் உன்னையுமறியாமல் ஓடிப்போவாளா? ஆனாலும் ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்கவேணும். இன்னும் தன்னையுமறியாம லுயிர்போகமாட்டாது உன் மனதைக் கிடப்படுக்தென்று சொல்ல, அரசன்கேட்டு அவ்விடம்விட்டு தன் சேனைகளோடு இந்த (11) பெண்களையும் பிடித்துக்கொண்டு ஒரு கோப்பில்வந்து இறங்கியிருந்தான். அந்நேரவேளையில் ஒரு கிழவ ராஜனைக்கண்டு தண்டஞ்செய்து அடிபணிந்து நின்றாள். அவள் எப்படிப்பட்ட வல்லமையுள்ள கிழவியெனில், கூடாதபெண்களை கூட்டிவைக்கப்பட்டவள்; சேராதபெண்களைச் சேர்த்துவைக்கப்பட்டவள்; நாடாதபெண்களை நாடச்செய்யப்பட்டவள். மருந்திடுவதிலும் மந்திரத்திலும் கெட்டிக்காரி. அவள் தொழிலே கூட்டிவைக்கிற தொழிலாயிருந்தது. அக்கிழவியை அரசன் பார்த்து ஓ அம்மா! நானொரு பெண்ணைக் கொண்டுவந்திருக்கிறேன். அவள் பேரில் எனக்கு மிக்க ஆசையுண்டு. அவள் எனக்கு சம்மதிக்கிறதில்லை. அவளை நீ உன்னுடைய வித்தையினால் கூடும்படி செய்விப்பாயாகில் உனக்கு அளவற்ற நிதியு முடைமைகளும் தருவேனென்று சொன்னான். அந்தச் சொல்லை கிழவிகேட்டு ஓ ராசனே! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. அவளை உன்னுடன் சேரும்படியாகக் கூட்டிவைப்பது என்னுடைய வேலையாயிருக்குமென்று சொல்ல, அப்பொழுது ராசன் கிழவியைப் பார்த்து நல்லது இந்நேரவேளையில் உன்னிடத்திலென்ன ஆசாரியிருக்கின்றதோ அதை யெனக்குக் கொண்டுவந்து குடிப்பாட்டென்று சொல்ல, அதற்குக் கிழவி

உனக்கு இப்பொழுது வேண்டுமானால் அமுதமிருக்கிறது. அதைச் சுடவைத்துக் கொண்டுவந்து தருகிறேனென்றுசொல்ல, அதற்கு ராஜன் அப்படியே ஆகட்டுமென்று சொன்னான். அப்பொழுது கிழவி பாலே அடுப்பில்வைத்து தீமூட்டியெரித்துவிட்டு அப்படியே அங்கே நித்திரைபோய்விட்டாள். அப்பொழுதொரு கனவுகண்டாள். அது எப்படிப்பட்டகனவெனில்: சில மலக்குகள் வந்து அக்கிழவியின் தலைமயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டு நரகத்தில் கொண்டுபோய் போட்டு சொல்லமுடியாத கொடூர அசாபுகளைச்செய்தார்கள். அப்பொழுது அக்கிழவி அந்த வருத்தங்களைப் பொறுக்கமுடியாமல் கூகூவென்று கதறி நீங்களென்னத்திற்காக நெருப்பிலென்னைப்போட்டு இப்படிப்பட்ட வேதனை செய்கின்றீர்கள்? அப்படி நானென்ன தப்பிதஞ் செய்தேன் என்றுகேட்க, அவளுக்குப் பிரதி ஒன்றுஞ்சொல்லாமல் பின்னு மதிகமான வருத்தங்களைக்கொடுத்தார்கள் அதனால் அக்கிழவி நெருப்பின்சூட்டில் அகப்பட்டு மெத்த விசனப்பட்டிருந்தாள். அந்நேரவேளையில் அவள் வணங்கிக்கொண்டிருந்த லாத்து மனாத்து முதலிய புத்துகள் அவள் முறையிடுவதைக் கேட்க வில்லை. அவளுக்கு உதவி ஒத்தாசையும் செய்யவில்லை. அதனாலவள் மனம்வெந்து கைசேதப்பட்டவளாய் அந்தக் குபரின்புறமாக முகத்தைத்திருப்பி அந்த ஆலாவை நினைத்து என்னை மீத்தி விடு. இன்னும் காத்துக்கொள்ள இந்தக் கொடிய அசாபைப் பொறுக்க என்னால் முடியவில்லை. எனக்கு உன்னையன்றி உதவி ஒத்தாசை செய்வாரில்லை. இது நிரம்ப இக்கட்டானவேளையாயிருக்கின்றது. என்பேரில் கொடுமையாகிய அசாபா லெனக்கு புத்துக்களின்பேரில் நிண்ணயமில்லை. ஆனால் உன்னையன்றி உலகினில் உதவி ஒத்தாசைசெய்ய ஒன்றுமில்லை. நாயனேயென்று துஆக்கேட்டாள். அந்த துஆ அந்நேரம் ஆலாவினிடத்தில் கபூல் விட்டது. அப்பொழுது இருந்தாப்போலிருந்து மின்வெட்டினாற் போல் அக்கிழவியின் முன்பில் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமிவர்கள் வந்து தெரிசனமானார். அப்பொழுது பூமி வானமெல்லாம் ஒரே ஒளிவாயிலங்கிவிட்டது. அப்பொழுது அக்கிழவி சர்வரே ஆலத்தைப் பார்த்து நான் உங்களை என் கண்ணாரக் கண்டதினாலே என்னுடைய வருத்தமெல்லாம் நீங்கிவிட்டதென்று சொன்னாள். அதற்குச் சர்வரே ஆலம் ஒ கிழவியே! நான் முகம்மதுநபி; நீ என்னுடைய தீனை விரும்பி ஒப்புக்கொண்டபடியால் உனக்கொரு பயமுமில்லை. இனிமேல் உன்னை மலக்குகளும் அசாப்புச்செய்ய மாட்டார்கள். இன்னம் நரகத்திலும் போடார்கள். இனிநீ கவி

மாவை ஓது. அப்படி ஓதாமல் போனல் உனக்கு அசாபுகள் கிடைக்குமென்று சொல்ல, உடனே அக்கிழவி கலிமா ஓதி யீமான் கொண்டாள். அப்பொழுது சர்வரே ஆலம் மலக்குகளைப் பார்த்து இனிமேல் நீங்களிவளை ஒன்றுஞ் செய்யவேண்டாம். இவளீமான் கொண்டாளென்று சொல்ல, அவர்கள் அசாபு செல்வதை விட்டு விட்டார்கள். பின்பு சர்வரே ஆலம் அக்கிழவியைப்பார்த்து என்னுடைய மருமகளாகிய சையித்தூன் இங்கேசிறையில் பிடிபட்டு இருக்கிறுள். இன்று நீ சீக்கிரமாய்ப்போய் முன்னமவர்களுக்கு என்னுடைய (சலாமைச்சொல்லி அதன்பின்பு நீ ஒன்றுக்கு மஞ்சாதே, உன்பேரில் அல்லா சுபுகானுத்த ஆலாவினுடைய காவல் பாடிருக்கிறதென்று அவர்களுக்குத் தயிரியஞ்சொல்லு. அதனுலுனக்கு அந்த ஆலா மிகுந்த ரஹமத்துஞ் செய்வானென்று சொல்லிப்போயினர். உடனே திடுக்கென்று கிழவி முழித்துக் கொண்டு நகமுகமுங் குனிந்துபார்க்கையில் ஒன்றுமிவள் கண்ணுக்குத் தோற்றவில்லை. ஆனல் அக்கிழவியின் வீடெல்லாம் கஸ்தூரிவாடை நிறைந்து போயிருந்தது. அதனுலக்கிழவிக்கு நிஜப்பாடாய் உடனே யெழுந்து சையிதூன்கிட்டே ஒடிவந்தாள். அப்போது சையித்தூன் அக்கிழவி வருவதைக்கண்டு கூட்டிவைக்கும் கள்ளி நம்மிடத்திற்கு வருகிறுளே யென்று அதிக விசனங்கொண்டிருக்கும் சமயத்தில் கிட்டேவந்து மிகுந்த அதபுடனே சலாம் சொல்லி, பின் சர்வரே ஆலம் சொன்ன சலாமத்தைச் சொல்லி, பின்பு தான் கண்ட கனவின் சங்கதிகளை ஒன்றுந்தவருமல் தான் தூங்கினதும் மலக்குகள் இழுத்துக்கொண்டுபோய் அசாபுச்செய்ததும் அங்கே நபிநாயகம் வந்ததும் தான் ஈமாம் கொண்டதும் சலாமத்து பெற்றதும் நபியுல்லா சலாம் சொன்னதும் தைரியமான சொற்கள் சொன்னதும் எல்லா முடிவுவரைக்கும் சொல்லி இனி உன்னை மீட்டிவிடுவது என்பேரில் கடனுச்சுதென்று சொன்னுள். அதை சையித்தூன்கேட்டு என்பேரில் அல்லா நல்லது செய்வானென்று சொன்னுள். அதைக்கேட்டுக்கிழவி அவ்விடம் விட்டெழுந்து உடனே கிழவி தன் வீட்டிற்குப்போய் கொல்லும்படியான நாவியை யெடுத்துறைத்து அடுப்பிலிருந்த பாலை யிறக்கி அதில் இந்த வசநாவியைக் கலந்து சர்க்கரையும்போட்டு ஒரு பாண்டத்திலிட்டு குடிக்கச்சொல்லி அரசன் கையிற்கொடுத்து இன்றிரவு உன்னுடன் சேரும்படி அவளைக் கூட்டிவைக்கிறேனென்று சந்தோஷமான சேதிகளும் சொல்லி அவளுமுன்னுடன் கூட சம்மதித்தாள். அவளுக்கு சம்மதிக்குமான உபாயங்கள்

செய்தேன்; குடியென்று சொல்ல, அந்த மடையன் அந்தப்பாலை வாங்கிக் குடித்தவுடனே விஷம் தலைக்கேறி செத்தான்.

அலங்காரக்கண்ணி

ஆசைகளெல்லாம்நாசமாய்போச்சுது அன்றுராசர்க்கு
மோகங்களெல்லாம்முடிவாய்போச்சுது முறட்டுராசர்க்கு
அரசன்செய்தவுடனேகிழவி அரசன்சேதிசொல்ல
ஓடியேவந்தாள்சைத்தூன்கிட்டே உற்றசேதிசொல்ல
அம்மாளுஅம்மணிகேளும் அடியாள்சொல்லுவதை
மாயமருந்தால்செத்தான்ராஜா வார்த்தைசொல்லாமல்
உன்றனைநாடியராஜனைக்கொன்றேன் உபாயமருந்தாலே
சந்தோஷமாகியிருநீயென்றாள் சஞ்சலமதனைப்போக்கி
அந்தவார்த்தையைக்காதிலேகேட்டு அப்போசையித்தூனு
கிழவியைப்பார்த்தொருசேதிசொன்னாள் கிளிமொழிசைத்தூனு
என்னுடஇடுப்பினிலிருக்குதுகத்தி எடுத்திடுஉன்கையால்
கையின்கட்டைஅறுத்துப்போடு நீகஷ்டங்களில்லாமல்
என்றசொல்லைக்காதிலேகேட்டு எழுந்துஅக்கிழவி
சூரியைவாங்கிஅறுத்தாள்கட்டை சீக்கிரமாய்க்கிழவி
சையித்தூன்சூரியைகையிலேவாங்கி தீவிரமாயப்போ [ள்
தன்னுடபாங்கிமார்கைகளின்கட்டை தானேஅறுத்துப்போட்டா
நாற்பதுபாங்கியைக்கூடவேகூட்டிறைல் நல்லசையித்தூன்
சீக்கிரமாகப்போனாள்ராசன் செத்தயிடத்தைத்தேடி
ராசன்தலையையறுத்துஎடுத்தாள் ராணிசையித்தூனு
கையில்தலையைத்தூக்கியேறினாள் குதிரைமேல்சையித்தூனு
தோப்பதைவிட்டுவெளியேவந்து சொன்னாள்சையித்தூனு
ராஜன்படையாயிருக்கும்பேடிகளே நான்சொல்லக்கேளும்
சிப்பாய்மார்களாயிருந்தால்நீங்கள் சண்டைக்குவாங்கள்
சேவகமார்களாயிருந்தால்நீங்கள் சண்டைக்குவாங்கள்
மீசைமுளைத்தபேர்களாயிருந்தால் முன்னேஓடிவாங்கள்
பேடிகளாயிருந்தால்நீங்கள் பேசாமலிருங்கள்
எந்தன்கையிலிருக்கிறதலையை எல்லோரும்பாரும்
உங்கள்ராஜன்தலையாயிருக்கும் உற்றுநீங்கள்பாரும்
கொடியராஜன் தலையையறுத்துக் கொண்டேன்சைத்தூனு
என்றவார்த்தையைக்கேட்டராஜன் எல்லாப்படையோரும்
அமளிகளாகிப்போச்சுஅப்போ அந்தத்தோப்புக்குள்ளே
தலையைசைத்தூன்அறுத்தாளென்று சத்தமாகிப்போச்சு
அரசன்மடிந்துபோனானென்று அழுகைமிகுதியாச்சு
அந்தச்சமயத்தில்மந்திரிமார்கள் அலறியெழுந்தார்கள்
ஏழுமந்திரிமார்களுங்கூடி என்னசெய்தார்கள்
இனிநாமிருந்து பலனுமில்லை இவளைவெட்டிப்போட்டால்

நம்முடையராஜனைவெட்டியபழியை நாம்யள்வாங்கவேணும்
சும்மாயிருந்தால்வீரியமல்ல சீக்கிரமாயின்று
நம்முடபடைகளைச்சேர்த்துவனைத்து நறுக்கவேணுமவனை
உடனேபடைகளைக்கூட்டினுரெல்லாம் உற்றசண்டைசெய்ய
கத்திப்படையும்சட்டிப்படையும் கணக்கில்லாமல்வந்தார்
தண்டாரிதமும்சக்கரமெடுத்து சமர்த்துமிகவேபேசி
பலபலஆயுதம்பூட்டினுரெல்லாம் படையுன்பெரும்வீரர்
குதிரையின்மேலேறினுரெல்லாம் பெரியகூட்டமாக
செந்தூள்பறக்கநடத்தினர்படையை திக்குத்தெரியாமல்
கருந்தூள்பறந்துபோச்சு நடக்கும் குதிரைகள்காலாலே
மேகமபோலேமூடிக்கொண்டது வெள்ளைமேகதூசி
நானுவிதமாமுழங்குதுசத்தம் நகரானநவுபத்து
கோடையிடிபோல்முழங்குதுசத்தம் குமுகுமுகுமுவென்று
வந்துவளைத்தார்காபர்படையோர் வல்லசையித்தூனை
அந்தப்படைகளைக்கண்ணுல்கண்டாள் ஆங்காரசையித்தூன்
பல்லைநெறநெறவென்றுகடித்தாள் பாவைசையித்தூன்
கண்கள்ரெண்டும்சிவந்துபோச்சுது கடுங்கோபமாச்சுது
கத்தியையுருவிகையிலேபிடித்தாள் கனத்தசைத்தூன்
குதிரையைக்காலினுலிடுக்கியேவிட்டாள் கோதைசையித்தூன்
கொக்குக்குலத்தினில்ராஜாளிப்போல் குதித்தாள்சையித்தூனு
ஆட்டுக்குலத்தினில்புலிபோனுற்போல் புகுந்தாள்சையித்தூனு
கத்தியைவிட்டாள்காபர்படைமேல் கைதான்கூசாமல்
மின்னல்போலமின்னுதுகத்தி முன்பின்தெரியாமல்
பளபளவென்னமின்னுதுகத்தி பட்டாகத்திகளும்
குப்பல்குப்பலாகவேகுவித்தாள் கொன்றசையித்தூனு
மலைபோல்வெட்டிகுவித்தாள் கொன்றசையித்தூனு
தயிரின்குடமபோல்மூளைகள்சிதற தலைகள்தானுதிர
வெட்டிவெட்டிகுவித்தாளங்கே வேங்கைசையித்தூனு
கூகூவென்றுசத்தங்களிட்டு கூடிமடிவாரும்
அம்மம்மாவென்றுசத்தங்களிட்டு அலறிமடிவாரும்
சாமியைநினைந்துசஞ்சலமிகுந்து தரைமேல்விழுவாரும்
இப்படிநானுவிதமாகப்படைகள் ஏங்கிப்போவாரும்
அந்தவேளையில்படைகள்முறிந்து அவள்முன்னெதிராமல்
ஓடியேபோனுர்வீரர்களெல்லாம் ஒருவருமில்லாமல்
சிதறியேபோனுர்வீரர்களெல்லாம் திசைதிசையாய்ப்பயந்து

வசனம்

இப்படைகளெல்லாம் சையித்தூனுடைய கத்திவெட்டுக்கு ஆற்ருமல் பயந்து ஓடிப்போனுர்கள். அப்பொழுது அந்த ஏழு மந்திரிகளும் கைகட்டி மிகுந்த அதபுடனே சையித்தூனுக்கு

முன்னமாக வந்து நின்று கிடுகலங்க, ஓ அரசியே! இனியெங்களை வெட்டாதே. எங்களைப் பாதுகாப்பது உன்னுடைய கடமை யென்றுசொல்லி வேண்டிக்கொண்டார்கள். அதைக்கேட்டு சையித்தூன் சண்டையை நிறுத்திவிட்டு மனமிரங்கி அந்த மந்திரிமார்களைப்பார்த்து நான் சொல்லும்படி நீங்கள் கேட்பீர்களாகில் உங்களுயிருக்கொரு சேதமுமில்லை. இல்லாவிடில் நரகம் போய்ச்சேருவீர்களென்றுசொல்ல, அதை மந்திரிமார்கள்கேட்டு, அதென்ன உத்திரவு சொல்லென்று கேட்டார்கள். அதற்கு சையித்தூன் நீங்கள் கழுத்திலிட்டிருக்கின்ற பூணுனூலை அறுத்துப்போட்டு உங்கள் வீடுகளிலிருக்கிற புத்துகளை யெல்லாம் உடைத்துப்போட்டு நீங்களெல்லாம் கலிமாஓதி ஈமான் கொண்டு இங்கே ஒரு பள்ளிவொன்று கட்டி வணக்கஞ்செய்து வருவீர்களாகில் சொற்கலோகங் கிடைக்குமென்றுசொல்ல, அதை மந்திரிமார்கள்கேட்டு அதேபடிச்செய்து கலிமாஓதி ஈமான்கொண்டு அப்பொழுது சையித்தூன் அதிக சந்தோஷத்தோடு அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு நாம் மதினத்தையும் அவ்வூராரையும் அவர் வீட்டையும் முன்பின் அறியோமேவென்று கலக்கத்தோடு ஆயாசங்கொண்டு அவ்விடத்தைவிட்டு தன் பாங்கிமாருடன் வெளிப்பட்டார்கள்.

முகம்மதனிபு செண்டேலராஜனைக் காணுதல்

முன்னால் முகம்மது அனிபு சையித்தூனையும்கூட பாங்கிப் பெண்களையும் கைகளைக்கட்டித் தாயார் வசம்பண்ணி நீங்கள் மதீனத்திற்குப்போங்கள். நான் இறமெனும் பட்டணம்போய் வருகிறேனென்று சொல்லி அனுப்பிவைத்துவிட்டு வருகிறபாதையில் அங்கோர் தோப்பு எதிர்பட்டது. அத்தோப்பு எப்படி செழித்திருந்ததெனில் உயர்ந்த மரங்களும் தளதளப்பான இலைகளும் மணமுள்ளமலர்களும் காய்களும் பலபல நாணுவிதமான முள்ளங்கனிகளும் விதவிதமாகிய உருசைகளும் அழகாயிருந்தது. அத்தோப்பும் செண்டேலஷதெனும் அரசனுடைய சோலை. அதனுள் 12000 படைவீரர்களை வைத்திருந்தான். அந்தத் தோப்புனுள் முகம்மது அனிபுப்புகுந்து அம்மரங்களையும் பூங்காய் கனிகளையும் கண்டு, அதிக சந்தோஷத்துடன் அதிலிருந்து சில கனிகளை யறுத்துப் பொசித்தார். அதை அந்தத் தோப்பிற்குக் காவலாயிருந்த காவற்காரன் கண்டு மிகுந்த அச்சத்தோடு ஓடோடியும் போய் செண்டேலஷாவெனு மரசனுடன் அறபுதேசத்தரசன் ஒரு அறமியும் அவ

தோப்பினுள் யாதொரு அச்சமின்றி வந்து புகுந்து நாகமும் உலாவி கனிகளை அறுத்துத்தின்று ஒரு மரத்தடியில் படுத்து நித்திரை செய்கிறார்களென்று வந்து சொன்னான். அச்சேதியைக் கேட்டு உடனே செண்டுலபாஷா தன்னுடைய 12000-படை வீரர்களை ஆயுதங்கள் பூட்டிக்கொள்ளச்சொல்லி அப்படைகளைப் பார்த்து, நீங்கள் தோப்பைப்போய் வளைந்து அவர்களைப் பிடித்துக்கொள்ளுங்களென்று கட்டளையிட்டான். அப்படியே அவன் படைகளெல்லாம் தோப்பைச்சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அந்நேரவேளையிலே முகம்மது அனிபாவைப் பார்க்கவேணுமென்று வெகுநாளாகக் கரியாபரி யென்பது மனதில் மிகுந்த பிரியத்தோடு ஆசைவைத்துக்கொண்டிருந்தது. அந்தப்பரி அன்றையதினம் அங்கே வந்து பார்க்கையில் முகம்மது அனிபா நித்திரை செய்துக்கொண்டிருக்கக்கண்டு சுற்றிப் படைகள் வளைந்துக்கொண்டிருப்பதையும் பார்த்து, ஓஹோ! இவர் ஒன்றுந்தெரியாமல் அசந்து நித்திரைசெய்கிறாரே; பகைவர்கள்வந்து வளைத்துக்கொண்டிருப்பதும் தெரியவில்லை. இதனால் இவருக்கு மோசம்வந்து சேரிடுவதாயிருக்கிறதென்றெண்ணி, ஓ இமாமே! நீங்களசந்து நித்திரை செய்கிறீர். உம்மைப் பிடிப்பதற்காகவேண்டி செண்டுலபாஷாவுடைய படைகள்வந்து வளைந்துகொண்டிருக்கிறார். நீங்கள் நித்திரையைவிட்டு சீக்கிரமாய் எழுந்திருமென்று சத்தமிட்டெழுப்பினது. அப்பொழுது முகம்மதனிபா அந்தச் சத்தத்தைக் கேட்டு திடுக்கென்று கண்திறந்து பார்க்கும்போது, சுற்றிலும் ஆயுதமுஸ்தீபுடன் படைகள் வந்து சுற்றி வளைந்திருக்கக்கண்டு, ஹாஹா! நம்மை யெழுப்பினது யாரோ? அல்லது மலக்கோவென்று எண்ணுங்காலையில் அப்பொழுது கரியாபரியானது நான்தான் உன்னை யெழுப்பினேன். என் பெயர் கரியாபாரியென்று சொல்லிப் போயினது.

அலங்காரக்கண்ணி

அந்தவேளையிலெழுந்தார்முகம்மது அனிபாவம்சீறி
கண்களிரண்டுசிவந்துபோச்சுது முகம்மது அனிபாவுக்கு
மீசைபடபடவென்றுதுடிக்குது முகம்மது அனிபாவுக்கும்
பல்லைநறநறவென்றுகடித்தார் முகம்மது அனிபாவும்
ஆங்காரங்கொண்டுகுதிரைமேலேறினார் முகம்மது அனிபாவும்
ஆயுதமெல்லாம்பூட்டியெழுந்தார் முகம்மது அனிபாவும்
ஆரபாரத்தோடுவெளியிலேவந்தார் முகம்மது அனிபாவும்

பன்னீராயிரம்குதிரையைக்கண்டார் முகம்மது அனிபாவும்
பார்த்தவுடனேகோபமூண்டது முகம்மது அனிபாவுக்கு
கத்தியின்மேலேகாடினர்வெட்ட கனத்தகோபமாக
அந்தவேளையில்என்னசெய்தான் செண்டுலராஜாவும்
படைகளையெல்லாமொன்றாகக்கூட்டினன் செண்டுலராஜாவும்
பத்திரம்பத்திரமாக இருங்கள் பாராக்காவலாக
என்றசொல்லைகேட்டாரந்த எல்லாப்படையோரும்
அந்தவேளையிலென்னசொல்கிறான் செண்டுலராஜாவும்
சேவகமார்களேஎந்தன்சொல்லைச் சீக்டனேகேளும்
சிப்பாய்மார்களேஎந்தன்சொல்லைச் சிந்தாமல்கேளும்
வெட்டவும்வாணுங்குத்தவும்வாணும் வீரியவல்லவரே
கைப்பிடியாய்ப்பிடித்துக்கொள்ளுங்கள் காவல்வீரியரே
என்றசொல்லைக்காதிலேகேட்டு அதிலொருவீரஜட்டி
தண்டாயுதத்தைக்கையிலேபிடித்து சாமர்த்தியம்பேசி
முகம்மது அனிபாமுன்னல்போனன் முரட்டுவீரசூரன்
வல்லமைகாட்டிப்பிடித்திடப்போனன் முகம்மது அனிபாவை
புலிமுன் ஆடுபோல்போனன்வீரன் பெரியசண்டைசெய்ய
அந்தவேளையில்முகம்மது அனிபா ஆங்காரங்கொண்டார்
ஒருவர்க்கொருவர்வல்லமைபேசி உருவினர்கள்கத்தி
பாவிஅடித்தான்தண்டாயுதத்தால் பாரயிடிபோலே
முகம்மது அனிபாதாங்கினர்டாலால் முரடன்தன்வெட்டை
வெட்டினர்முகம்மது அனிபா அவனை மின்னலிடிபோலே
குதிரையுமவனுமிரண்டுதுண்டாய்க் கீழேவிழுந்துசெத்தான்
இன்னுமொருத்தன்வந்துமடிந்தான் பெரியவெட்டாலே
இப்படியாகமடிந்தார்வீரர் யெண்ணிக்கையில்லாமல்
ஆறுயோடிபோச்சுதுரத்தம் அங்கேயிடமின்றி
கும்பல்குப்பலாகக்குவிந்துபிணங்கள் குவிந்துபோச்சுதங்கே
படைகள்வீணுமடிந்ததைக்கண்டான் செண்டுலராசாவும்
பட்டாவுருவிகையிலேபிடித்தான் செண்டுலராசாவும்
முகம்மது அனிபாமுன்னல்வந்து மொழிந்தானிடிபோல
ஏழைமனிதனே என்னுடையபடைகளை என்னயேலேசெய்தாய்
பஞ்சமனிதனே என்னுடையபடைகளை பாழ்படுத்திப்போட்டாய்
ஆனலாகட்டுமறிவேன்வல்லமை அடா அடிமைபைய்யா
என்றுசொல்லிஅடித்தானேங்கி எடுத்துதண்டத்தாலே
அடித்தஅடியைத்தாங்கினர்டாலில் முகம்மது அனிபாவும்
இடுப்பில்கையைக்கொடுத்துத்தூக்கினர் செண்டுலோசாவை

வசனம்

தலைமேலவனைத் தூக்கிக்கொண்டு, ஓ, காபரானவனே! நீ சீக்கிரமாக ஒப்புக்கொண்டு, கலிமா ஓதி ஈமான்கொள்வாயாகில் உன்

னைப் பூமிமேல் வாரியடிக்காமல் உயிரோடுவிட்டுவிடுவேன். நீ கலிமா ஓதாமல் போனால் இப்படியே பூமிமேல் அடித்துவிடுவே னென்று சொன்னார். அந்தச்சொல்லை செண்டேலராஜா கேட்டு பயந்து, உடனே கலிமாஓதி யீமான்கொண்டான். பின்பு முகம் மது அனிபாவைப் பார்த்து நீயார்? உன் பெயரென்னரீ நீயெங்கே போகிறாய்? இதுகளை எனக்குத் தெரியும்படிச் சொல்லென் ” கேட்டான். அதற்கு என்பெயர் முகம்மது அனிபு. நான் இரமெனும் பட்டணம்போய் அவர்களுடன் சண்டைசெய்து இசுலாமாக்கப்போகிறேன். என்னூர் பேர் மதீனமென்று சொன் னார். அதற்கு செடுேல்ஷாகூட நானும் வந்து சண்டைசெய்து உன் னுயிரை மடித்துவிடுவேனென்று சொல்ல, அதற்கு முகம்மது அனிபு ஒ செண்டேலஷாவே ஒருவரையுங் கூட்டிக்கொண்டு போகாமல் தனியாக நான் மாத்திரம்போய் வெற்றிபெற்று வர வேணும். நீயத்துச்செய்துக்கொண்டிருக்கிறாய் ஆகையால் நீ கூட வரவேண்டாமென்று அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு இறமெனும் பட்டணத்தின் பாதையின் புறமாக முன்னோக்கித் தன் முலாமும் பின்னால் வரும்படியாகச் சிலதூரம் நடந்துபோனார். அப்படி நடந்துபோகும்போது (கூரியாபரி) வந்து, ஒ பாதுஷாவே! தாங்கள் போகிறபாதையில் இன்னம் சிலதூரத்தில் அங்கோரிடத்தில் அக்கா தங்கச்சியென்று இரண்டு பேரிருக்கிறார்கள். அவர்களிரண்டுபேரும் அதிககெட்டிக்காரிகள், வல்லமையுடையவர்கள், தாங்களிரம்ப எச்சரிக்கையுடன் போக வேண்டியதென்று கூப்பிட்டுச் சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்டு முகம்மது அனிபு பின்னால் திருமபிப்பார்க்கையில் ஒரு வரையுங் காணவில்லை. அதனால் திகைத்துநின்று ஒருவரையுங் காணோம். இப்படி நமக்குச் சொன்னவர்களியாரென்று புதுமைப் பட்டு அல்விடம்விட்டு பின்னு முன்னோக்கி நடக்கும்போது, அங் கோர் மரத்தடியின்கீழ் ஒருபெண் குந்திக்கொண்டு அவ்வழியாக வருகிற பாட்டைசாரிகளைப் பிடித்து அவர்களுடமைகளை அப கரித்துக்கொண்டு அவர்களையும் கொல்லாமல் உயிரோடுவிடுகிற தில்லை. அதனாலவ்வழியாக ஒருவரும் போகிறதில்லை தப்பிப் போனால் பின்னுமவர்கள் மீண்டு வருகிறதில்லை. அன்று அந்த வழியாக முகம்மதனிபு போயினார். அவர் வருவதைக்கண்டு அதி லொருத்தி இன்று நமக்குக் கொழுத்த வேட்டை அகப்பட்ட தென்றெண்ணி ஆரபாரத்தோடு ஈட்டியைக் கையிற்பிடித்துக் கொண்டு குதிரையை முகம்மதனிபாவின் முன்னாகவிட்டு ஓடிவந் தாள். அவள் வருவதை முகம்மதனிபுகண்டு நிற்கையில் கிட்டே

வந்து, ஓ சிப்பாயே! உனனுடைய கத்தியையும் கேடகத்தையும் என்கையிற் கொடுத்துவிடு. இல்லாவிடில் இதோபார். என் கையி லிருக்கிற ஈட்டியா லுன்னைக் குத்திக்கொல்வேனென்று சொன் னாள். அவள் சொல்லை முகம்மதனிபு கேட்டு புன்னகைகொண்டு, ஓ பெண்ணே! நீ பெண்ணாய்ப் பிறந்தவளாயிருந்து ஆண்வேடம பூண்டு ஆயுதங்களைப் பூட்டிக்கொண்டு ஆணாய்ப்பிறந்தவர்க ளுடன் எதிர்ப்பது உனக்குத தகுதியல்ல. உனனுடைய வேலை என்னவென்னில், சமையல் செய்யவும் நூல் நூற்பதும் வீட்டை விட்டு வெளியே வராமலிருப்பதுமாம். அப்படியிருக்க நீ என்னை வந்து மிரட்டுவதைப் பார்த்தால மெத்த ஆச்சரியமாயிருக்கிற தென்று சொன்னார். அச்சொல்லை அவள் கேட்டு, ஓ சிப்பாய்! நீ என்னை பெண்ணென் றெப்படி யறிந்தாயென்று கேட்டாள். அதற்கு முகம்மதனிபு நீ குதிரை ஓடவிட்டுக்கொண்டு வரும போது உன்னுடைய மார்மேலிருக்கும இரண்டு கொங்கைகளு மசையக்கண்டேன். இன்னம் குதிரையின அங்குபடியில கால்க ளிரண்டும் அதிரக்கண்டேன். இதனாலுன்னை நான பெண்ணென றறிந்துகொண்டேனென்று சொன்னா. அதை அவள் கேட்டு நான் பெண்ணாயிருந்தும உன்னைப்போலொதத வீரர்களை என கையால் அம்சகம்போகளை மாளவுஞ் செய்திருக்கிறேன். வெற்றி யும பெற்றிருக்கிறேன. ஆகையாலுன னுயிரைத் தப்பிததுக்கொள ளென்றுசொல்லித தன் கையிலிருந்த யீட்டியினால் ஓங்கிக் குத்தி னாள். அப்பொழுது முகமமதனிபு அந்த யீட்டிக் குததைத தன கையாற பிடிததுக்கொண்டு அவளுடைய யிடுப்பில தன கையை விட்டு அவளை மேலுக்குத தூககிக்கொணடு தன்னுடைய குலா மைக் கூப்பிட்டு, இநதா யிவளைப்பிடித்து இன்ன மிவளுடைய இரண்டுகைகளையும உறமாகக கட்டிவிடுமவனறு அநதக குலா முடையவசம் கொடுததுவிட்டார். அப்படியே குலாம் அவ ளிரண்டு கைகளையுங கட்டிப் பததிரப்படுததினான. அப்பொழுது இவளுடைய அக்காள் கண்டு அதிக கோபததோடு ஈட்டியையக கையிற பிடித்துக காறறின விசையாகக் குதிரையைவிட்டுமுகமம தனிபாவின் முனனாகவந்து நானாவித பாஷைகள் கூறி அவளுங குத்தினாள். அதையும கையாறபிடிதது முன்போல அவளிடுப்பில கையையிட்டு மேலுக்குத தூக்கி குலாமின வசமொப்புவிதது இவளையும கைகளைச கட்டிவை என்று சொல்லி இரண்டுபேரை யும் சிறைபிடிததுக்கொணடு அவாகளுடைய பட்டணததுக்குப புகுந்தா. அப்பொழுது பட்டணததிலுள்ள குடிகளெல்லாம

இவர்களைப்பிடித்துக் கட்டிக்கொண்டு வந்ததைக்கண்டு அதிகசந்தோஷத்தோடு முகம்மதனிபாவின் முன்பில்வந்து, ஓ பாதஷாவே! எங்களுக்கு உதவியாக வந்தவரேயென்று மிகவும் புகழ்ந்து எல்லாருமிவர்பேரில் இரம்பமுகப்பத்தாய், ஓ பாதஷாவே! எங்களுடைய விண்ணப்பத்தை தாங்கள் செவிகொடுத்து கேட்கவேணுமென்று கெஞ்சிச் சொல்லினர். அதென்னவெனில் ஓ பாதஷாவே! இந்த இரண்டு நீலிகளுடைய தகப்பன் மிகவும் நன்றியுள்ளவர். அவருக்கு மூத்தப்பிள்ளை ஆணென்றும் இளையபெண் இவ்விரண்டுபேரும் பிறந்தார்கள். அப்பொழுது அவ்வரசன் இறந்துபோனர். அப்பொழுது இவ்விரண்டுபேரும் அண்ணனைச் சிறையில் அடைத்துவிட்டு தாங்கள் ராஜாவாக அரசாண்டு குடிகளை மிகுந்த அனியாயம்செய்து எல்லாரையும் ஒட்டிவிட்டு எங்களை மிகுந்த வருத்தத்தில் வைத்திருக்கிறுள். இவள் செய்யுமான அனியாயங்களைப் பொறுக்க எங்களால் எவ்வளவும் முடியவில்லை என்று சொன்னர்.

முகம்மது அனிபு இம்ருனை மீட்குதல்

அப்பொழுது முகம்மது அனிபு அக்குடிகளைப் பார்த்து இம்ருனை எவ்விடத்தில் சிறையில் வைத்திருக்கிறது? அவ்விடத்தை எனக்குக் காட்டுங்களென்றுர். அப்பொழுது குடிகள் முகம்மதனிபைப் பார்த்து, ஓ பாதஷாவே! அந்த இம்ருனுக்கு ஒரு நாளொன்றிற்கு இரண்டு ரொட்டியும் ஓர் கூசாத் தண்ணீருங் கொடுத்து அதிக இக்கட்டாகிய சிறையில் அடைத்துவிட்டார்களென்று சொல்ல, அதைக்கேட்டு முகம்மதனிபு இம்ருனை அடைத்திருக்கு மிடத்திற்குப்போய் இமருனே நீ என்னசெய்கிறுய்? எனனமாயிருக்கிறுய்? உன்னுடைய சங்கதிகளைக் சொல்லென்றுகேட்க, அப்பொழுது இமருன் அந்தச் சத்தத்தைக் கேட்டு இவ்வளவு இரக்கமுடன் என்னைவந்து விசாரிக்கிறீரே. நீர் யார்? இவ்விடம்வந்து என்னுடைய முசியத்தின் சங்கதிகளையும் வருத்தங்களையும் கேட்பதினுல் உமமுடைய நாமத்தைச் சொல்லுமென்று கேட்டான். அப்பொழுது உன்னைச் சிறைமீட்கவந்தேன். என்பெயர் முகமமதனிபு. உன்னுடைய உடற்பிறந்த அக்காமார்களைப் பிடிததுக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். நீ ஒன்றுக்கும விசனப்படாதே என்றுசொல்ல, அதற்கு இம்ருன் ஓ பாதஷாவே! என்னைக் கட்டிக் கிணற்றிற்குள் அடைத்து வைத்திருக்கிறுளென்றுசொல்ல, அபபொழுது முகம்மதனிபு அதிக வல்லமைசெய்து இம்ருனை அக்கிணற்றின் சிறையை

விட்டு வெளியாக்கினார். அதனால் இம்ரூன் பட்டவருத்தங்களை எல்லாம் தொலைத்து அதிக சந்தோஷமாயினான். அப்பொழுது முகம்மதனிபு இம்ரூனைப் பார்த்து, நீ கலிமா ஓதென்றுசொல்ல, உடனே ஆசையோடு கலிமாஓதி ஈமான்கொண்டு இசுலாமாகினார். பின்பு முகம்மதனிபு இம்ரூனைப் பார்த்து உன்னுடைய உடற் பிறந்த அக்காமாரை நீ என்னசெய்யச் சொல்லுகிறாயோ அதேப் படி செய்துவிடுகிறேன். உன்னுடைய நாட்ட மெப்படி யிருக்கிற தென்றுகேட்க, அதற்கு இம்ரூன் ஒபாதுஷாவே! அவர்களிரண்டு பேரும் மிகுந்த அனியாயக்காரிகள்; ஒன்றுக்குமஞ்சாத பாதகி கள். ஆகையால் அவர்களிரண்டுபேரையும் கொல்ல நாடுகிறே னென்று சொன்னார். அதை முகம்மதனிபு கேட்டு உடனே அந்த இரண்டு பெண்களையும் கொண்டுவரச்சொல்லி யிருக்கப்பட்டவர் களுக்கெல்லாம் பயமாகும்படி இரண்டுபேரையும் நிறுத்தி சுவர் வைக்கச்சொல்லி அப்பால்பேரட்டுக் கொல்லும்படி உத்திரவு கொடுத்தார். அதேப்படி அவர்களிரண்டுபேரையும் நிறுத்தி சுவாவைத்து அம்பினால்போட்டுக் கொன்றுபோட்டார்கள். அந்த இரண்டு பெண்களும் செத்து நரகத்திற்கு இரையாய்ப்போனார் கள். பின்பு இம்ரூனைப் பட்டத்தில் உட்கார்த்திவைத்துவிட்டு இனிமேல் நீ சுகமாக உன்னுயிருள்ள காலமட்டும் யாதொரு அச்சமின்றி அரசாண்டுகொண்டிரும். நான் வந்தவேலையை நாடிப் போகிறேனென்று சொல்ல, அப்பொழுது இம்ரூன் பாதஷா மிகுந்த வணக்கத்துடனே எழுந்து நின்று கைகட்டி அதபாக, ஒ பாதஷாவே! எனக்கு இன்னமொரு பயமிருக்கிறது அதையுஞ் சொல்லுகிறேன். தாங்கள் காதுகொடுத்துக் கேட்டு என்பேரில் கிருபைசெய்து நீக்கிவிட்டுப் போவீர்களாகில் யாதொரு பயமு மில்லை. இல்லாவிடில் என்னுடைய அரசு நிலைக்கமாட்டாதென்று செரல்ல, அப்பொழுது முகம்மதனிபு இம்ரூன் பாதஷாவின் முகத்தைப்பார்த்து நீ யாதொரு அச்சமின்றி அரசாண்டுகொண டிருவென்றுசொல்ல, அப்பொழுது இப்ரூன் எழுந்து நின்று, ஒ பாதஷாவே! என்னை அச்சமின்றி அரசாளும்படி உத்திரவு தந் தீர்கள். ஆனாலும் என்னுடற்பிறந்தாளாகிய இரண்டு பெண்க ளிருக்கிறார்கள். அவர்களிருக்குந்தனிலும் அபாயமே யொழிய எனக்கொரு செழிப்புமிராது. அவ்விரண்டு பெண்களையும் உயி ரோடு கொன்றுபோடுவீர்களாகில் நான் பயமற்றுச் செங்கோல் செலுத்துவேனென்றுசொல்ல, உடனே அவ்விரண்டு பெண்களை யும் பிடித்துச் சித்திரவதை செய்துவிட்டு நான் வந்த வேலையைக்.

குறிக்துப் போகிறேன். இனி என்ன வேண்டுமென்று கேட்க, அதற்கு இம்ரூன், ஓ பாதஷாவே! என் தகப்பனுக்கு 7-மந்திரி மார்க ளிருந்தார்கள். அவர்கள் என் தகப்பனிறந்த பின்பு என்னை மோசஞ்செய்து என்தகப்பனுடைய 7-கோட்டைகளையும் 7-மந்திரிமார்களும் ஒவ்வொருவர் ஒவ்வொரு கோட்டை பிடித்துக் கொண்டு தங்கள் கைவசமாகச்செய்து ஆண்டுக்கொண்டிருக்கிறார்கள். 7-பேரும் ஒருமித்துக்கூடி என்னுடன் சண்டை செய்வார்களென்று அதிக பயமிருக்கிறது. ஆகையா லவர்களையும் வெட்டி அக்கோட்டைகளை என் கைவசமாக்கிப் போவீர்களாகில் எனக்கொரு அச்சமுமில்லை. இல்லாவிடில் என்னை உயிரோடு வைக்கார்களென்று சொல்ல, உடனே முகம்மதனிபு இம்ரூனைப் பார்த்து உன்னுடைய தண்டுகளையெல்லாம் சேகரஞ்செய்யென்று சொல்ல, உடனே சண்டைக்குப்போகத் தயாராகி நின்றார்கள். அப்பொழுது முகமதனிபு தன்குதிரைமேலேறி ஆரபாரத்துடனே இம்ரானும் அவருடைய படையாகக்கூடி நகரைவிட்டு வெளிப்பட்டு நடந்துபோனார்கள். அந்த விசயத்தை மந்திரிமார்களுங் கேட்டு தங்கள் தங்கள் படைகளெல்லா மொன்றாகச் சேர்த்து ஓரிடத்தில் கூடியிருந்தார்.

அலங்காரக்கண்ணி

படைகளெல்லாம்கூட்டமாய் வந்ததைப்பார்த்துராஜர்சிங்கம்
கலகலவென்றுசிரித்தாரப்பா கனத்தராஜர்சிங்கம்
அந்தவேளையிலென்னசெய்தார் அந்தப்படையோர்கள்
மேகம்போலேசுற்றிவளைந்தார் வெள்ளமிகச்சேனை
கத்திகளாலும்ஈட்டிகளாலும் கனத்ததண்டத்தாலும்
அம்பினாலும்போட்டாரென்று அஞ்சுதலில்லாமல்
அந்தவேளையிலென்னசெய்தார் முகம்மதனிபாவும்
பல்லைநெறநெறவென்றுகடித்தார் பாரசிங்குராசர்
கத்தியுருவிகையிற்பிடித்தார் கடுங்கோபங்கொண்டு
மீசைபடபடவென்றுதுடிக்குது முகம்மதனிபாவுக்கு
குதிரைவிட்டோர்படைக்குள்ளாக முகம்மதனிபாவும்
குப்பல்குப்பலாகக்குவித்தார் கொடியசூரர்களை
ஆறாயோடிப்போச்சுதுரத்தம் அவனிதெரியாமல்
துண்டுதுண்டாயுடல்களறுந்து துடித்துவிழுவாரும்
ட்டுமரங்கள்போலவுடல்கள் கணக்கில்லாமல்மிதக்க

மலைபோலசவங்கள்குவிந்துபோச்சுது மன்னர்வெட்டாலே
பயந்துபோனூர்மந்திரிமார்கள் படைகள்மாண்டுபோக
என்னசெய்வோமினிமேலென்று எண்ணமிகவானூர்
சஞ்சலம்பெருகிமந்திரிமார்கள் தாழ்ந்துபோனூரப்போ

வசனம்

அப்பொழுது மூகம்மதனிபு சிறுவிளையாட்டு விளையாடி, அப் படைகளையெல்லாம் பின்னிட்டோடும்படி வெட்டி 7-மந்திரிமார் களையும் கைப்பிடியாகப் பிடித்து எதிரில் நிற்கச்செய்து, நீங்கள் இப்போது கலிமாஒதி ஈமான் கொண்டால் உங்களுயிர்கள் தப்பி நீங்கள் இன்னம் சிலகாலம் வாழ்ந்திருப்பீர்கள். இல்லாவிடில் உங்க ளுயிரையிழந்து நரகம்போய்ச் சேருவதுமின்றி உங்கள் பெண் சாதி பிள்ளைகளும் கைசேதப்பட்டு விசனமடைவார்களென்று சொல்ல, அதை மந்திரிமார்கள் கேட்டு, உடனே கலிமாஒதி ஈமான் கொண்டு இசுலாமாகினூர்கள். பின்பு அந்த மந்திரிமார்களைப் பார்த்து, இன்றோடு நீங்கள் இம்றூன் சொல்லும்படியான சொற் களைக்கேட்டு. அவர் கைக்குள் எடங்கி ஒடுங்கி அடிபணிந்து அன் பாசாரமோடு நடக்கவேண்டியதென்று கட்டளையிட்டு. அவர்க ளிடத்தில் தான்போக வந்தவையை நினைத்து இனி நீங்கவெல்லாம் சுகமாயிருங்கள்; நான் போகிறேனென்றுசொல்ல, அதற்கு இம்றூ னும் நானும் தங்களுடன் வருகிறேனென்று சென்னூர். அதற்கு மூகம்மதனிபு நீ வரவேண்டாமென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு அவ்விடம்விட்டு இறமெனும் பட்டணத்தை நாடி முன் னேக்கி நடந்து வந்தார். அப்பொழுது இறமின் பாதுஷா தன்னு டைய 17-லட்சம் படையெடுத்துக் காட்டுக்கு வெளியே இரண்டு கோயில் ஒரு பெரிய மைதானத்திலெடுத்துப்போட்டு நகமுகமுங் கூடாரங்களடித்து இறங்கி யிருந்தார்கள். அப்பொழுது மூகம் மதனிபு அங்குசென்று அப்படைகளையெல்லாந் தன் கண்ணூற் கண்டு விசனங்கொண்டு, பின்ப தன்னுடைய, தைரியத்தினுல் அவ்விசனத்தை நீக்கி நாம் வருகிற சேதியை இவர்களுக்கு முன் னடியாக யார் தெரிவித்திருப்பார்கள்? இவர்கள் நாம் வருகிற சேதியை அறிந்து சண்டைக்குத் தாயராயிருக் கிறூர்களென் றெண்ணி அங்கு ஓர் மேடையொன்றிருந்தது அதன் மேலேறி நின்று அப்பொழுது மூகம்மதனிபு கலிமாவோதி ஒரு சத்த மிட்டார். அந்தச்சத்தம் அப்படையோர்கள் காதுமுழுதிலும் கோடையிடியின் சத்தம்போல் விழுந்தது. அதனுல் அப்படைக ளெல்லாம் பெரிய கலக்கமாய்ப் போனூர்கள். இன்னம் அந்த

சத்தத்தால் கற்புள்ள பெண்களுடைய சூலெல்லாம் விழுந்து போயின. அப்பொழுது இந்தச் சத்தத்தையும் இச்சேதியையும் இறமின் அரசன் கேட்டு, தன்னுடைய மந்திரிமார்களை யழைத்து இப்படி வல்லமையாகிய சத்தம் யாருடைய சத்தம்? இதை இன்னாருடைய சத்தமென்று எனக்குத் தெரியப்படுத்துங்க ளென்று கேட்க, அதற்கு மந்திரிமார்கள் ஆலோசனைசெய்து இந்தச் சத்தமானது மூகம்மதனிபாவுடைய சத்தமென்றார்கள். அதை அரசன் கேட்டு, முன்னால் சைத்தூள் கொன்றுபோட்டே னென்று சொன்னாளே; அவனெவ்விதத்திலே இன்னம் பிழைத் திருக்கிறானென்று கேட்க, அதற்கு மந்திரிமார்கள் அவள் சொன்னபேச்சு பொய். அவனிப்போது உன்னுடனே சண்டை செய்ய வந்திருக்கிறான். அவன் உனக்குத் தெரியும்படியாக இட்ட சத்தமென்று சொன்னார்கள். அதை அரசன்கேட்டு உடனே மந்திரிகளைப்பார்த்து நம்முடைய சேனைகளையெல்லாம் சீக்கிரமாய் வரும்படியாகக் கட்டளை யிடுங்களென்றுசொன்னான். அச்சொல்லைக் கேட்டவுடனே படைகளைக் கூட்டிப் பேரிகை யடித்தார்கள்.

அலங்காரக் கண்ணி.

பேரிகையடித்தார் சண்டைக்குப்போகப் புறப்பட்டுவாங்கள்
கத்திகட்டாரிபூட்டியேயெல்லாம் கடுகஓடிவாங்கள்
ஈட்டியம்புகள் தன்னைப்பூட்டி எல்லாரும்வாங்கள்
தண்டம்சக்கரம் தன்னையெடுத்து சஹுதியாய்வாங்கள்
நம்முடபகைவன்வந்தானென்று நகரா அடித்தார்கள்
இந்தச்சத்தங்காதிலேகேட்டு அப்போபடைவீரர்
ஆயுதமெல்லாம்பூட்டியெழுந்தார் ஆங்காரங்கொண்டு
கோட்டைக்குள்ளேவந்துபுகுந்தார் கொடியசிங்கம்போலே
படைகள்வந்ததைராஜன்கண்டு பூரித்தானப்போ
சந்தோஷமானனராஜன்மெத்த தைரியந்தான்கொண்டு
ஆயுதமெல்லாம்பூட்டியெழுந்தான் ஆங்காரமிகவாகி
கண்கள்சிவந்துபோச்சுதப்போ ராஜாவுக்நானும்
படைகளைக்கூட்டிவெளியினில்வந்தான் பெரியசிங்கம்போலே
குமுகுமுவென்றுகுமுருதேநகரா கோடையிடிபோலே
தடதடவென்றுநடக்குதுகுதிரைகள் தாங்கள்நடனமாடி
மினுமினுவென்றுகத்திகள்மின்னிட வெள்ளப்படைகூடி
வந்துநிறைந்தார்இடமில்லாமல் மயிதான்முன்னாக
அணியணியாகநின்றாரெல்லாம் ஆங்காரங்கொண்டு
நானாவிதமாய்ப்பந்தயஞ்சொன்னார் நரிமுன்கோழியைப்போல்
படைகள்வந்ததைக்கண்ணில்கண்டார் மூகம்மதனிபாவும்

சண்களிரண்டும்சிவந்தது அப்போ முகம்மதனிபாவுக்கு
பல்லேநெறநெறவென்றுகடித்தார் முகம்மதனிபாவும்
மீசைபடபடவென்றுதுடிக்குது முகம்மதனிபாவுக்கு
குலாமைப்பார்த்துகுதிரையையிங்கே கொண்டுவாவென்றூர்
சீக்கிரமாகவேகுதிரையையிங்கே கொண்டுவாவென்றூர்
அந்தச்சொல்லைக்கா திலேகேட்டு அந்நோவேளையிலே
சீக்கிரமாகவேசீனியைக்கட்டி தீனின்புலிமுன்னே
குதிரையைநிறுத்தினன்முகம்மது அனிபு கோபமிகவாங்க
குதிரையின்மேலேயேறினரப்போ கொடியசிங்கம்போல்
குதிரைக்குசிமிட்டார்கொடுத்தார்பறக்க காலின்முள்ளாலே
கொக்குகுலத்தினில்ராஜாளிபோல் குதித்தார்படைக்குள்ளே
ஆட்டுக்குலத்தில்புலிபோல்புகுந்தார் ஆண்சிங்கராஜர்
கத்தியைக்கையில்வாங்கினரப்போ கடுங்கோபமூண்டு
துண்டுதுண்டாய்க்கீழேவிழுந்திட சூறையாடிவந்தார்
கண்டகண்டமாய்க்குப்பலாய்மடிய காற்றாய்ப்பறந்துவந்தார்
செண்டுகள்போலேதலைகள்பறந்திடச் சிதறவெட்டிவந்தார்
தயிரின்குடம்போல்மூளைகள்சிதறிடத் தாண்டிவெட்டிவந்தார்
அந்தப்படைக்குள்ளென்னவாச்சுது அந்நேரவேளையிலே
கூகூவென்னுஞ்சத்தங்களாச்சுது கோடிபடைக்குள்ளே
கைவேறாகக்கால்வேறாகக் கதறிவிழுவாரும்
சாமிசாமியென்றுசொல்லி தரைமேல்விழுவாரும்
தேவாதேவாயென்றுபுலப்பி திகைத்துவழுவாரும்
பூத்பூத்துவென்றுபுலம்பி புவிமேல்விழுவாரும்
தண்ணீர்தண்ணீரென்றுகூவி தவித்துவிழுவாரும்
சோறேசோறேவென்றுகேட்டு சோம்பிவிழுவாரும்
குதிரைகளிழந்துகால்நடையாகிக் கூவிமடிவாரும்
போதும்போதுமென்றுபுலம்பி பொன்றிமடிவாரும்
பெண்டுபிள்ளைகளைநினைத்துநினைத்து புலம்பிமடிவாரும்
வீடுவாசலைநினைத்துநினைத்து வெட்டாமல்மடிவாரும்
இப்படிமுகம்மது அனிபு சண்டைசெய்தாராம்

வசனம்

இப்படி முகம்மது அனிபு சண்டைசெய்து வருகிற தருணத்தில் பொழுது மேல்புறம்போய் மறைந்துவிட்டது. இருள் வந்து மூடிக்கொண்டது அப்பொழுது அரசனும் சேனைகளும் கோட்டைக்குள் போயினர். பின்பு முகம்மது அனிபு தானிறங்கியிருக்குமிடத்திற்கு வந்து, குலாமின்கையில் குதிரையைக் கொடுத்துவிட்டு உண்டு பசியாறி நித்திரை போயினர்கள். பின்பு பொழுது விடிந்தவுடனே ஷாஹே இறம் தன்னுடைய சேனைகளைக் கூட்டிக்கொண்டு மயிதா

னில் வந்துநின்று சண்டைக்கு அழைத்தார்கள். அதுகண்டு முகம்மது அனிபு தன் குதிரையின் மேலேறி அப்படையி னுள் புலிபோலப் புகுந்து அநேகர்களை வெட்டிப் பிணக்குன் ருக்கி ஆறாக இரத்தமோடச்செய்து அன்றும் வெற்றிபெற்று தன்னிருப்பிடத்திற்கு வந்துசேர்ந்தார். இப்படி அநேகதரம் சண்டைசெய்து முகம்மது அனிபாவை வெற்றி பெருததால் (ஷாஹேஇறம்)' தன்னுடைய மந்திரிமார்களை யழைத்து, நாம் எத்தனையோதரம் சண்டைசெய்தோம். அதனுல் நம்முடைய சேனைகளெல்லாம் அவன் கையின் கத்தியால் மாண்டுபோவார்கள். நாம் கெலிக்கப்போகிறதில்லை. ஆகையால் அவனேடெதிர்த்துச் சண்டைசெய்யாமல் உபாயத்தால் அவனை பிடித்துக் கொல்ல வேண்டியது. அப்படிச்செய்ய ஆலோசனை சொல்லுங்களென்று கேட்டான். அப்போது மந்திரிமார்கள், ஓ பாதுஷாவே! எங்கள் மனதில் ஒரு யுக்தி பிறந்தது. அது என்னவெனில்: சண்டை மைதானத்தில் சில கிணறுகள் தோண்டி அதின்பேரில் கழிகளை பரப்பி அதின்மேல் மண்ணை மூடிவிட்டுப் பின்பு நாம் அந்த மைதானில் நின்று சண்டைக்கழைத்தால் அவன் நமக் கருகில் ஓடிவருவான். அப்போது அவன் எந்தக் கிணற்றினுள் ளாவது விழுந்துவிடுவான். உடனே நாம் மண்ணைத்தள்ளி அக் கிணற்றை மூடிவிட்டால் உள்ளவே சிக்கிக்கொண்டு இறந்து விடுவானென்று சொல்ல, அதை ராஜன் கேட்டு ஆம்; இது நல்ல ஆலோசனைதானென்று ஒப்புக்கொண்டு, உடனே கிணறுகளை வெட்டச்சொல்லி உத்திரவு கொடுத்தான். அப்படியே ஒரு கொடிக்குள்ளாக இராவிற்கு இராவே கிணறுகள் வெட்டித் தயார் செய்துவிட்டரர்கள்,

பின்பு பொழுது விடிந்தவுடனே அரசன் தன்னுடைய சேனை களுடனே இரணக்கள மைதானில் வந்து அணியணியாகப் படை களை வகுத்து சமர்க்கு அழைத்தார்கள். அப்பொழுது முகம்ம தனிபு இவர்கள் செய்திருக்கிற சூதுகளொன்றுந் தெரியாமல் த்ன் வழக்கப்படி குதிரையின் மேலேறி சண்டைக்கு முன்னிலும் அதிக ஆரபாரத்தோடு போய் நின்றூர். அந்நேரவேளையிலொரு வன்மிகுந்த வல்லமையோடு வந்துஎதிர்த்தான். அவனை முகம்ம தனிபு வெட்டக்கத்தியை யெடுததார். அவன் பயந்து பின்னுக்கு ஓடினுன். அவனைத்துரத்திக்கொண்டே அக்கிணற்றின் கிட்டே போகவும் குதிரை திகைத்து அவ்விடத்திலேயே நின்றுவிட்டது. அப்பொழுது முகம்ம தனிபு அந்தக்குதிரையின் மேல் அதிக கோபமாய் நல்ல சமயததில் மோசஞ்செய்கிறதேயென்று சாட்டி

யால் ஓரடியடித்தார். அவ்வடியினால் அக்குதிரை எகிரிப் பாய்ந்தது. எப்படியெனில்? கிணறுகளைத் தப்படித்து தாண்டி தாண்டிப் போகையில் நாலாவது கிணற்றினுள்ளேபோய் விழுந்து விட்டது. அதனால் முகம்மதனிபாவுடைய இரண்டுகாலு மொடிந்து எலும்புகளெல்லாம் நெற நெறவென்று நொறுங்சிப் போய்விட்டது.

அந்நேரவேளையில் பகைவர்களுடைய படைகளெல்லாம் அக் கிணற்றை வந்து வளைந்து சூழ்ந்து நின்றுகொண்டார்கள். அப் பொழுது மந்திரிமார்களெல்லாம் அங்கே வந்து அதிக சந்தோஷத்தோடு இன்றோடு நம்முடைய விசனங்களும் பகைகளும் தொலைந்துவிட்டது. நீங்கள் சீக்கிரமாகக் கிணற்றில் மண்ணைத் தள்ளி மூடி நிறவிவிடுங்களென்று சொல்லிக்கொண்டிருக்கையில் அந்நேரவேளையில் சைத்தூன் வந்து குலாமைப்பார்த்து எங்கே ஈமானென்று கேட்கையில், அதற்கு குலாம் இப்படைகளெல்லாம் ஏகமாய் வந்து வளைத்திட, அதனுள் புகுந்தாரே அதுதான் எனக்குத் தெரியும், மற்றொன்று மெனக்குத் தெரியாதென்று சொல்லினான். அவன் சொன்னதை சைத்தூன் கேட்டு சீக்கிரமாகத் தன் குதிரையை நடத்தி ஏகமாகச் சூழ்ந்திருக்கும் கிணற்றின் கிட்டேவரவும், அப்போது அப்படைகளெல்லாம் சையித்தூன் வருவதைக்கண்டு பயந்து ஓடிப்போய் விட்டார்கள் அந்நேரவேளையில் 40-பாங்கிகளும் சையித்தூன் கிட்டேவந்து சேர்ந்தார்கள். அப்பொழுது சையித்தூன் குதிரையைவிட்டு கீழேயிறங்கி, அக்கிணற்றின் அருகிற்சென்று கிணற்றைக்குனிந்து பார்த்து, ஓ இமாமே! நான் தங்களுடைய அடியாள். என்பெயர் சைத்தூன், தாங்களென்னமாயிருக்கிறீர்? எனக்குத் தைரியம் வரும்படி தங்களுடைய சங்கதிகளைச் சொல்லென்று கூப்பிட்டுக் கேட்க, அந்தச் சத்தத்தை முகம்மதனிபுகேட்டு சையித் தூனென்றெண்ணி அப்போது முகம்மதனிபு என்னுடைய இரண்டு கால்களு மொடிந்து எலும்புகளெல்லாம் நொறுங்கிப் போயிருக்கிறது; என்னைச் சீக்கிரமாக வெளிப்படுத்து மென்று கூப்பிட்டுச் சொன்னார். அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே சையித்தூன் கேட்பதற்கு நாலுமூலையும் கயிறுகட்டி அக்கிணற் றினுள்விட்டு இதன்பேரில் உனக்கு உட்கார எப்படி சவுக்கியமா யிருக்குதோ அப்படி குந்திகொள்ளுமென்று சொல்ல, அப்போது முகமமதனிபு இரண்டு அக்குளுக்குள்ளாக கயிற்றுகள் அறப் பிடித்து, அதன்பேரில் குந்திக்கொள்ளவும், அப்பேது

சையித்தூன் தன்னுடைய வல்லமையெல்லாங் கூட்டித் தூக்கிட கொஞ்சமும் அசையவுமில்லை, தட்டு எழும்பவுமில்லை. அதனால் சையித்தூன் அதிகவருத்தமுற்று, ஓ இமாமே: நான் எனது வல்லமையெல்லாங் கூட்டித் தங்களை மேலுக்குத் தூக்கிடில் தாங்கள் அசையவுமில்லை. தட்டு எழும்பவுமில்லையென்றுசொல்ல, அதற்கு முகம்மதனிபு, ஓ சையித்தூனே! உன்னுடன் நாற்பது பாந்திப்பெண்களையும் கூட்டிக்கொண்டு கலிமாஓதி அந்த ஆலாவைப் புகழ்ந்து என்னை எடுப்பீர்களானால் நான் கரையேறுவேனென்று சொல்ல, அதை சையித்தூன் கேட்டு அப்படியே செய்து எடுக்கையில் இலேசாகக் கிணற்றைவிட்டு கரைவந்து சேர்ந்தார். அப்போது முகம்மதனிபாவைக் கட்டிலின்மேல் வைத்து குலாமின் வசம் ஒப்படைத்தாள். அப்போது முகம்மதனிபு ஹாவென்று ஒரு குளிர்ந்த பெருமூச்சு விட்டார். அதை சையித்தூன் கண்டு, ஓ இமாமே! தாங்கள் இப்படி குளிர்ந்த பெருமூச்சுவிட்டகாரணமென்ன? அதை எனக்குத் தெரியச் சொல்ல வேணுமென்று விருப்புற்றுக் கேட்க, அதற்கு அமீர் என்னுடைய காலு இப்படியாய்விட்டது. என்னுடற் பிறந்தான்மார் 4-பேரும் சிறையினுள்ளிருக்கிறார். அவர்களை எவ்விதமாக வெளியிற்கொண்டுவருவேனென்ற எண்ணத்தின் பெருமூச்சென்று சொன்னார். அதைச் சைத்தூன்கேட்டு நீ ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம். நான் போய் அவர்களைக் கொண்டு வருகிறேனென்று சொல்லித் தான் தனியாகப் புறப்பட்டு அப்பட்டணத்தினுட்போய்ப் புகுந்தாள்.

வீதிகளெல்லாங் நடந்து கோட்டைக்குட் புகுந்து அவர்களை முன்னால் சிறையிலடைத்துவைத்த விடத்திற்போய்ப் பார்க்கையில் அங்கே அவர்களில்லை. பின்னும்மற்றவிடங்களெல்லாந் தேடிப்பார்க்கையில் எங்கேயுங் காணவில்லை. அதன்பின்பு அவ்வூராகளை விசாரித்தும் அவர்களும் இன்னவிடத்தி லிருக்கிறார்களென்று சொல்லாமல் எங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். அந்நேரவேளையில் பகைவரின் படைகள் வந்து முகம்மதனிபாவைச் சுற்றி வளைத்துக்கொண்டு சமீபத்தில் நெருங்கினார்கள். அப்போது முகம்மது அனீபும்கூட 40-பாந்திகளுமாகப் பகைவர் கிட்டே நெருங்கி வரவொட்டாமல் அம்புகளைப் பூட்டி அம்பொன்றுந் தப்பாமல் அநேகம்பேர்களை மடித்தார்கள். அந்தச்சமயத்தில் கைகளிலிருந்த அம்புகளெல்லாம் ஒன்றில்லாமல் முடிவாய்விட்டது. அதனால் மிகுந்த வெண்ணங்

கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட இக்கட்டாகிய சமயத்தில் சையித்தூன் அதிவேகமாக ஆங்காரத்தோடு குதிரையின் மேல் வர, அப்பகைவராகிய சேனையோர்களெல்லாங்கண்டு திடுக்கிட்டுப் பயந்து, புலியைக்கண்ட மான்போல மிரண்டு ஓடி போய்விட்டார்கள். அப்பொழுது சையித்தூன் முகம்மது அனிபாவின் கிட்டேவந்து, ஓ பாதஷாவாகிய இமாமே! நான் பட்டணத்தினுள்போய் நகரமுழுதுந் தேடிப்பார்க்கையில் அவர்களிருக்கிற இடத்தில் குறிப்பே அகப்படவில்லை. இன்னம் தேடிப்பார்க்கலாமெனில், உங்களைப் பகைவர்கள் வந்து என்ன செய்வார்களோவென்று சீக்கிரமாக நான் வருவதற்குள்ளாகத தங்களைப் பகைவர்கள் வந்து வளைத்துக்கொண்டிருந்தார்கள். நான் வந்து அவர்களைத் துரத்திவிட்டேன். ஆகையால் தங்களுடைய உத்திரவு ஆகுமேயானால் எந்தவூருக்காவது தங்களைக் கொண்டுபோய் வயித்தியர்களிடத்திற் காண்பித்து, தங்கள் கைகால்களைக் சீற்படுத்தி, தாங்கள் சொஸதமானதின்பின் நாம் இவ்விடத்திற் சண்டைக்கு வருவோமென்று சொல்ல, அதை முகம்மதுஅனீ| கேட்டு நல்லது| நமக்குச் சமீபத்தில் இம்ருனுடைய தேசமிருக்கின்றது. அவன் எனக்கு மிகுந்த இஷ்டமுள்ளவன். உதவி ஒத்தாசை செய்வான். அங்கே என்னை இக்கட்டிலோடு எடுத்துக்கொண்டு போவென்று சொல்ல, அதை சையித்தூன் கேட்டு நல்லதென்று சம்மதித்தார்கள்.

சையித்தூன் முகம்மது அனீபாவை இம்ருனிடத்திற்குக் கொண்டு போகுதல்.

முகம்மதனிபாவின் சொல்லின்படி கட்டிலின்மேல் வைத்து இம்ருனுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டுபோகையில் அப்பொழுது (மக்வூர்) என்னுமரசன் 12000 - குதிரைப்படைகளையெடுத்துவந்து இம்ருனுடன் சண்டைசெய்ய. அவ்வூரினருகில் வந்து இறங்கியிருக்கிறுள். அவன் எதிர்த்துச் சண்டைசெய்ய இம்ருனும் தன்னுடைய படையோடு எதிர்முகமாக நின்று இருவரும் படைகளை அணியணியாக நிறுத்தியிருக்குஞ் சமயத்தில் இம்ருனைப்பார்த்து (மக்வூர் என்பவன் நீ முகம்மது என்பவருக்கு சமானன் கொண்டு கலிமாஓதி யிருக்கிறதாகக் கேள்விப்பட்டு நான் இன்று இப்படைகளுடன் உன்னுடன் சண்டைசெய்ய வந்திருக்கிறேனென்றுசொல்லி, நீயும் நானுமாய் எதிர்த்து சண்டைசெயது, இருவர் வல்லமையும் அறியவேணுமென்று முதலிருவர்கள் படையும் ஒன்றோடொன்றெதிர்த்து மழை பொழிவதுபோல அம்புகள்பொழிந்து, தலைகளுருளவும்,

மூளைகள் சிதறவும், கத்தியாலும் தண்டாயுதத்தாலும் ஈட்டியாலும் குத்தியும், வெட்டியும் இரத்த ஆறு ஓடச்செய்து, கடைசியில் இரண்டு இராசர்களும் முன்பேசியதுபோல ஒருவர்க்கொருவர் வானிடிபோல எதிர்த்துச் சண்டை செய்யும்வேளையில் (மக்வூரென்பவன்) இம்றூனுடைய கழுத்தில் பாசக்கயிற்றைப் போட்டு இழுக்க நாடினான்.

அப்பொழுது இம்றூன் அந்த ஆலாவைப் புகழ்ந்து, ஓ நாயனே! இவ்வேளை நீ என்னைக் காத்துக்கொள்ளென்று துஆக் கேட்டான். அந்நேரவேளையில் அவ்விடம் சையித்தூனும் முகம்மது அனிபாவும் குலாமுமாகவந்து பார்க்கையில், இம்றூனுக்கு இக்கட்டாகிய வேளையாயிருக்கின்றது. அதுகண்டு முகம்மது அனிப ஆஹா! இத்தருணத்தில் என்னுடைய கால்களொடிந்து போயிருக்கின்றதே; நானென்ன செய்வேன். எனக்கு வருத்தமும் பெரிதாயிருக்கின்றதே. வீணாகப் பகைவனுடைய கையிற்சிக்கிப் பரதவிக்கின்றானே. இவனிடத்திற்குப்போய் வியாதியைக் காப்பாற்றிக்கொள்ளலாமென்று நாடிவர, இங்கே இப்படிப்பட்ட மசிப்புத்துண்டா யிருக்கிறதென்று அதிக விசனப்படுவதை சையித்தூன் கண்டு, ஓ இமாமே! நீர் யாதொரு விசனப்பட வேண்டாம். உனக்கு முகபத்தரகிய இம்றூன் யாரோ எனக்குத் தெரியாதென்று சொல்ல, அதற்கு முகம்மது யார் கழுத்தில் பாசக்கயிறிருக்கின்றதோ அவர்தான் இம்றூன். எவனிழுக்கிறானோ அவனை வெட்டிவிட்டு என்னுடைய இஷ்டனை விடுவித்துவிட்டால் அதனால் என் மனமகிழ்ந்து நிலைபடுமென்று சொல்ல, அதுகேட்டு உடனே மின்மின்னிபைப்போல சையித்தூன் அங்கே வந்து இம்றூனுடைய கழுத்திலிருக்கும் கயிற்றை அறுத்துப்போட்டு அவனுயிரை மீட்டுவிட்டுப் பகைவனாகிய (மக்வூரை) இரண்டு துண்டாக வெட்டி அவன் படைகளெல்லாம் நாசமாக்கி அவனுடைய பண முதலிய ஆடையாபரணக்களைக் கொள்ளையிட்டு வெற்றிப்பெற்று, பின் முகம்மது அனிபை வந்துகண்டான். கால்களொடிந்திருப்பதைப் பார்த்து அதிக விசனங்கொண்டு கோட்டைக்குள் மிகுந்த மரியாதையுடனே கொண்டுபோய் நல்ல அலங்கிருதமான மெத்தைக்குள்ளே யிருக்கும்படிச்செய்து, உடனே அப்பட்டணத்திலுள்ளிருக்கும் பண்டிதர்களை யெல்லாம் அழைத்து, இக்கால்கள் கூடி சவுக்கியம் பெறும்படியாகச் செய்வீர்களாகில் உங்களுக்கு

அளவற்ற பணங்களும், நாடுகளும் இனும் கொடுப்பேன் நன்றாய்ப் பாருங்களென்று சொல்ல, வயித்தியர்கள் அச்சொல்லைக் கேட்டு ஒடிந்துபோன காலைப்பார்த்து இது சுத்திசெய்ய எவ்வளவும் எங்களால் முடியாது. இதற்கு மருந்து எந்த உலகத்திலுமில்லையென்று சொல்லிவிட்டார்கள்.

பின் முகம்மது அனிபு அம்மெத்தையினுள்ளிருந்து கால்நோயினால் சொல்லொணாத விசனமும் வருத்தமுமடைந்து, தன் குலாமை யழைத்து நீயும் சைத்தூனும் என்கிட்டே யிருக்க வேண்டாம். விலகியிருங்களென்று சொல்ல, அச்சேதியைக் குலாம் சைத்தூனுக்குத் தெரியப்படுத்தவும், அப்போது சைத்தூன் முகம்மது அனிபாவின் கிட்டேவந்து, ஓ இமாமே! இங்கே துனியாவிலேயே என்னை விலகியிருக்கும்படியாகச் சொன்னீரே. அங்கு கியாமத்திலே சொல்லுகிறதென்ன. என்பேரில் என்ன சந்தேகமுண்டென்று சொல்ல, அதற்கு முகம்மது அனிபு 2½-நாழிகை வரைக்கும் நான் தனியாக யிருக்கநாடுகிறேன். எனக்கு வருத்தம் பெரிதாயிருக்கின்றது. நீங்களெல்லாம் விலகியிருங்களென்று சொல்ல, அப்படியே சைத்தூனும் குலாமும் மற்றவர்களும் மெத்தையினுள் தனியாக விட்டுவிட்டு எல்லாரும் வெளியே வந்துவிட்டார்கள். அதன்பின்பு முகம்மது அனிபு அதிக வருத்தத்தினலே கூகூவென்று சத்தமிட்டுக்கொண்டு அம்மெத்தையினுள்ளிருந்தார். அச்சமயத்தில் (காரியாப்பரி) சீக்கிரமாகவந்து அக்கட்டிலோடு முகம்மது அனீபை ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் தூக்கிக்கொண்டு தன் பட்டணங்கொண்டுபோய் விட்டது. அதன்பின்பு அம்மெத்தையினுள்ளிருந்துவரும் சத்தம் அடங்கிப் போய்விட்டது. அதைச் சையித்தூன்கண்டு குலாமைப் பார்த்து இதுவரைக்கும் வந்த சத்தம் கம்மென்று அடங்கிப்போயிற்றே. ஆகையால் சீக்கிரமாக நீ மெத்தையினுள்போய் இமாமுடைய சங்கதியைத் தெரிந்துவாவென்று சொல்ல, உடனே குலாம் அம்மெத்தையினுள் புகுந்து பாக்கையில் கட்டிலோடு இமாமைக் காணமல் கிடுகலங்கி மெய்மறந்து பெருங்குரல் பாச்சிச் சத்தமிட்டான். அந்தச் சத்தத்தைச் சைதூன்கேட்டு அதிக காபரிபட்டு தானும்போய்பார்க்கையில் காணேம். அதனல் பெரிய அழுகைச்சத்தமாய்விட்டது. பட்டணமுழுதும் ஏகக் கலக்கமாய் விட்டது. பின்பு சையித்தூன் 40-பாந்திகளேயுங் கூப்பிட்டு உங்களை நான் விடுதலை செய்துவிட்டேன். நீங்கள் உங்களுடைய வீடு போய்ச்சேருங்கள். நான் தனியாகக் காடு மலை வனம் வனாந்திரமெல்லாந் திரிந்து அவரைக் கண்டுபிடித்து, வருகிறேன். அப்படி

யில்லாவிட்டால் என்னுயிரை அவ்விடமே மடித்துவிடுவேன். என் முகத்தைக் கொண்டுவரமாட்டேனென்று சொல்லி அழுக அப்போது குலாம் வேண்டுமான தைரியமெல்லாம் சொல்லி நாம் மதீனத்திற்குப் போவோம்; அவ்விடமுள்ளோர்கள் தங்கள்பேரில் மிகுந்த இரக்கமும் பிரியமும் இஷ்டமும் செய்வார்கள். இன்னம் முகம்மது அனிபாவின் சங்கதிகளும் தெரியுமென்று நானாவித மாகிய வொப்புகளெல்லாஞ் சொல்ல, அதுகளை யெல்லாங் கேட்டு சையித்தூனுக்கு அவ்விடம் போக மனம் சம்மதியாயினது. அப்பொழுது குலாம்முகம்மது அனிபாவுடைய பாதரக்ஷைகளை எடுத்துக்கொண்டு கூட சையித்தூனும் தானுமாக இம்றூனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, மதீனத்தின் பாதையைப்பிடித்து வழிகளெல்லாங் துலைத்து, மதீனத்தினருகாக வந்து கபறஸ்தான் கிட்டேநின்று குலாமைப் பார்த்து, நானிவ்விடமே யிருக்கிறேன்; நீ பட்டணத்திற்குள்போய் அவ்விடத்தின் சங்கதிகளை முன்ன மறிந்துகொள். என்னை யவர்கள் முன்பின் அறியார்கள். என்னுடைய சங்கதிகளைச் சொல். அதற்கு அவர்கள் ஒப்புவார்களாகில் நல்லது. ஒப்பாவிடில் என் அதஷ்டபாக்கியம். நானிப்படியே எங்கேயாகிலும் புறப்பட்டுப் போய்விடுகிறேன். நீ முன்பின் அறிவனென்று சொல்லி அங்கோர் கபரின் கிட்டேபோய் உட்கார்ந்து கொண்டாங்கள்.

மக்பூல் விசளம் போய்ச் சொல்லுதல்

அப்பொழுது குலாம் சைத்தூனைத் தனியாக விட்டுவிட்டுத் தானும் தனியாகவே மதீனத்திற்குள் போய்ப்புகுந்து இந்தச் சங்கதியைச் சொல்லவும் பெரிய கூச்சலாய் விட்டது. அப்போது இமாம் அசனு இமாம் உசைனுமாக வந்து குலாமைப்பார்த்து நீ எங்கே முகம்மது அனிபாவை விட்டுவிட்டு வந்து அழுகிறாய். அந்தச் சங்கதிகளை எங்களுக்குச் சொல்லென்று கேட்க, அதற்கு (மக்பூல்) ஒ இமாம் மகளே! நான் அவரைத் தோற்றுவிட்டேனென்று ஆதியோடந்தமாகச்சொல்லி, தான் அடையாளங்காட்டக்கொண்டுவந்த பாதரக்ஷையுங் காட்டி, இதை உங்களுக்குச் சாட்சி காட்டக் கொண்டுவந்தேனென்று சொல்ல, அதை அவ்விரண்டு பேருங்கேட்டு அதிக வியாகூலத்தோடு அலிறலிஅல்லாகுவினிடத்திற்குப்போய் (மக்பூல்) முகம்மது அனிபாவினுடைய சங்கதிகளைக் கொண்டுவந்திருக்கிறான். அது அதிக விசனமுள்ள

தென்று சொல்ல, அதைக்கேட்டு உடனே அலிறலி அல்லாகு ஹாவென்றெரு சத்தமிட்டார். அதனல் மதீனமெல்லாம் ஓரே சத்தமாய்விட்டது. இன்று அலிறலி யல்லாகுவின்பேரில் பெரிய முசிபத்து வந்து நேரிட்டதென்று எல்லா அஸ்ஹாபுமார்களும் வந்து அலிறலி யல்லாகுவை வினவினர்கள். யா அலியே நீங்கள் கேட்டபடியே எங்களுக்கும் தெரியச் சொல்லுமென, அப்பொழுது அலிறலி அல்லாகு மக்பூலானவனைக் கேளுங்களென்று சொல்ல, அன்று எல்லா அஸ்ஹாபுமார்களும் அந்தக் குலாமைப் பார்த்து முகம்மது அனிபு எங்கேயென்று கேட்டார்கள். அதற்கவன் ஆதியோடந்தமாகச் சகல சங்கதிகளும் தெரியும்படிச் சொல்லினன். அவன் சொல்லியதை சகல அஸ்ஹாபுமார்களுங் கேட்டு அதிக விசனக்கடலினுள் மூழ்கினர்கள். அந்தக்காலம் உமறலி அல்லாகுவுடைய கலிபாபட்டத்தின் நாளாயிருந்தது. அப்போது அலியாரைப் பார்த்து, உமறு புனிகத்தா புனுகத்தாபு நீர் ஒன்றுக்கும் விசனப்படவேண்டாம். உன்னுடைய பிள்ளை மவுத்தாகவில்லை. அவர் உயிரோடிருக்கிறர். ஆகையால் நீ சீக்கிரமாகச் சர்வரே ஆலம் நபுசல்லல்லாகு அலைகி வசல்லமுடைய றவுலாவினிடத்திற்குப் போய்க் கேட்பீராகில் உமக்கு அதின் சங்கதிகளை அறிவிப்பார்கள். அதனல் அறிந்து கொள்வீரென்று சொல்ல, உடனே அலிறலியல்லாகு தன் தோழமார்களின்கூட நபிநாயகத்தின் றவுலாவின் கிட்டேவந்து இஸ்திகாருசெய்ய, அதனல் நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் (பாஷாறத்து) செய்தார்கள். அதன் விபரமாவது, ஒ அலியே! உன்னுடையபிள்ளை முகம்மது அனிபு மவுத்தாகவில்லை. அவர் இதுவரைக்கும் உயிரோடிருக்கிறர். அவரை ஷாஹேபரியினுடைய மகள் கரியாபரி என்பவள் கடலிற்கு அப்புறமாகத் தூக்கிக்கொண்டுபோய்த் தன்னிருப்பிடத்தில் வைத்திருக்கிருள். இன்னம் மக்பூலானவன் தன்கூட சையித்தூனையும் அழைத்து வந்திருக்கிறன். இன்னம் நீ உன்னுடன்கூட உன் பிள்ளைக ளிரண்டுபேரையும், கூட உமரையும் அழைத்துக் கொண்டு 12000-அஸ்ஹாபுமார்களையும் படையாகச் சேர்த்து, சமுத்திரத்தின் கரையோரமாகச் சென்று முகம்மது அனிபை மீட்டுக்கொண்டு வாரும். இன்னம் சையித்தூனுக்கு முகம்மதனிபாவுடைய கத்தியையுங் கொடும். இன்னம் சையித்தூனுக்குப் பெட்டி நிரம்ப ஆடையாபரணங்களை நிரப்பிக்கொடும். இன்னமூவருடைய கூடாரத்தையும் கொடும். இன்னம் நீ அங்கு போய்வர

7-வருடம் பிடிக்கும். அல்லாகுத்தஆலா அங்கே உங்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். அங்குபோ (ஷாப்பரி) யிடத்திற்குப் போனால் அப்போது சையித்தூனுக்குப் பெண்களின் உடைகளை உடுத்தி நானுவித நகைகளையிட்டு மிகுந்த அலங்காரஞ்செய்து அவன்முன் போகும்போது தலையைத்திறந்தாப்போல் போகச் சொல்லும். அப்போது அவ்வரசன் சையித்தூனைப்பார்த்து, நீ யேன் இப்படி வந்தாய்? உன் தலையை மறைக்கும் துப்பட்டி யெங்கே? என்று கேட்பான். அப்போது அவ்வரசனுக்கு என்னுடைய துப்பட்டி உன்னுடைய வீட்டிலிருக்குதென்று சொல்லச் சொல்லும். அதுகேட்டு அரசன் உன்னுடைய துப்பட்டி என் வீட்டிற்கு வரவேண்டிய காரணமென்னவென்று கேட்பான். அதற்கு நீ சொல்லு என்னுடைய புருஷனை உன் மகள் கொண்டுவந்து வீட்டில் வைத்திருக்கிறுளென்று சொல். அது சங்கதி கேட்டவுடனே (ஷாப்பரி) மகளை யழைத்து உன் புருஷனாகிய முகம்மது அனீபை உன்னிடத்தில் கொடுத்துவிடுவானென்று சொன்னார்கள்.

இச்செய்திகளையெல்லாம் சர்வரே ஆலம்நபி சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய கிருபையினுல் அலிறலியல்லாகு அறிந்துகொண்டு மிகுந்த சந்தோஷத்தோடு மக்பூனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சையித்தூனைத் தேடி வருகையில், கபறஸ்தானிடமாக சையித்தூன் உட்கார்ந்திருந்து முகம்மது அனிபாவின்பேரில் எண்ணமிட்டிருக்கக்கண்டு அலிறலியல்லாகு கிட்டே போய் மிகுந்த கிருபையுடன் சையித்தூனுடைய தலையின்பேரில் முபாறக்காகியகையை வைத்துத் தடவி சர்வரே ஆலம் தங்களுக்குத் தெரிவித்த சங்கதிகளெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லி மனதைத் தேற்றிவிட, அவைகளைச் சையித்தூன் கேட்டு துக்கங்களையெல்லாம் நீக்கி, அதிக சந்தோஷங்கொண்டு அந்த ஆலாவினுடையபேரில் சுக்கூறுசெய்தார்கள். பின்பு அலிறலியல்லாகு உகோசில் கூடார மடிக்கும்படி உத்திரவு செய்தார்கள். அதேபடி கூடாரமடித்து உயர்ந்த விலைபொருந்திய பனத்து முதலிய விரிப்புகள் விரித்து, அப்பொழுது சையித்தூன் அலிப்புலியாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அக்கூடாரத்தினுள் வந்திறங்கியிருந்தார்கள். பின்பு அஸ்ஹாபுமார்களெல்லாம் கூடாரத்தைக் சுற்றிக் காவலாக விருந்தார்கள். கூட உமறென்பவர் வாசற்காவற்காரராக ஒருவரையும் உள்ளே போகவொட்டாமல் காவற்காரராக இருந்தார். அப்படியிருக்கையில் சையித்தீனேடு சந்திக்க அலிறலியல்

லாகுவினுடைய குமாரர்களாகிய உமறலியும் தாலீபலியும் அந்தக் கூடாரத்தின் அருகில்வந்து உள்ளே நுழையப்போனார்கள். அப்பொழுது காவற்காரராகிய உமர் எங்கே போகிறீர்களென, அதற்கவர்கள் நாங்களிருவரும் உள்ளே போகிறோமென்றுசொல்லை, அதற்கு நீங்கள் உத்திரவில்லாமல் உள்ளே போகக்கூடாதென, அதற்கிவர் நாங்கள் சையித்தூனுடைய கொழுந்தன்மாரா யிருக்கிறோம். எங்களுக்கும் அவர்களுக்கும் யாதொரு மறைவுமில்லை. நீயேன் தடுக்கிறாயென்று சொல்ல, உமர் சையித்தூனுடைய உத்திரவின்றி நீங்கள் உள்ளே போகக்கூடாதென்று வெளியே நிறுத்தி விட்டு, சையித்தூனிடத்திற்குப் போய் தங்களைக் காண அலியாருடைய பிள்ளைகள் வந்திருக்கிறார்கள். அவர்களை உள்ளேவிடத் தங்களுத்தரவானால் விடுகிறேனென்று சொல்ல, அச்சேதி கேட்டவுடனே சையித்தூன் அவர்களை உள்ளேவரும்படி உத்திரவு கொடுக்க, உடனே உமர்போய் அவர்களைப் பார்த்து உங்களை உள்ளே வரும்படி உத்தரவாயிற்று. நீங்கள் போங்களென்று விட்டு விட்டார். இவ்விரண்டு பேரும் கூடாரத்தினுட்சென்று சையித்தூனைக் கண்டு சலாம் சொல்லினார்கள். உடனே சையித்தூன் அவர்கள் சலாத்திற்கு ஜவாப்புசொல்லி அதிக மருங்குடனே அவர்களை உட்காரவைத்து நானாவிதமாகிய பேச்சுகளெல்லாம் கொழுந்தன்மாருடனே இரவெல்லாம் பேசி யிருந்தார்கள். அப்பொழுது பஜார் வேளையாய்விட்டது. இரண்டுபேரும் கூடாரத்தைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள்.

அலிறலியல்லாகு முகம்மது அனிபை மீட்கப் போகுதல்

பொழுது விடிந்தவுடனே அலிறலியல்லாகு முகம்மதனிபைக் கொண்டுவருவதற்காக 12000-குதிரையுடனே அஸ்ஹாபுமார்களை கூட்டிக்கொண்டு, சிலநாள்வரைக்கும் சமுத்திரக்கரையோரமாக நடந்து போகையில், அங்கே ஒரு பெரிய கோட்டையும் பட்டணமுமாக வாசற்படியும் தெரியலாயினது. அதைக் கண்டு கிட்டே கிட்டே போய்க்கொண்டிருந்தார்கள். அப்படிப் பட்ட சமயத்தில் அரசன் காவலாக வைத்திருந்த காவற்காரன் கோட்டையின்மேலிருந்து யார் வருகிறார்களோ வென்று பார்த்து, அரசனுக்கு அறிக்கை செய்கிறது. அதிலொரு காவற்காரன் அறபுதிசையாகப் பார்த்தான். அப்பொழுது

அவன் கண்ணிற்கு இப்படைகள் வருகிறது தெரிய லாயிற்று. அதை நன்று யுற்றுப்பார்த்து கைகால் நடுக்க மோடு பயந்து கோட்டையைவிட்டுக் கீழேயிறங்கி (மீஆ தென்னும்) அரசனிடத்திற்குப்போய், ஓ ராசனே! இன்று நானொரு புதுமையைக் கண்டேன். அதென்னவெனின்: இருந் தாப்போலிருந்து அறபு தேசத்தின் புறமாக பெரிய தூசியெழும் பினது. அதை நான் உற்றுப் பார்க்கும்போது 12000-குதிரை யுடனே மதீனத்தின் புறமாயிருந்து வருகிறார்கள். அவர்கள் பிடித்து வரும் கொடியைப் பார்த்தால் இசுலாமானவர்களாக மதீ னத்தார்கள் போலிருக்கிறது. அவர்கள் வருகிற ஆரபார அமளி களை இவ்வளவென்ற சொல்ல என்னால் எவ்வளவு முடியா தென்று சொன்னான்.

அலங்காரக்கண்ணி

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் மீஆதுராஜன்
அப்படியாச்சாநம்மோடெதிர்க்க அறபுப்படையார்க்கு
இத்தனையாணுவங்கொண்டாரல்லவா அறபுதேசத்தார்கள்
பஞ்சைகளெல்லாங்கூடியாவந்தார் பாரசண்டைசெய்ய
பேடிகளெல்லாம்கூடியாவந்தார் பெரியசண்டைசெய்ய
பூளைப்பூப்போல்பறப்பாரெல்லாம் பிடித்தால்நான்கத்தி
புலிகளெதிர்த்துஎன்னோடுசண்டை போட்டிடமாட்டாது
யானைகளெதிர்த்துஎன்னோடுசண்டை யெதுவும்செய்யாது
பூனையையெலிகள்கெலிப்பதுபோலப் பேடிகள்வந்தார்கள்
நரியைக்கோழிகள்வெல்வதுபோல நாடிவந்தார்கள்
புலியைமான்கள்வெல்வதுபோலப் போகவேவந்தார்கள்
கெட்டிக்காரராஜாவாயிருந்தால் என்னோடெதிர்க்கவேணும்
சேவகப்படைகளாகவேயிருந்தால் என்னோடெதிர்க்கவேணும்
சிப்பாய்படைகளாகவிருந்தால் என்னைக்கெலிக்கவேணும்
மீசைமுளைத்தபேர்களாயிருந்தால் முன்னால் நிற்கவேணும்
என்னைவெல்லஉலகினிலுண்டா என்றான்ராஜாவும்
பல்லைநெறநெறவென்றுகடித்தான் பாரராஜாவும்
நெல்லைக்கொரிப்பதுபோலக்கொரித்தான் நெடியராஜாவும்
நல்லதுநல்லதுபார்ப்போமென்றான் ராஜாமீஆது
அந்தவேளையிலென்னசொல்கிறான் ராஜாமீஆது
நம்மிடபடைகளைக்கூட்டுங்களென்றான் ராஜாமீஆது
கோட்டைக்குவெளியேபோங்களென்றான் ராஜாமீஆது
ஈட்டிகத்திகளெடுங்களென்றான் ராஜாமீஆது
அம்புதண்டங்களெடுங்களென்றான் ராஜாமீஆது

பட்டாகத்திகளெடுத்துப்பிடிங்கள் பாரசண்டைசெய்ய
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபடைவீரர்
ஆயுதமெல்லாம்பூட்டியெழுந்தார் ஆங்காரங்கொண்டு
கோட்டையைவிட்டுவெளியிலேவந்தார் கொடியபாவியோர்கள்
அணியணியாகவந்துநின்றார்கள் ஆங்காரங்கொண்டு
முப்பதுமரமுழமுயரமுள்ளான் மீஆதுராஜன்
வெங்கலம்போல்சரீரமுள்ளவன் மீஆதுராஜன்
சிங்கம்போலஆணவமுள்ளான் மீஆதுராஜன்
ஆயுதமெல்லாம்பூட்டியெழுந்தான் ஆணவமிகப்பேசி
மந்திரிமார்கள்சூழ்ந்திடவந்தான் மீஆதுராஜன்
பின்னணியாகவேநின்றான்வந்து பெரியசிங்கராஜன்
அந்தவேளையில்சுஹாப்மார்களும் அணியாகநின்றார்
ராஜன்படையிலிருந்தொருவீரன் ராஜபுலிபோல
சிப்பாய்மார்களேவாங்கள்சண்டைக்கு சீக்கிரமென்முன்னால்
சேவகமார்களேவாங்கள்சண்டைக்குச் சீக்கிரமாகவப்போ
உங்கள்வலிமையைக்காட்டிடவாங்கள் ஒளித்துக்கொள்ளாமல்
இப்படிச்சொல்லிசண்டைக்கழைத்தான் எதிராளிவீரன்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டார் அஸ்ஹாபுமாரெல்லாம்
அப்போசைத்தூன்ஆங்காரங்கொண்டு அவனைவெட்டித்தள்ளி
குதிரைமேலேறக்கண்டாரப்போ கொடியசிங்கவீரர்
அலியார்பிள்ளைதாலீபலியும் அந்நேரவேளையிலே
பெண்கள்சண்டைக்குப்போவதுநமக்கு பெரியஞாயமல்ல
நான்போயவனைக்கெலித்துவருகிறேன் நடக்கநீவேண்டாம்
என்றசொல்லைக்காதிலேகேட்டு அப்போசைத்தூனும்
புலியேகேளும்என்றன்சொல்லைப் போனால்சண்டைக்கு
ஓரேவெட்டாய்வெட்டியெறிந்திடும் ஒன்றும்பாராமல்
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போதாலிபலி
காற்றைப்போலேகுதிரையைவிட்டார் கடுங்கோபங்கொண்டு
பெரியசிங்கம்போலெதிரில்வருவதைக் கண்டான்ரணசூரன்
தண்டாயுதத்தாலடித்தானவரைத் தனித்தஇடிபோலே
அந்தவடியைத்தாங்கியடித்தார் ஆங்காரங்கொண்டு
குதிரையுமவனுங்கிறுகிறுவென்று கீழேவிழுந்துசெத்தான்
பின்னுமொருவன்வந்தெதிர்த்தான் பெரியபுலிபோலே
இடியுமிடியுமெதிர்த்தாப்போலே யிருந்ததப்போது
ஒருவர்க்கொருவர்ஆங்காரங்கொண்டு உருவினார்கள்கத்தி
தாலிபலியார்வெட்டத்துண்டாய் தரைமேல்விழுந்துசெத்தான்
இப்படிகணக்கில்லாதவீரர்கள் வெட்டுபட்டுமாண்டார்
தாலிபுஅலிமுன்னெதிர்க்கப்பயந்தார் சகலபடையாரும்
கிட்டேநெருங்கப்பயந்தெல்லோரும் கிடுகலங்கிப்போனார்
ஆறுகயிரத்தமோடிப்போச்சுது அந்நேரவேளையிலே

வசனம்

இவ்விதமாக தாலிபுஅலி கணக்கில்லாத வீரர்களையும் படைகளையும் வெட்டக்கண்டு, உடனே மீதென்னுமரசன் ஆங்காரங் கொண்டு குதிரையின்மேலேறி வந்து நின்று, என்னுடைய வீரர்களையும் சூரர்களையும வெட்டிமாய்த்தவனே என்னுடன் சண்டை செய்வாயென்று கூப்பிட்டான். அந்தச்சொல்லைக் கேட்டவுடனே தாலிபலி பெரும்புலிபோல் சீறி அவன் முன்போ யெதிர்க்க, அப்பொழுது மீஆதென்னும் அரசன் கோடையிடிபோல் தன் கத்தியினல் ஓங்கிவெட்ட, அவ்வெட்டு தாலிபலியின் தலையிற்பட்டு பெருத்த காயமாய் கிறுகிறுப்பாகிய சமயத்தில், உமரென்பவர் ஓடி தாலிபலியின் சமீபத்திற்போய் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து குதிரையோடு தாலிபலியைத் தன் சேனையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டார். அப்போது அதைக்கண்ட சையித் தூனுக்குக் கட்டிலடங்காத கோபமெழும்பி பல்லை நெறநெற வென்று கடித்துக் கடுங்கோபங்கொண்டு கண்கள் சிவந்து மிகுந்த ஆரபாரத்தோடும் மீஆதுக்கு முன்னகச்சென்று நிற்க, அப்போது (மீஆது) நீயார்? உன்பெயரென்ன? சொல்லென்று கேட்டான். அதற்கு சைத்தூன் என் பெயர் முகம்மது அனிபு; நான் மதினத் திலிருந்து வந்திருக்கிறேன். ஆகையால் உன்னுடைய ஆசையெல் லாந்தீர என்னுடன் சண்டைசெய். ஒன்றும் மறைத்துவைக்க வேண்டாமென்று சொல்ல, அதைக்கேட்டு மீஆது தன்னுடைய கத்தியைச் சுழற்றி கோடையிடிபோல் கெர்ச்சித்து ஓங்கி வெட்டினன். அவ்வெட்டை சைத்தூன் தன் கையிலிருந்த கேடயத் தினல் தாங்கிக்கொண்டார்கள். அதனலவன் கத்தி முறிந்து துண்டு துண்டாய் கைப்பிடிமாத்திரம் கையில் நின்றுவிட்டது. அதையும் ஆங்காரத்தோடு வீசியெறிந்தான். அது கீழே விழுந் தது. அதை உமர் ஓடிப்போ யெடுத்தார். அப்போது மீஆது உமறைப் பார்த்து, கால் நடையுள்ளவனே! நீயேன் கத்திப்பிடியை யெடுத்தாய். அதில் விலைமதிக்க வொண்ணுத நவரத்தினங்கள் பதித்திருக்கிறே னென்றுசொல்ல, அதற்கு உமர் கீழே விழுந்த தெல்லாம் என்னுடைய சொத்தாயிருக்குமென்று சொன்னர். அப்போது சைத்தூன் மீஆதைப் பார்த்து நீ குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி என்னுடன் பல்லமாச் செய்யென்று சொல்ல, அது கேட்டு அவன் குதிரையைவிட்டுக் கீழேயிறங்கினன். சையித் தூன் மீஆதை தூக்கிக் கீழேபோட்டு அவன் மார்மேல் குத்தி கத்தியைக் கையில்வாங்கிக் கழுத்தின்பேரில் வைத்து, ஓ! (மீஆதே)!

நீ இப்போது கலிமா ஓதுவாயாகில் உன் உயிரைக்கொண்டு மீந்துப்போவாய். இன்னம் சுவர்க்க மாதியுமாவாய். இல்லாவிடில், உன்னுயிரையுமிழந்து நரகவாதியாய்ப் போவாயென்று சொல்லினார். அதற்கு மீஆது உன்னுடைய தீதாறைக்காண ஆசைகொண்டவனாயிருக்கிறேன். ஆகையால் நான் சந்திக்க தங்கள் முகத்தைக் காண்பிக்கவேணும். இன்னம் தங்களுடைய வல்லமையைப்போல் வல்லமையுடையவர்களை இதுவரையில் ஒருவரையாவது நான் கண்டதில்லையென்று சொல்ல, அதற்கு சையித்தூன் நானொரு வேலையாகப்போகிறேன். அவ்வேலையை முடித்துக்கொண்டு நான் திரும்பிவரும்பொழுது இவ்விடம்வந்து போவேன். அப்பொழுது என்னுடைய தீதாறைக் காண்பிப்பேன். அப்பொழுது நீ சந்திப்பாய். இப்பொழுது சீக்கிரமாக நபிசல்லல்லாகு அலைகிவசல்லத்திற்கு ஈமான்கொண்டு கலிமா ஓதென்றுசொல்ல, உடனே (மீஆது) மிகுந்த பிரியத்தோடு கலிமாஓதி, ஈமான்கொண்டு தீனுள்ளானார்கள். பின்பு மீஆது அதிக இன்பத்தோடு நவரத்தினங்களையும் பணங்காசுகளையும் தட்டுகளில் நிரப்பி யெடுத்துக்கொண்டு வந்து காணிக்கையாக சைத்தூனெதிரில் வைத்து மிகுந்த வணக்கத்துடனே கைகட்டி நிற்க, அப்போது சைத்தூன் மீஆதைப் பார்த்து, இப்பொழுது இவைகளிலொன்றையும் நானெடுக்கிறதில்லை. இவைகளெனக்கு வேண்டியதுமில்லை. ஆனால் நான்போய் திரும்பி வரும்பொழுது இவைகளையெல்லாம் ஒப்புக்கொள்கிறேன். நீ ஒன்றுக்கும் விசனப்படாதே. சுகமாக மனமகிழ்ச்சியோடு உன்கோட்டைக்குள் போய் அந்த ஆலர்வை மறக்காமலும் தீனை விடாமலும் சீமையை ஆண்டுகொண்டிருவென்று சொன்னார்கள்.

தேராஜனை இசுலாமாக்குதல்

அப்பொழுது மீஆது, ஓ பாதஷாவே! இன்னொரு விண்ணப்பமிருக்கின்றது. அதையுங் காதுகொடுத்துக்கேட்டு உதவி செய்ய வேணுமென்றுசொல்ல, அதற்கு சைத்தூன் அதென்ன சங்கதி சொல்லுமென்று கேட்டார்கள். அப்பொழுது மீஆது சொல்லத் தொடங்கினான். தேராஜனென்று ஒரு பெரிய ராஜனிருக்கிறான். இன்னமவன் அளவற்றபடைகளையும் அதிகவல்லமையுமுடையவன். இன்னம்40-கெஜம் உயரமுள்ளவன். அவன் இவ்விடம் வருடம்வருடம் தப்பாமல் படையெடுத்துவந்து சண்டைசெய்து அனேகம்பேரைச் சேதப்படுத்தித் தீனையும் வருத்

தித் தீனையும் வருத்தஞ்செய்து கொல்லாமல் விட்டுவிட்டுப் போகி றான். அவன் நான் இசுலாமாகிய சங்கதியைக் கேள்விப்படுவா னானால் என்னை உயிரோடு விடமாட்டானென்று சொல்ல, அதை சையித்தூன் கேட்டு நீ ஒன்றுக்குமஞ்சாதே. இப்போது அவன் பேரில் நட நாமெல்லோரும் அங்குபோய் அவனையும் இசுலாமாக் குவோமென்று சொல்ல, அதைக்கேட்டு மீஆது தன்னுடைய சேனைகளையெல்லாம் கடாத்தி வெளியே வந்தார். கூட அறபி களும் புறப்பட்டு மலை வனங்களைக் கடந்து தோராஜாவின் பட்ட ணத்திற்குச் சமீபமாகப் போனார்கள். அப்பொழுது தோராஜன் தன்னுடன் சண்டைசெய்ய மீஆது தன்னுடைய படைகளுடன் தனக்குதவியாக இசுலாமான 12000-குதிரைவீரர்களுடன் வரு கிறானென்று தூதர்கள் ஓடிப்போய் அரசனுக்குச் சொல்ல, அந் தச் சங்கதியைத் தோராஜன் கேட்டுக் கோபமானான்.

அலங்காரக் கண்ணி.

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் ஆங்காரதோராஜன்
ஆஹாவென்றுகோபங்கொண்டான் அண்ணல்தோராஜன்
கண்களிரண்டுசிவந்துபோச்சுது எட்டிக்கனிபோலே
விழிகளிரண்டுஞ்சிவந்துபோச்சுது முருக்கமலர்போல
மீசைபடபடவென்றுதுடித்தது ராஜாவுக்கானாலும்
பல்லைநெறநெறவென்றுகடித்தான் பெரியதோராஜன்
கண்ணையுருட்டிப்பார்த்தானையா கடுங்கோபங்கொண்டு
மந்திரிமார்கள்மற்றுமுள்ளோர்கள் பார்க்கத்தோராஜன்
கிடுகிடுவென்றுநடுங்கினார்ராஜன் கிட்டேயிருந்தோர்கள்
மேன்மேலாகக்கோபம்பொங்குது ராஜாவுக்கானாலும்
தருமஞ்செய்யக்கருமம்வந்தது என்றான்ராஜாவும் [ப்போ
அப்போ-வெட்டிப்போட்டால்நம்முடன்சண்டைக்கு வருவானுயி
விட்டபடியால்வந்தான்சண்டைக்கு வேறுபடையைக்கூட்டி
ஆனாலைகட்டும்குறையொன்றுமில்லை யறிவோமவன்சண்டை
எத்தனைதரமோ அடித்தேனவனை யெல்லாமறந்துபோனான்
சண்டைசெய்யவலியில்லாமல் தைரியமில்லாமல்
இசுலாம்படையைக்கூட்டியேவந்தான் என்னுடன்சண்டைசெய்ய
பஞ்சுபஞ்சாகப்பறக்கடிப்பேன் பாருங்களெல்லோரும்
பூனைப்பூப்போல்பறக்கடிப்பேன் பாருங்களெல்லோரும்

தூசிபோலப்பறக்கவடிப்பேன் துண்டுதுண்டாக
மீசைமுளைத்தவனாகவிருந்தால் முன்னேவந்திடுவான்
பேடிபோல்இருப்பானாகில் பின்னாலோடிடுவான்
என்னைக்கெலிக்கவந்தவனானால் இப்போதேவருவான்
இப்படிநானாவிதமாகச்சொன்னான் இடிபோல்தேராஜன்
மந்திரிமார்களேநம்முடபடைகளைத் தயார்செய்திடுங்கள்
குதிரைப்படைகளைச்சண்டைக்குப்போகக் கூட்டமாக்குங்கள்
செயபேரிகையையானைமேல்வைத்துக் தெருவெல்லாமடியுங்கள
என்றசொல்லைக்காதிலேகேட்டு எல்லாமந்திரிமாரும்
உடனேபடைகளைத்தயார்செய்தார் உக்ரசண்டைசெய்ய
கத்திகட்டாரிபூட்டினாரெல்லாங் கடுங்கோபங்கொண்டு
அம்புமெடுத்தார்தண்டமெடுத்தார் ஆங்காரங்கொண்டு
குதிரைமேலேறிவந்தாரெல்லாம் பெரியகூட்டமாக
கோட்டையைவிட்டுவெளியினில்வந்தார் கோடிபடையாக
யானைமேலேறிவந்தான்ராஜா ஆயுதந்தான்பூட்டி
அணியணியாகநின்றாரெல்லாம் ஆங்காரங்கொண்டு
இவர்களுமணியாய்நின்றாரெல்லாம் எதிர்த்துச்சண்டைசெய்ய
எதிரிப்படையிலிருந்தொருவீரன் வந்தான்புலிபோல
மைதானில்நின்றுகூப்பிட்டுச்சொன்னான் வாங்கள்சண்டைக்கு
சிப்பாய்மார்களாயிருந்தாலென்முன் சண்டைக்குவாங்கள்
சேவகமார்களாயிருந்தாலென்முன் சண்டைக்குவாங்கள்
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால் வரலாஞ்சண்டைக்கு
பேடிகளாயிருந்தால்திரும்பிப் பேசாமல்போங்கள்
என்றசொல்லைக்காதிலேகேட்டு எழுந்தார்மீஆது
உத்திரவுபெற்றுப்போனார்சண்டைக்கு உறுமிச்சிங்கம்போலே
பூமியதிர்ந்திடப்போனார்சண்டைக்குப் பெரியபுலிபோலே
வெட்டினார்துண்டாய்விழுந்தான்பாவி வீறுபேசிவந்தோன்
வந்தபேர்களையெல்லாம்வெட்டினார் மீஆதுராஜா
கத்தியையெடுத்துப்படைக்குள்புகுந்தார் கனத்தயிடிபோல
ஆறுயோடிப்போச்சுதூரத்தம் அந்தச்சண்டையிலே
குப்பல்குப்பலாகவிழுந்தார் கூகூகூவென்று
அந்தவேளையிலென்னசெய்தான் அந்ததேராஜன்
படைகள்சேதமாவதைக்கண்டான் பெரியதேராஜன்
கண்கள்சிவந்துபோச்சுது அப்போ கனத்தராஜருக்கு
யானைமேலேறிவந்தானங்கே யாளிபோல்ராஜன்

வசனம்

தேராசன் ஆங்காரத்தோடு வருவதை மீஆதுராசா கண்டு பயந்து, இவனோடெதிர்க்க நம்மால் முடியாதென்று பின்னோடி வந்து சையித்தூனைக் கண்டு, இதோ வருகிறானே யானையின் பேரில்; இவன்தான் தேராசன் இவன் தகா கெட்டிக்காரன். இவனை வெல்வது மகா அருமையென்று சொல்ல, அப்பொழுது சையித்தூன் தன் குதிரையின்மேலேறி அவனோடெதிர்த்தார்கள். அப்போது தேராசன் சையித்தூனைக் கண்டு தன்னுடைய யானையைத் தண்டாலடித்தான். அவ்வடியினால் யானை தன் தலையை மேலுக்குத் தூக்கித் துதிக்கையை நீட்டினது. அப்போது சையித்தூன் தன் குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி இரண்டு பேரும் மல்லமர் புரிந்தார்கள். ஒருவர்க்கொருவர் கீழே தள்ளி வலிகள் செய்யுமளவில் சையித்தூன் தேராசாவைக் கீழே தள்ளி அவன் மாரின்மேலேறி உட்கார்ந்து கத்தியை ஓங்கி நீ சீக்கிரமாகக் கலிமா ஓதுவையேயானால் உன்னுயிர் மீளும். இல்லாவிடில் உன் தலையை அறுத்துவிடுவேனென்று சொல்ல, அதுகேட்டு தேராசன் தங்களுடைய நாமத்தைச் சொல்லும். இன்னம் உங்களுடைய வதனத்தையுங் காண்பிக்கவேணுமென்று கேட்க, அதற்கு சையித்தூன் என் பெயர் முகம்மது அனிபுவென்று சொல்லிப், பின்னும் நான் இப்பொழுது ஒரு வேலையைக் குறித்து கடற்கரை யோரமாகப் போகிறேன். அவ்வேலையை முடித்துத் திரும்பி வரும்போது என்னுடன் நீ சந்திப்பாய். முகத்தையும் பார்ப்பாய். ஆகையால், நீ தீவிரமாகக் கலிமா ஓதென்று சொல்ல, உடனே அவன் கலிமா ஓதி ஈமான் கொண்டே இசுலாமாகி, உடனே நவரத்தின முதலியவைகளைத் தட்டுகளில் நிறையக் காணிக்கை கொண்டுவந்து எதிரில் வைக்கவும், அப்பொழுது சையித்தூன், ஓ தேராசாவே! நான் திரும்பிப் போகும்போது இவைகளையெல்லாமெடுத்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது வேண்டாமென்று சொல்லி; அவனுடைய சேனைகளடங்கலையும் கலிமா ஓதச்செய்து, நீங்களெல்லாம் இனிமேல் சந்தோஷமாயிருங்கள். தீனை மறக்கப் போகிறீர்களென்று சொல்லி, நான் போறேனென்று சொன்னார்கள். அப்பொழுது தேராசா எழுந்து நின்று கைகட்டி அதபாக, ஓ நாதஷாவே! என் மனதில் ஒரு கோரிக்கை யிருக்கின்றது. அதனைத் தங்களுடன் சொல்லுகிறேன். தாங்கள் இன்பற்றுக் கேட்டு உதவி செய்யவேணுமென்று விண்ணப்பஞ் செய்தான்.

11157

சுஹூர்பாதை வெல்லுதல்

அப்பொழுது சையித்தூன் தோராசாவைப் பார்த்து உன்னுடைய மனதில் என்ன நாட்டமிருக்கிறது? சொல்லென்று கேட்க, அதற்கவன் என்னுடைய பகைவ னொருவனிருக்கிறான். அவன் பெரிய படைகளை யுடையவன்; அதிக வல்லமை யுள்ளவன்: 60-கெஜம் உயரமுள்ளவன். அவன் வருடந்தோறுந் தப்பாமல் என் தேசத்திற்கு வந்து சண்டைசெய்து என்னை வருத்தப்படுத்தி சேனைகளையு மழித்துப்போட்டு, பணங் காசுகளைக் கொள்ளையடித்துக்கொண்டு என்னைக் கொல்லாமல் உயிரோடே விட்டுவிட்டுப் போகிறது அவனுடைய வழக்கம். அப்படியிருக்க, நான் இசுலாமான சங்கதியை அவன் கேட்பானாகில், என்னை உயிரோடே விடமாட்டானென்று சொல்ல, அதை சைத்தூன் கேட்டு நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாமென்று சொல்லி, உடனே மூவகைப் படைகளையு மெடுத்துக்கொண்டு காடு மலை வனங்களைத் தாண்டித் தாண்டி அப்பட்டணத்தின் கிட்டே போனார்கள். அப்பொழுது கோட்டையின் மேலிருக்கும் காவலாளிகள் இப்படைகள் வருவதைக்கண்டு பயந்து கிடுகலங்கி, இப்படிச் சமுத்திரம் போல் வருகிற தண்டுகள் யாருடையது? எவ்விடத்திலிருந்து வருகிறார்கள்? என்று உற்றுப்பார்த்து கைகால் நடுக்கமோடு கோட்டை விட்டுக் கீழிறங்கி ஓட்டமாக ஓடி (சுஹூர்பாது ராஜனைக் கண்டு) தூதர்கள் அடிபணிந்து, ஒ ராஜனே! இன்னொரு புதுமையைக் கண்டோம். அதென்னவெனில்: கடல் புரண்டு வருவதுபோல் பெரிய படைகள் வருகிறது. அதுகள் எவ்விடமிருந்து யார் வருகிறவர்களென்று பார்த்தோம். அப்படி பார்க்கையில், முதலாவது தோராசனுடைய படை; இரண்டாவது மீஆனுடைய படை; மூன்றாவது இசுலாமானவர்களுடைய படை; இவர்களெல்லாம் ஒன்றாய்க் கூடித் தங்கள்பேரில் சண்டைக்கு வருகிறார்களென்று தூதர்கள் சொல்லினார்கள்.

அலங்காரக்கண்ணி

அந்தச்சொல்லைக்காதிலேகேட்டான் சுஹூர்பாதுராஜன்
மூண்டுதுகோபமென்மேலாக முரட்டுராஜனுக்கு
பொங்குதுகோபமென்மேலாகப் போக்கிரிராஜனுக்கு
நெருப்பைப்போல்சிவந்ததுகண்கள் நெடியராஜனுக்கு
முருக்கம்பூபோல்கண்கள்சிவந்தது மூடராஜனுக்கு
உதடுபடபடவென்றுதுடித்தது உயர்ந்தராஜனுக்கு

மீசைபடபடவென்னத்துடிக்குது வீரியராகனுக்கு
மந்திரிமார்களைப்பார்த்தானப்போ மண்டுங்கோபத்தால்
மந்திரிமார்களைப்பார்த்தானப்போ தணலாய்க்கோபமதால்
என்னசொன்னார்தூதர்களென்று கேட்டானராஜாவும்
பேடியின்பேச்சைசொல்லவந்தாய் பெரியபுலிமுன்னே
கண்ணையுருட்டிப்பார்ப்பேனாகில் கத்தியுமின்னாது
நெறநெறவென்றுபல்லைக்கடித்தான் நீண்டமுடிராசன்
கோழிகள்வந்ததாநரியினைப்பிடிக்க கொக்கரித்துக்கொண்டு
ஆடுகள்வந்ததாபுலியைமிரட்ட ஆங்காரங்கொண்டு
தவளைகள்வந்ததாபாம்பினைவெல்ல தைரியமிகவாகி
எலிகள்வந்ததாபூனையைத்தின்ன ஏகமிகக்கொண்டு
என்னைவெல்லயெவரால்முடியும் ஏழைகள் வந்தார்கள்
நொடியில்தூளாய்ப்பறக்கச்செய்வேன் நூறுநூறாய்ப்போக
கத்தியையெடுக்கவல்லவருண்டா காசினியோர்களிலே
அம்பையெடுக்கவல்லவருண்டா ஆங்காரங்கொண்டு
தரையைவிட்டுத்தண்டாயுதத்தைச் சற்றேயெடுப்பாரா
அப்படியிருக்களப்படிவந்தார் ஆங்காரங்கொண்டு
ஆனாலாகட்டுமறிவோம்சண்டை அடியுங்கள்நகாரா
சீக்கிரமாகப்படைகளைக்கூட்டு சண்டைக்குப்போக
என்றசொல்லைக்காதிலேகேட்டு அப்போபடைவீரர்
கோடையிடிபோல்கூடினாரெல்லாங் கூக்குரல்தான்போட்டு
கத்திகட்டாரிகள்பூட்டியேவந்தார் கனத்தபடைவீரர்
அம்புதண்டங்களெடுத்தப்போவந்தார் ஆங்காரங்கொண்டு
பேரிகைமுழக்கத்தோடேயெழுந்தார் பெரியசண்டைசெய்ய
பம்பைகள்தாரைகள்முழக்கியேவந்தார் பாரசண்டைசெய்ய
கோட்டையைவிட்டு வெளியிலேவந்தார் கூட்டங்கூட்டமாக
அணியணியாகப்படைகளைவகுத்தார் ஆங்காரங்கொண்டு
அந்தவேளையில்மூவகைப்படையும் அணிஅணியாகநின்றார்
கடலுங்கடலும்சந்தித்தர்ப்போற் கண்டாரெல்லோரும்
அந்தவேளையில்விடையேவாங்கினார் தேராசுஆதி
பூமியதிர்ந்திடநடந்தாரப்போ பெரியசிங்கம்போல
மைதானிடத்தில்நின்றுகூப்பிட்டார் வலியவீரர்களை
சிப்பாய்மார்களாகவிருப்போர் சண்டைக்குவாங்கள்
சேவகமார்களாகவிருப்போர் சண்டைக்கு வாங்கள்
மீசைமுளைத்தஆண்பிள்ளையானால் முன்னேஓடிவாங்கள்

பேடிகளாகவிருப்பீரானால் பின்னேயோடிப்போங்கள்
சண்டைக்குவந்தபேர்களாயிருந்தால் சலுதியாகவாங்கள்

வசனம்

இவ்விதமாக மைதானில்வந்து தேராசா சண்டைக்கு அழைப்பதை கஹர்பாது ராசனுடைய படைவீரர்கள் கேட்டு, அதிலொரு வீரன் அதிக ஆங்காரத்தோடு எதிரில்வந்து நின்று, கத்தியாலோங்கித் தேராசனை வெட்டினான். அவ்வெட்டைத் தேராசன் கேடகத்தால் தாங்கிக்கொண்டு அவனை வெட்டவும், அவன் கிறுகிறுவென்று சுழன்று குதிரையும் அவனும் இரண்டு துண்டாகக் கீழே விழுந்து செத்தான். பின்னுமொருவன் வந்து எதிர்த்தான். அவனும் மடிந்து போனான். இப்படி வந்தவர்களையெல்லாம் தேராஜன் வெட்டிக் கொல்லுவதைக்கண்டு அதிக கோபத்தோடு ஷிரி (கஹர்பாதுராஜன்) வருவதைக்கண்டு பயந்து ஓடிவந்து சையித்தூனைக்கண்டு, இதோ வருகிறானே இவன்தான் (கஹர்பாது) அதிக வல்லமையுள்ளவன்: மிகுந்த கெட்டிக்காரனென்று சொல்ல, அச்சொல்லை (சையித்தூன்) கேட்டு சீக்கிரமாகத் தன் குதிரையின்மேலேறி பெரிய சிங்கம்போல் அவன்முன் வந்திட, அவன் (சையித்தூனைக்) கண்டு ஆரபாரத்தோடு முன்னில்வந்து நின்றான் அவனை (சையித்தூன்) பார்த்து, ஓ கஹோரரே! நீ அதிக கெட்டிக்காரனென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் உன்னுடைய வல்லமையை நான் அறியவேணும். இன்னம் உன்படையும் என்படையும் இவருடைய வல்லமையைக் காணவேணும். ஆகையால் நீ குதிரையை விட்டுக் கீழே யிறங்கி வந்து என்னுடன் மல்லமர்செய்யென்று சொல்ல, உடனே ராசன் குதிரையைவிட்டுக் கீழே யிறங்கினான். (சையித்தூனும்) குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி பாசக்கயிற்றை எடுத்து அவன் கழுத்தில் போடவும், அக்கயிர் அவன் கழுத்தில் மாட்டிக்கொண்டது. அப்பொழுது சையித்தூன் வல்லமையோடு இழுக்க பெரியமலை சாய்வதுபோலக் கீழேவிழுந்து (சையித்தூனைப் பார்த்து) ஓ அதி வீரசூரப் புலியே! உன்னைப்போல் வள்ளமையுள்ளவர்களை இதுவரையிலும நான் கண்டதில்லை என்னோடெதிர்க்க ஒருவராலும முடியாது. ஆண்டவன் உனக்கு அதிக பலத்தைக் கொடுத்திருக்கிறான். என்னைப் பூமியில் தள்ளினையே. உன்னுடைய பெயரைச் சொல்லி வடிவையுங் காண்பியுமென்றுகேட்டான். அதற்கு (சையித்தூன் நான் இப்போது ஒரு காரியமாகப் போகிறேன.

அவ்வேலையை முடித்துக்கொண்டு திரும்பிவரும்போது என் முகத்தை உனக்குக் காண்பிப்பேன். ஆனால் எனக்கு சமுத்திரத்திற்குப் போகும் வழியையுங் காண்பி. அது இன்னமெவ்வளவு தூரமிருக்கிறதோ அதையும் சொல்லென்று கேட்க, அதற்கவன் கடல் இன்னம் 2, 3-நாள் பயணமிருக்கின்றது. அதுவும் கிட்டேயாயினதென்று சொல்ல, அதுகளை சையித்தூன் கேட்டு நீ சீக்கிரமாகக் கலிமா ஓதென்றுசொல்ல, உடனே (கஹர்பாது ராஜன்) கலிமாஓதி ஈமான்கொண்டு இசுலாமாகினார்கள். பின்பு (கஹர்பாது ராஜாவும்) (தோராஜாவும்) மீஆதுராஜாவும் இம்மூன்று பேரும் ஒன்றாகக் கூடியிருக்கும்போது நான் போகக் கப்பல் தயார்செய்யுங்களென்று உத்திரவுகொடுத்தார்கள். அதுபோலவே கப்பலும் தயார்செய்தார்கள். பின்பு அவ்விடம் விட்டெழுந்து எல்லாப் படைகளுடனே கடற்கரையோரம்போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது சையித்தூனைப் பார்த்து (கஹர்பாதுச்)சொன்னார்: ஓ பாதுஷாவே! தாங்கள் கப்பலேறிப்போனால் அந்தப் பட்டணம்போய்ச்சேர 40-நாள் பிடிக்கும். அங்கு முதல் 7-பேர் காவலாளிகள் மலைமேலிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த வல்லமையுள்ளவர்கள் என்றுசொல்லி எல்லோரையுங் கப்பலேற்றிவிட்டு சையித்தூனிடத்தில் 3-ராஜாக்களும் விடைபெற்றுக்கொண்டு அவரவர் பட்டணம் சுகமாய்ப்போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு சையித்தூன் கப்பலோட்டும் மாலுமியைக் கூப்பிட்டு பாய் விரிக்கும்படி உத்திரவுகொடுக்க, உடனே மாலுமி பாய்விரித்துக் கப்பலை யோட்டினான். அக்கப்பல் வேகமாய்ப்பறந்து வருகையில், அங்கோர்மலை எதிர்ப்பட்டது. அதைக்கண்டு மாலுமி அதனோரமாகக் கப்பலைக்கொண்டுவந்து நிறுத்தி, லங்கர்செய்து பார்க்கையில் அம்மலைமேல் 7-பேர் காவலாளிகள் படுத்து நித்திரை செய்துக்கொண்டிருக்கக் கண்டு சையித்தூனுடன் சொல்லவும், சையித்தூன் அவ்விடம் கப்பலை நிறுத்தி அவர்களை எனக்குக் காண்பியென்று சொல்லவும், பின்பு கப்பலை அம்மலையோரத்தில் நிறுத்தி கீழேயிறங்கிப் பார்க்கையில் அந்த ஏழு காவலாளிகளும் கழுத்தில் பூனூலணிந்து நித்திரை செய்துக்கொண்டிருக்கக்கண்டு, சையித்தூன் உமறைப்பார்த்து தீவிரமாகப்போய் அவர்களை எழுப்பி என்னுடன் சண்டைசெய்ய அழைத்துவாவென்று சொல்ல, கூடனே யெழுந்து அவ்விடம்போய் அவர்களைப் பார்க்கையில் அவர்கள் உல்லாச நித்திரைசெய்து அசந்து நினைவற்ற தூக்கமாகத் தூங்கிக்கொண்டிருக்கக்கண்டு, ஒரு கல்லையெடுத்து ஒருவன்பேரில் போட்டார். அவனதைச் சட்டைசெய்யவில்லை.

பின்பு கத்தியையெடுத்து அவன் விலாவின்புறமாகக் குத்தினர் அதனாலவன் ஒருக்கணித்துத் தன் கண்ணைத்திறந்து பார்க்கையில் ஒரு மனிதன் தலையின்புறமாக நிற்கக்கண்டு தழுவிப்பிடிக்க எழுந்தான். அப்போது உமர் குதித்தோடிவந்து சையித்தூன் கிட்டே நின்று நான் அவனை யெழுப்பினேன் அவன் என்னைப் பிடிக்கவந்தான். நானோடிவந்து விட்டேனென்று சொன்னார். அந்தச்சமயத்தில் முதல்காவல் காவற்காரன் சையித்தூனெதிரில் வந்துநின்று மல்லமர்ச்செய்ய வாவென்று கூப்பிட்டான். அப்போது சையித்தூன் அவனுடன் மல்லமர்ச்செய்து ஒருவர்க்கொருவா தள்ளினர்கள். கடைசியில் சையித்தூன் அவனைக் கீழேதள்ளி மிதித்துக்கொண்டு, நீ இப்போது கலிமா ஓதுவாயானல் உன்னுயிர்பெற்று இன்னம் சிலகாலம் உலகத்திலிருப்பாய். இல்லாவிடில் உன்னுயிரையுமிழந்து நரகவாதியாய்ப் போவாயென்று சொல்ல, பயந்து உடனே கலிமாஓதி ஈமான்கொண்டு இசுலாம் சொன்னர்கள். அச்செய்தியை அரசன் கேட்டு மிகுந்த சந்தோஷத்தோடு சந்திக்க வந்தார். அங்கு முகம்மதனிபைப் பார்த்து தாங்கள் என்னுடன் சிலவசனங்கள் பேசி தங்கள் முகத்தை நான் பாக்கும்படி காட்ட வேணுமென்று இன்புற்றுக் கேட்க, அதற்கு முகம்மது அனிபு உமரைப்பார்த்து இவரென்ன சொல்லுகிருரென்று கேட்டார். அதற்கு உமர் இவ்வரசனைச் (சையித்தூன்) கீழே தள்ளி இவனைக் கெலித்தபடியால் அப்பொழுது இவா (சையிக்தூனைப்) பார்த்து தங்கள் முகத்தைப்பார்க்கவேணும் காட்டுமென்று கேட்டதற்கு, நான் திரும்பி வரும்போது காண்பிக்கிறேனென்று சொன்னங்கள். ஆனதால் இப்பொழுது தங்கள் முகத்தைக் காட்டச்சொல்கிருனென்று சொல்ல, அப்பொழுது முகம்மதனிபு தன் முகத்தை அவ்வரசனுக்குக் காண்பித்தார். அவ்வரசன் முகத்தைப்பார்த்து அதிக சந்தோஷங்கொண்டு கட்டுகளில் பொன் வெள்ளி முத்துமணி முதலியவைகளைக் காணிக்கையாகக்கொண்டு வந்து எதிரில் வைத்தார். அவைகளை எடுத்துக்கொண்டார்கள். பின்பு இராசன் அவர்கள் போகும்படி உத்திரவு கொடுத்துவிட்டார். அப்போது கூடப்போய் அவனுடைய காதில் மெதுவாக, ஓ ராஜனே! சண்டைசெய்து உன்னை கெலித்தது இவருடைய மனைவி சையித்தூனென்று சொல்லியதை கஹர்பாது கேட்டு அதிக வெட்கங்கொண்டு, இச்சொல்லை யாருக்கும் சொல்லாதேயென, அதற்கு உமர் எனக்கு ஏதாவது கொடுத்தால் யாருடனுஞ்

சொல்ல, இதேபடி ஒவ்வொருவனாக உமர் எழுப்ப, அவர்களைச் சையித்தூன் கெலித்துக்கெலித்துஏழுபேரையும்இசுலாமாக்கிவிட்டார்கள். பின்பு அவர் கழுத்திலிருந்த பூணூல்களையும் அறுத்தெறியும்படி செய்துவிட, அப்பொழுது அந்த ஏழுபேரும்சையித்தூனைத் பார்த்து தங்களுடைய பெயரையும் தங்கள் முகத்தையும் காண்பிக்கவேணும். எங்களைத் தள்ளி கெலித்தபடியினாலே நாங்களெல்லாம் தங்களுடைய குலாமாயிருக்கிறோமென்று சொல்ல, அதற்கு சையித்தூன் நான் ஷாஹேபரியினிடத்திற்குப் போய்த் திரும்பிவரும்போது என்முகத்தைக்காண்பிப்பேனென்று சொல்ல, அதற்கு அவ்வேழுபேரும் எங்களுக்குக் கரியாபரி இவ்வழியாக ஏதாவது கப்பல்கள் வருமாகில் அதுகளை இவ்விடத்தில்தானே முழுகடித்துப் போங்களென்று கட்டளையிட்டிருக்கிறாள். அதனால் நாங்கள் இவ்விடத்தில் காவலிருக்கிறோம். ஆகையால், அவ்வேலையை உங்களிடத்திற்செய்ய எங்களால் எவ்வளவுமாகாது. இப்போது நீங்களெல்லாம் கப்பல்மேலேறிக் கொள்ளுங்கள். நாங்களும் உங்கள் கூட வருகிறோம். உங்களையெல்லாம் அப்பட்டணத்திற் கொண்டுபோய் விடுகிறோமென்று சொல்ல, உடனே மறுபடியுங் கப்பலேறிப்போகும்போது அக்கரையினது பட்டணமுந் தெரியலாயினது. அவ்விடத்தில் கப்பலை நிறுத்தி எல்லோரும் கீழேயிறங்கிக் கூடாரங்களடித்து அதற்குள்ளிருந்தார்கள். அவ்வேளையில் கூடவந்த காவலாளிகளெல்லாம் சையித்தூனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு (ஷாஹேபரி) யிடத்திற்குப் போய்வந்த சங்கதிகளும் நடந்த சங்கதிகளும் ஆதியோடந்தமாகத் தூதர்கள் சொல்லக் கேட்டு, உடனே (ஷாபரி) தன்னுடைய மந்திரியை யழைத்து, நீபோய் அவர்களை இங்கே அழைத்துவாவென்று விடைகொடுக்க, உடனே மந்திரி சையித்தூனுடைய கூடாரத்தின் கிட்டேபோய் உள்ளே நுழையப் போனான்.

அப்போது வாசற்படிக்குக் காவற்காரராகிய உமர், நீ யார்? உத்திரவில்லாமல் உள்ளேபோகத் துணிந்தாயென்று கேட்க, அதற்கு மந்திரி நான் ஷாபரியினுடைய முதல்மந்திரி. இவரை அழைத்துவரும்படி உத்திரவாயினது. அதற்காக நான் வந்தேனென்றுசொல்ல, அதற்கு உமர் நீ மறைவின்றிப் போகலாகாதென்றுசொல்ல, அதற்கு மந்திரி பரிகளுக்கு மறைவு ஒன்றுமில்லை யென்று சொல்ல, அதற்கு உமர் நீ வெளியே நில்லு. நான்

போய் உத்திரவுபெற்று வருகிறேனென்று சொல்லி நிறுத்திவிட்டு இச்சேதியைச் சையித்தூனுக்குப் போய்ச் சொல்லினர். அச் செய்தியை சையித்தூன் கேட்டு சீக்கிரமாக முழுகி பெண்ணுடைகளையெல்லாம் எடுத்துக்கட்டி நகைகளும் அணிந்துகொண்டு தலைமேல் துப்பட்டியில்லாமல் வந்த மந்திரியின்கூடச் சேர்ந்து இருவருமாம் அரசன் சிம்மாசனத்திற்கு முனன்மாகப் போய் ஷாபரியைக் கண்டு, சையித்தூன் சலாம் செய்யவும், அப்போழுது ஷாபரி பார்த்து, உன்பெயரென்ன? என்று கேட்க, அதற்கு என்பெயர் சையித்தூன். நான் நபிசல்லல்லாகு அலைகிவசல்லமுடைய மருமகள். என்னை அலிறலியல்லாகு தங்களிடத்திற் கனுப்பி வைத்தாரென்று சொல்ல, ஷாபரிகேட்டு சர்வரே ஆலத்தின்பேரில் தறாதோதி, ஓ சையித்தூனே! உன் தலைமேல் ஏன் துப்பட்டியிடவில்லை. திறந்த தலையாக வந்தாயென்று கேட்க, அதற்கு சையித்தூன் என் தலையை மூடும் துப்பட்டி உன்மகள் வூட்டி லிருக்குதென்று சொன்னுங்கள். அதை ஷாபரி கேட்டு அதிக கோபங்கொண்டு, உடனே தன் மகளையழைத்து, நீ என்ன காரணத்திற்காக மனிதனை யெடுத்து வந்தாய்? ஆகையால் அவரைச் சீக்கிரமாக இங்கு கொண்டுவா வென்று கண்டிப்பான உத்திரவு கொடுத்தான். இங்கே கரியாபரி முகம்மது அனீபை எடுத்துக்கொண்டுபோய் என்ன செய்ததெனில், கொண்டுபோன நாள்முதலாக நாள்தோறுந் தவறுமல் நீஎன்னுடன் சேர்வாயாகில் ஒடிந்துபோன காலுக்கு மருந்திட்டுச் சொஸ்தப்படுத்துவேனென்று கலைத்துக்கொண்டேயிருப்பாள். அதற்கு முகம்மது அனீபு இவ்வேளை என்னுலாகாதென்று அவள் சொல்லை ஒப்பாமலே தடுத்துக்கொண்டே யிருந்தார். அதற்காக வேண்டி அவள் அவர் காலைச் சொஸ்தப்படுத்தவேயில்லை, முகம்மது அனீபுக்கு நாளுக்குநாள் வருத்தம் அதிகமாகிக்கொண்டே யிருந்தது.

முகம்மது அனீபை மீட்டுவருதல்

இன்னமதனுல் உடலெல்லாமுருகி இரம்பவும் கரைந்து போனர். பின்பு கரியாப்பரி தகப்பன் சொல்லியபடி கட்டிலின் மேல் முகம்மது அனீபைவைத்து தகப்பனுக்கு முன்னுகக் கொண்டு வந்து வைத்தான். உடனே பாதஷா முகம்மது அனீபை சையித்தூனிடத்தில் ஒப்பித்துவிட்டு நீ உன் புருஷனைச் சுகமாக அழைத்துக்கொண்டு போவென்றுசொல்ல, சையித்தூன் முகம்மதனீபிருக்கிற ஹாலைப்பார்த்து மனக்கலக்கிப் பெருமூச்சு விட்டு அறைந்து மோகி அக்கட்டிலின்மேல் போய்வீழ்ந்து புரண்

டழுது ஷாப்பரியைப்பார்த்து உலகத்தில் இதற்கு மருந்தில்லையா? என்று கேட்க, அதற்கு ஷாபரி இதற்கு இங்கே மருந்திருக்கிற தென்று சொல்ல, அதைக்கேட்டு சையித்தூன் இப் புண்ணை யாற்றுவது உன்பேரில் கடனுயிருக்குமென்று சொல்லி, பின்னும் சர்வரே ஆலத்தினுடைய கிருபையும் அலியாருடைய கிருபையு மூண்டாகுமென்று சென்று, அப்போது பரிகளுடைய வாசனுகிய (ஷாபரி) பரிகளைப்பார்த்து இன்னகாட்டில் இன்னபுல்லிருக்கின் றது. அதைக் கொண்டுவந்து சீக்கிரமாக மருந்துசெய்து அப் புண்ணின்மேல் கட்டுவீர்களாகில், அந்த ஆலாவினுடைய கிருபை யினல் உடனே அவன் ரூஹத்துச் செய்துவிடுவான். அம் மருந்தை மூன்றுநாள் வரைக்கும் ஒரு கட்டாக்கட்டி அதை யவிழ்த் தெறிந்துவிட்டு பின்னும் மூன்றுநாள் வரைக்கும் வேறு மருந்தைக்கட்டி அதையும் அவிழ்த்தெறிந்துவிட்டு பின்னும் மூன்றுநாள்வரைக்கும் அதேமருந்து வைத்துக் கட்டினல் சதை தோல் முதலியதுங் கூடிப்போகுமென்று சொல்ல, உடனே (ஷாப்பரி) சொன்னபடியே அக்காட்டிற்குப்போய் அம்மருந்தைக் கொண்டுவந்து விட்டுவிட்டு மூன்றுமுறை ஒன்பது நாளிற்குள் ளாக ஒடிந்த எலும்புகளெல்லாம் ஒன்றுய்க்கூடி சதையும்வளர்ந்து தோல் மூடிக்கொண்டு புண்ணுலர்ந்து நன்றுய்விட்டது. பின்பு சையித்தூன் 40-நாள் வரைக்கும் அவ்விடமேயிருந்து முகம்மது அனீபுக்கு வல்லமையும் முன்வடிவும் வரும்படியாக நல்ல நல்ல சோறு கறிகளாக்கி உண்ணக்கொடுத்து பலமும் அழகும் வரும் படிச் செய்து, பின்பு (ஷாப்பரியிடத்தில்) தங்கள் பட்டணம் போக விடைபெற்றுக்கொண்டு முகம்மதனீபு தன் ஆயுதங்களை யெல்லாம் பூட்டிக்கொண்டு சையித்தூனை மறைவினுள் வைத்து விட்டார். பின்பு சகல படைகளையும் கப்பலேறச்சொல்லி தானுங் கப்பலேறி மாலுமியைக் கூப்பிட்டுப் பாய்விரிக்கும்படி உத்திரவுச் செய்ய, உடனே மாலுமி பாய்விரித்துக் கப்பலை ஓட்டினன். அக்கப் பல் ஓடிவந்து முதல் காவலாளிகளுள்ள மலையின்கிட்டே வந்தது. அப்பொழுது அக்காவலாளிகள் 7-பேரும் ஓடோடியும் வந்து எதிர் கொண்டார்கள். அப்பொழுது முகம்மது அனிபு அவர்கள் படைப்பைக் கண்டு, இதென்ன முசிபத்தாகிய புதுமையாயிருக் கிறதென்று சொல்ல, அதற்கு உமர், ஓ இமாமே! இவ்வேழு பேரையும் சையித்தூன் கீழே தள்ளி இவர்களை ஈமான் கொள் ளும்படி இசுலாமாக்கியிருக்கிறுர்கள். ஆனதால் இவர்கள் தங் களைக் காண வந்தார்களென்று சொல்ல, அதுகேட்டு முகம்மது

அனீபு அதிசயப்பட்டார். பின்பு அந்த ஆலாவைப் புகழ்ந்து, என்னுயனே! நீ சையித்தூனுக்கு அதிக வல்லமையைக் கொடுத்தாயென்றார். இன்னும் எத்தனையோ அரசர்களை அடிமையாக்கியிருக்கிறுங்கள். ஆனுல் இந்த ஆட்டங்களெல்லாம் அல்லாருத்த ஆலாவினுடைய குதறத்தாயிருக்கும். அப்பொழுது அந்த ஏழு பேரு முன்னம் வந்து முகம்மதனிபாவிற்கு சலாம் சொல்லி, அதிக மரியாதையுடனே நின்று, ஒ பாதுஷாவே! உங்களுடன் சில பேச்சுக்கள் பேசவேணும். தங்களுடைய முகத்தையுங் காண்பிக்கவேணுமென்று கேட்க, அதற்கு முகம்மது அனீபு உமரைப் பார்த்து, இவர்களென்ன கேட்கிறார்களென்று சொல்ல, அதற்கு உமர், ஒ இமாமே! திரும்பிவரும்போது முகத்தைக் காண்பிக்கிறேனென்று சையித்தூன் சொல்லியிருக்கிறுங்கள். ஆகையால் சந்திக்க வந்திருக்கிறார்கள். தங்கள் முகத்தைக் காட்டு மென்று சொல்ல, அப்பொழுது முகம்மது அனிபு தன் முகத்தின் மேலிருந்த திரையை நீக்கி முகத்தை அவர்கள் பார்க்கும்படி காண்பித்தார். அந்த ஏழுபேரும் முகத்தைப் பார்த்து அதிக சந்தோஷங்கொண்டார்கள். பின்பு வேண்டிய முத்துமணி முதலிய நவரத்தினங்களைக் கப்பலில் கொண்டுவந்து நிரப்பினுர்கள். அப்போது உமர் அவர்களைப்பார்த்து நீங்கள் கொடுப்பதையெல்லாம் என்னிடத்தில் கொடுங்கள். நான் பத்திரப்படுத்தி வைக்கிறேனென்று சொல்ல, அவர்கள் அதேபடி கொடுத்தார்கள். அதுகளையெல்லாம் உமர் வாங்கி பட்டுவாக்குள்ளிட்டு முகம்மது அனிபாவின் முன்னங் கொண்டுவந்து வைத்தார். பின்பு அவர்களிடத்தில் விடைபொற்றுக்கொண்டு அவ்விடம்விட்டுப் பாய்விரித்து கப்பலையோட்ட நாடினுர்கள். அந்தச்சமயத்தில் உமர் அவ்வேழுபேரையும் பார்த்து உங்களுக்கு ஒரு ரகசியமானசெய்தி சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லினுர். அதென்னவெனில்: உங்களை கீழே தள்ளி கெலித்தது இவருடைய பெண்சாதி சையித்தூனென்று சொல்ல அதுகேட்டு அவர்களேழுபேரும் நாணங்கொண்டு ஆஹா! நம்மைக்கெலித்தது பெண்பிள்ளையாயிருக்க, இந்தச்செய்திகளை நம்முடைய இனத்தார்கள் கேட்டார்களாகில் இகழ்ச்சி செய்வார்களேயென்று இரம்பவும் வெட்கித் தலைகவிழ்ந்து உமரைப் பார்த்து, நீ இந்தச்சங்கதிகளை யாருக்குஞ் சொல்லி எங்கள் வெட்கத்தை வெளியாக்காதேயென்று சொல்லி வேண்டிய பணங்களைக் கொடுத்தார்கள். உமர் அவைகளைக் கொண்டு கப்பலை யோட்டினுர்கள்.

இப்படி சிலநாள்வரைக்குங் கடல்மேல் கப்பலோடி வந்தது. கடைசியில் கஹர்பாது இராசாவினுடைய எல்லைக்குச் சரியாக கப்பல் வரவும், அங்கே லங்கர்செய்து கப்பலைநிறுத்தி அதிலிருந்த பேர்களெல்லாங் கப்பலைவிட்டுக் கீழேயிறங்கிக் கரைவந்துசேர்ந்து இரண்டுநாள்வரைக்கும் நடந்து, அந்த இராசாவினுடைய கோட்டைக்குச் சமீபத்தில் கூடாரங்களடித்து, சகல படைகளுடன் முகம்மது அனிபு இறங்கினார். அப்போது தூதர்களோடி ககர்பாது ராஜாவிற்கு முகம்மதனிபு இன்று வந்திருக்கிறாரென்று சொன்னார்கள். அச்சேதியை அரசன் கேட்டு சொல்லாதே யென, அதற்கு உமர் எனக்கு ஏதாவது கொடுத்தால்யாருடனுஞ் சொல்லேனென்றுஞ் சொல்ல, அப்போது அவருடைய பட்டுவா நிறைய பணத்தை வாரிக்கொடுத்தான் அதை அவர் வாங்கிக் கொண்டு தன்னிருப்பிடத்திற்கு வந்துவிட்டார். பின்பு முகம்மது அனிபு தன் சேனைகளோடு அப்பட்டணத்தைவிட்டு தேராஜாவினுடைய பட்டணம்வந்து சேர்ந்து வெளியில் கூடாரமடித்து தன்படைகளோடு இறங்கினார்.

இவர்கள் வந்ததைத் தூதர்கள்கண்டு ஒடோடியும்போய் தேராஜாவுக்குச் சொல்ல, இராஜன் கேட்டு மிகுந்த மகிழ்வோடெழுந்து, முகம்மதனிபு இடத்திற்கு வந்து சலாம்செய்து, மிகுந்த அதப்புடனே எதிரில் நின்று, தங்களுடைய முகத்தைக் காட்டவேணுமென்று கேட்க, அப்போது முகம்மது அனிபு உமரைப்பார்த்து என்ன சொல்கிறாரென்று கேட்க, அதற்குஉமர் முன்னால் சையித்தூன் இவருடன் சண்டைசெய்து கீழேதள்ளி கெலித்திட, அப்போது உன்முகத்தைக் காண்பிக்கவேணுமென்று கேட்டதற்கு நான்போய் திரும்பிவரும்போது இங்குவந்து அப்போது என்முகத்தைக் காட்டுகிறேனென்றுசையித்தூன் சொல்லி வந்தபடியால் இப்போது அவங்கள்தானென்று தங்கள் முகத்தைக் காண்பித்திடு மென்றுசொல்ல, அப்போது முகம்மது அனிபு தன் முகத்தின் வடிவைக் காட்டினார். அதுகண்டு தோராஜன் அதிக சந்தோஷங்கொண்டு தட்டுகள் நிறைய நிதிகளை நிறப்பிக் காணிக்கையாகவைக்க, அவைகளை முகம்மதனிபு எடுத்துக் கொண்டு அதிக சந்தோஷமடைந்தார். பின்பு உமர் தேராஜன் கிட்டேபோய் காதோடு வாயைவைத்து உன்னோடு சண்டை செய்து உன்னைக் கீழேதள்ளி கெலித்துக்கொண்டது இவருடைய பெண்ஜாதி சையித்தூனாயிருக்குமென்று சொல்ல, அச்சொல்லை தேராஜன் கேட்டு நீ இப்பேச்சை வெளியில் யாருடனும் சொல்ல வேண்டாமென்று சொல்ல, அதற்கு உமர் ஆனால் நீ இனும்

கொடுப்பாயாகில் நான் யாருடனும் சொல்லாமல் மறைத்து வைப்பேன். இல்லாவிடில் எல்லாருக்கும் சொல்லிவிடுவேன். அதனாலுன் வெட்கம் வெளியாய்ப்போகுமென்று சொல்ல, அது கேட்டு தேராஜன் தங்கக்காசு இனுமாகக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு உமர் சந்தோஷமாகினர்

பின்பு அவ்விடம்விட்டு விடுதிகளாக இறங்கி நடந்துபோய் மீஆதுராஜனுடைய எல்லை அடுத்து கோட்டைக்கடுத்தாப்போல் கூடாரங்களடித்து சகலபேருமாக இறங்கினர்கள். தூதர்களோடிப்போய் மீஆதுக்கு இச்செய்தியை அறிவித்தார்கள். இச்செய்தி மீஆதுராஜன் கேட்டு அதிக மகிழ்வோடு இங்குவந்து சலாம் சொல்லி தாங்கள் திரும்பிவரும்போது முகத்தைக்காண்பிக்கிறதாகச் சென்னீரே. இப்போது நான் பார்க்கும்படி முகத்தைக் காட்டவேணுமென்றுசொல்லிட, அப்போது முகம்மது அனிபு தன்வதனத்தைக் காண்பிக்கக்கண்டு அதிக சந்தோஷமாயினர். பின்பு தட்டுகள் நிரப்பி அளவற்ற பணங்களைக் காணிக்கையாக எதிரில் வைக்கவும், அவைகளை முகம்மதனிபு எடுத்துக்கொண்டு அதிக மகிழ்வடைந்தார். பின்பு அவரிடத்தில் போகவிடை பெற்றுக்கொண்டார். அப்போது உமர் மீஆதுடனே பின்தொடர்ந்து போய் அவன் காதில் தன் வாயைவைத்து உன்னோடெதிர்த்துச் சண்டைசெயது கீழேதள்ளி உன்னைக் கெலித்தது இவருடைய பெண்சாதி சையித்தூனு மிருக்குமென்று சொல்ல, அதுகேட்டு மீஆது அதிக விசனங்கொண்டு முகம்வாடி, ஓ உமரே! நீ இப்பேச்சை யாருடனும் வெளிப்படுத்தாதேயென்று சொல்ல, அதற்கு உமர நீ என்மனதை சந்தோஷிக்கும்படி செய்வாயாகில் நான் யாரோடும் சொல்லேனென்று சொன்னர். உடனே வேண்டுமான இனுங்கள் கொடுத்தார். அதை உமர் வாங்கிக் கொண்டு தன்னிருப்பிடமாகப் போய்ச்சேர்ந்து அன்று அவ்விடம் விட்டு நடந்தார்கள். இப்படி சிலநாள்வரைக்கும் விடுதிவிடுதியாக இருந்துபோகையில், அங்கு இரண்டுவழி பிரிவாயினது. ஒன்று மதீனத்திற்குப் போகிறபாதை. • ஒன்று ஹிறமிற்குப் போகிற பாதை. அவடத்திற்போயிறங்கி தாங்கள்வந்த நாள்களைக் கணக்கிட்டுப் பார்க்கையில் சரியாக 7-வருஷம்நிரப்பமாய்விட்டது. அப்பொழுது அஸ்காபுகளெல்லாம் முகம்மதனிபைப்பார்த்து நாம் வந்து வெகுநாளாய்விட்டது. இனி மதீனத்திற்குப் போவோம் வாருமென்று சொன்னர்கள். அதற்கு முகம்மது அனிபு நான் இறமிற்குப் போகாமல் மதீனம்போகிறதில்லையென்று சத்தியம் செய்துகொண்டு இருக்கிறேனென்று சொன்னர். அதை

அஸ்காபுமார்கள் கேட்டு தாங்கள் மதீனம்போக நாடியிருந்த நினைப்புகளை மாற்றி இறமெனும் பட்டணம் எப்படியிருக்கின்றதோ அதையும் போய்ப் பார்த்து வருவோமென்றும் எல்லாரும் ஒரே மனதாயினார்கள். அப்பொழுது எல்லாருங்கூடி ஆளுக்கொரு கடிதமெழுதி உமர் கையில் கொடுத்து மதீனத்திற்கு அனுப்பி வைத்தார்கள். முகம்மது அனிபு தன் தகப்பனுக்கும் ஒரு கடிதம் எழுதி யனுப்பினார். உமர் இக்கடிதங்களெல்லாம் வாங்கிக்கொண்டு கடுநடையாக நடந்து சில நாளிற்குள்ளாக மதீனம் வந்து சேர்ந்து, அவரவர் காகிதங்களை அவரவர் வீட்டில் கொடுத்துவிட்டார். எல்லாரும் கடிதங்களை ஓடித்து வாசித்து அதிலுள்ள பயன்களை அறிந்து சந்தோஷப்பட்டார்கள். பின்பு உமர் எல்லாருக்கும் வாய் விசளமாக அங்கே நடந்த சங்கதிகளெல்லாம் ஒன்றுந் தவறாமல் ஆதியோடந்தமாகச் சொல்லினார்.

முகம்மது அனிபு ஹிறமிக்குப் போகுதல்

உமரை மதீனத்திற்கு அனுப்பி வைத்துவிட்டுப் பின்பு முகம்மதனிபு தன்னுடைய 12000 - அஸ்காபு மார்களையும் அழைத்துக்கொண்டு விடுதிவிடுதியாகச் சென்று ஹிரமின் கோட்டைக்கு அடுத்தாப்போல கூடாரங்களடித்து இருந்தார்கள். அவர்களைக் காவலாளிகள் கண்டு ஓட்டோடியும்போய் பாதஷாவின் முன்னமாக நின்று மிகுந்த சங்கையுடனே முன்னால் காலொடிந்து போனவன் தன் கால்களைச் சுத்திசெய்து கொண்டுகூட 12000 - குதிரைப் படையுடனே நம்முடைய கோட்டையினருகில் கூடாரங்களடித்து இறங்கியிருக்கிறார்களென்று சொல்ல, அதைப் பாதஷா கேட்டு, நல்லது நல்லது, காலமைக்கி யாதொரு வேலையும் பார்ப்போமென்று தூதர்களுக்குச் சொல்லி, பின்பு மந்திரிமார்களைப்பார்த்து பொழுது விடிவதற்குள்ளாக நம்முடைய படைகளையெல்லாம் சேர்த்து தயார் செய்துவிட்டான். பின்பு பொழுது விடிங்கவுடனே சண்டை வாத்தியங்கள் முழங்கும்படி கோட்டையைவிட்டு வெளியில் வந்து மயிதானில் அணியணியாக நின்றார்கள். அப்பொழுது முகம்மது அனிபு தன் படைகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தானும் மயிதானில் வந்து அணியாகப் படைகளை வகுத்து நின்றார்.

அலங்காரக்கண்ணி

இரண்டுபடைகளும்சமுத்திரம்போல்-எதிர்த்துநிற்கையிலே
இரமின்படையிலிருந்தொருவீரன் எழுந்தான்புலிபோல

ஆங்காரங்கொண்டுபடைமுன்வந்தான் ஆண்மைமிகப்பேசி
அந்தவேளையில்முகம்மது அனிபு அஸ்காபமாரொருவர்
பந்தயங்கூறிப்பாவிமூன்னுகத் தன்பரியேதான்விட்டார்
பூமியதிர்ந்திடவிட்டார்குதிரையைப் பெரியசிங்கம்போலே
வந்ததைக்கண்டுஎதிர்த்தான்பாவி எலியைப்புலிபோல
ஒருவருக்கொருவர்வல்லமைசெய்து ஓங்கிவாளாலே
விட்டாரிரண்டுதுண்டாய் வீழ்ந்தான்வீரசூரபுலி
அதன்பின்னெருவன்வந்துஎதிர்த்தா ஞங்காரம்பேசி
அவனையும்வெட்டிகாகுக்கிரையா யனுப்பினாரப்போ
பின்னுமொருத்தன்வந்தானங்கே புலிபோல்தான்சீறி
துண்டாய்விழுந்திடவெட்டினாரவனை சூரர்கைவாளால்
இப்படியாகவந்தாரெல்லா மிறந்தார்கைவாளால்
கடித்தான்பல்லைநெறநெறவென்று கண்கள்நெருப்பாகி
கண்கள்ரெண்டும்சிவந்துபோச்சு இரமின்ராசாவுக்கு
மீசைகள்படபடவென்னதுடித்தது இரமின்ராசாவுக்கு
கைகளைமுறித்தான்கோபங்கொண்டு கனத்தமுடிராஜன்
இப்படிநம்முடபடைகளைக்கொன்ருர் இரக்கங்களில்லாமல்
ஆனாலாகட்டுமெப்படிதப்புவார் அறபுதேசத்தார்கள்
என்றுசொல்லிப்பல்லைக்கடித்தான் இரமின்ராசாவும்
மந்திரிமார்களேயிந்தவேளையில் மனது துணியவேணும்
பிந்திப்போவோமானுலிப்போ பேடியாகவேணும்
நம்முடையப்படைகளேஒன்ருய்க்கூட்டும் நல்லதரணவேளை
ஓரேமுகமாய்த்தாக்கிடவேணும் ஓடியவர்கள்போக
அந்தச்சொல்லைக்காதிலேகேட்டு அப்போபடைவீரர்
விழுந்தாரெல்லாமொன்ருய்க்கூடி வெள்ளக்கடல்போல
அந்தவேளையிலென்னசெய்தார் அறபுப்படையோர்கள்
நாலுமூலையும்புலிபோல்புகுந்தார் நடந்தபெரியசண்டை
ஒருபுறம்உமறலிபுகுந்தார் வெட்டவுருவினுர்கத்தி
ஒருபுறம்தாலிபலியும்புகுந்தார் உருவிகையில்கத்தி
ஒருபுறம்சையித்தூன்புகுந்தார் புலிபோல்உருவிகையில்கத்தி
ஒருபுறம்அசுஹாபமார்கள்புகுந்தார் உருவிகையில்கத்தி
இப்படிநாலுபுறமும்வெட்டினுர் ஒன்றுந்தெரியாமல்
துண்டுதுண்டாய்விழுகுதுபிணங்கள் சூரர்கைவாளால்
குப்பல்குப்பலாகவேயெங்கும் குவிந்தார்மலைபோல 7
ஆருயோடிப்போச்சுதுரத்தம் அவனிதெரியாமல்
கட்டுமரங்கள்போலப்பிணங்கள் மிதக்குதுகண்டதூரம்
தயிரின்குடம்போல்மூளைகள்சிதறி தரையெல்லாஞ்சிந்த
வெட்டிவெட்டிக்குவித்தார்காபரை வெம்படைத்தலைவீரர்

கையொருபக்கம்காலொருபக்கம் காணக்குவிந்துபோச்சு
தலையொருபக்கம்உடலொருபக்கம் தரையில்குவிந்துபோச்சு
குதிரைகள் துண்டு துண்டாய்குவிந்தது கொற்றவர்கள்கைவாளால்
காகம்பருந்துக்குவிருந்துகளளித்தார் கழுகுகொத்தித்தின்ன
தண்டமுறிந்ததுகத்திமுறிந்தது சக்கராமுறிந்துபோச்சு
சண்டைக்குவந்தவீரர்கள்பேசிய தைரியம்ஓடிப்போச்சு
இனியென்னசெய்வொமென்றுநின்று எண்ணமிடுவாரும்
பெண்டுபிள்ளைகள் தன்னைநினைத்துப் புலம்பிஅழுவாரும்
எங்கேயோடிப்பிழைப்போமென்று யோசனைசெய்வாரும்
படைகளெல்லாமாண்டுபோச்சுதே போவோமென்பாரும்
வாய்நீர்காய்ந்துஒடினுரெல்லாம் வெட்டிடமுடியாமல்
எதிர்த்திட அஞ்சிஒடினுரெல்லாம் ஏத்தமிகவாகி

வசனம்

இவ்விதமாக இரண்டு படைகளும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்கள் செய்யும் சமயத்தில், சூரியன் மேற்புறமாகப்போய் மறையவும் இருள்வந்து மூடிக்கொண்டது. அப்பொழுது இரண்டு படைகளும் சண்டையை நிறுத்தி அவரவரிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அன்று முகம்மது அனிபாவினுடைய சேனையில் ஒருவரும் மவுத்தாகவில்லை. ஆனல் ஒருவருக்கு மாத்திரம் காயம்பட்டது. இரமின் சேனையில் அனேகம் பேர்கள் மடிந்து நரகமடைந்தார்கள். அன்றிரவு ஷாஹேஹிறம் தன்னுடைய மந்திரிமார்களை அழைத்து, நம்முடைய வெட்கமீருமான யோசனைகள் செய்யுங்கள். இல்லாவிடில் அவர்கள் ஆங்கரித்துப்போவார்களென, அதற்கு மந்திரிமார்கள் அரசருக்குத் தைரியம் வரும்படி அநேக வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை நாம் ஒரு தந்திரத்தினல் கொல்லவேணு மென்று சொல்ல, அதற்கு பாதஷா எவ்விதமாக வெல்லுவதென்று கேட்டான். அதற்கு மந்திரிமார்கள், ஒ பாதுஷாவே! அவர்கள் எச்சரிக்கையின்றி இராக்காலங்களில் ஏமாந்து தூங்குவார். அந்நேர வேளையில் நாம் நம்முடைய படைகளெல்லாஞ் சேர்ந்துபோய் வீழ்ந்து வெட்டுவோமாகில், அவர்களெல்லாம் மடிந்துபோவார்கள். நாம் கெலித்துக் கொள்ளலாமென்று சொல்ல, அரசன் கேட்டுச் சம்மதித்து அதேபடி உடனே தங்கள் சேனைகளெல்லாம் ஒன்றாகக் கூட்டி வெளியே புறப்பட்டார்கள். அன்றிரவு முகம்மது அனிபும் அவருடைய படைகளும் சோறுண்டு இச்சூதுக ளொன்றுந் தெரியாமல் ஏமாந்து எல்லாம் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். அந்நேரவேளையில் எகாயகியாய்போய் வீழ்ந்தார்கள். அப்போது

முகம்மது அனிபுடைய படைகளெல்லாம் காபரிபட்டு தயிர்க்குடம் போலச் சிதறி கிழக்குமாக நாலுதிக்குஞ் சிதறிப்போனார்கள். முகம்மதனிபும் கோட்டை அகழில்போய் வீழ்ந்துவிட்டு அதனுள் ளிருந்து ஒருசத்தமிட்டார். அப்பொழுதொரு மலக்கு (யா அலியே) உன்னுடைய பிள்ளை முகம்மதனிபு கோட்டையின் அகழில் இன் றிரவில் வீழ்ந்துவிட்டார். இது பொய்யல்ல. உண்மையாயிருக்கும். நீ சீக்கிரமாக யிப்போதே வெளிப்பட்டு கூட உமரையும் அழைத் துக்கொண்டு ஹிரமிற்குப்போகுமென்று சொன்னார். அச்சொல் லைச் கேட்டவுடனே அலிறலிஅல்லாகு குதிரைக்குச் சீனிகட்டி சுல்பக்கார் கத்தியைக் கையிற் பிடித்துக்கொண்டு குதிரைமே லேறி மின்மின்னினாற்போல இரமிற்கு வந்துசேர்ந்து ஒரு சத்த மிட்டார். அந்தச் சத்தத்தினாலே அந்தப் பாதஷா சிம்மாதனத் தின் மேலிருந்து துள்ளிப்பயந்து கீழே வீழ்ந்துவிட்டான். இன் னம் அந்தச் சத்தத்தை அசுஹாபுமார்களெல்லாங் கேட்டு, இது அலியாருடைய சத்தமென்று சந்தோஷமாயினார்கள். முகம்மது அனிபை அகழியைவிட்டு வெளியே யெடுத்து குதிரையின்மே லேற்றினார்கள். முகம்மது அனிபும் சையித்தூனும் தாலிபலியும் உமர்அலியும் அலிறலிஅல்லாகுவைக்கண்டு சந்தித்தார்கள். அதற் குள்ளே பொழுதும் விடிந்துவிட்டது. அப்பொழுது அலிறலி அல்லாகு துல்துலின்மேலேறி சுல்பக்காரை கையில்வாங்கி அக்கா பருடைய படைக்குட்புகுந்து கண்டங்கண்டமாகவும் துண்டுதுண் டாகவும் தலைகளும் உடல்களும் மலைபோல் குதிரையும்வீரர்களும் குவியும்படியாகவும் கட்டுமரம்போல இரத்தத்தில் பிணங்கள் மிதக்கவும், ஆறுபோல இரத்தமோடவும் வெட்டி நாசமாக்கினார். அதனால் அந்தப் பாதஷா பயந்து 200-குதிரைக்காரனுடனே கோட்டையை விட்டுவிட்டு வெளியே ஓடிப்போய்விட்டான். அப் பொழுது அலிறலிஅல்லாகு வெட்டுக்கு மிஞ்சின காபர்களையெல் லாம் இசுலாமாக்கிவிட்டார்.

பின்பு அஸ்காபுமார்களுடன் வெற்றிபெற்று கோட்டையி னுள்ளேபோய் அவனைத் தேடிப்பார்க்க அவன் அகப்படவில்லை. உடனே அலிறலிஅல்லா உமரைக் கூப்பிட்டு இவனெங்கேயோ ஓடிப்போய்விட்டான். ஆகையால் நீ அவனைக் கண்டுபிடித்து வாவென்று உத்திரவுகொடுத்தார். உடனே உமர் வெளிப்பட்டுக் காற்றைப்போல வேகமாக நடந்து வழியில் பாதஷாவைக் கண்டு பிடித்தார். அந்த இரமின்பாதஷா தன்னுடன் பிறந்த தம்பிமா

4-பேர்கள் நாலுதேசத்தை ஆண்டுக்கொண்டிருக்கிறார். அங்கே போய் உதவி தேடிக்கொள்வோமென்று போனான். அவன் பின்னடியே அவனுக்கும் தெரியாமல் உமறும் கூடவே போனார். அப்போது தன் தம்பியாகிய (இம்லாக்கு) அதியின் பட்டணம்போய்ச் சேர்ந்து இரண்டுபேரும் தோப்பினுள் உட்கார்ந்து சில சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்து, பின்பு அண்ணாவைப் பார்த்து, ஓ அண்ணா! என்னபலா முசிபத்து உன்னைவந்து பிடித்தது. உன்னுடைய அளவற்ற படைகளெல்லாம் எங்கே மறைந்துபோய்விட்டது? நீ இக்கோலமாக வந்தீரென்று கேட்க, அதற்குத் தம்பியே! கேளும். என்மகள் என்னை இக்கோலம் செய்துவிட்டாள். என்னைக் கெடுத்துப்போட்டாள். இன்னம் இசுலாமானவர்களுடன் கூடி தானும் இசுலாமாய்விட்டாள். இன்னம் நம்ப தெய்வங்களைக் கொண்டு முகந்திருப்பினாள். இன்னம் தெய்வத்தை விட்டுவிட்டோமேயென்றும் கொஞ்சமும் வெட்கமுமில்லை. இன்னம் பிச்சைக்கார முண்டை என்மானத்தையும் போக்கினாள். அவளால் என் வெட்கமும் போய்விட்டது. அவள் இசுலாமாகி என்னைப் பாழ்படுத்தியும் விட்டாள். இன்ன மதீனத்தார்களைக் கொண்டு வந்து நான் ஊரைவிட்டு ஓடும்படியாகவும் செய்தாள். இதனால் நான் அந்த ஹாலாக ஓடி இங்கேவந்தேன். ஆனால் என்னுயிருக்கு ஓரிடம் இருப்புமில்லை. இதனால் என்னுயிர் கலக்கத்தினா லிருக்குது. ஒருவேளை இங்கேயும் தேடிக்கொண்டு வருவார்கள். அப்போது நான் இவ்விடமும்விட்டு ஓடிப்போக வேண்டியதாய்வரும். அவர்கள் என்னை நிசமாக வெட்டாமல் விடுகிறதுமில்லை. எங்கே தாய் தகப்பனுடைய முகபததிருக்கின்றது. இன்னமவர்களுக்கு இசுலாமானவர்களுடைய தோஸ்தியே பெரிதாயிருக்கின்றது. எனக்கு அவள் பின்னால் இப்படிப்பட்ட பகை யெடுப்பாளென்று அறிவேனாகில் அப்போதே அவளைஉயிரோடு வைக்காமல்கொன்று போடுவேன். ஆனால் இப்படிப்பட்ட வருத்தங்கள் வந்து என்னைப் பிடிக்காது. இசுலாமானவர்களும் என்னை வந்து வருத்தஞ் செய்யார்கள் என்று நானாவிதமாகிய பேச்சுகளெல்லாஞ் சொல்ல, அதற்குத் தம்பியாகிய (இம்லாக்கு) நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உன்னுயிருக்கு என்னுயிரைக் கொடுப்பேனென்று சொல்லி கழுத்தோடு சேர்த்துக் கட்டியணைந்து நீ ஒன்றுக்கும் எண்ணப்படாதே. அவர்களுக்கு இங்குவர என்ன வல்லமையுண்டு? அவர்களை நாசமாக்கி விடுவேன் அண்ணா'வென்று சொன்னான். அவைக

ளெல்லாம் உமர் கேட்டுக்கொண்டிருந்து ,தன் தலைமேலிட்டிருந்த குல்லாவைக் கழட்டி கையிற்பிடிக்கவும், இவருடைய உருவம் எல்லாருக்கும் நன்ருய்த் தெரியலாயிற்று. அப்போது உமர் இரவின் ராசாவைப் பார்த்து, நீ எதுவரைக்கும் எங்கள் கையிலகப்படாமல் தப்பித்துக்கொண்டு ஓடுவாய். நீ இப்படி ஓடுவதை நினைத்து உனக்கு வெட்கமும் வரவில்லையே யென்று சொல்ல, உமரைப் பார்த்து கிடுகலங்கி வாய்நீருலர்ந்து, 'ஓ தம்பியே! நான் இங்கு பயந்து வந்தும், இம் மூமேனிகள் என்னை விடாமல் பின் ருடர்ந்தானேயென்று சொல்ல, அப்போது இம்லாக்கு தன் கூட்டத்தார்களைப் பார்த்து இவனை விடாமல் பிடியுங்கள் வெட்டுங்களென்றுசொல்ல, அதை அவன் சேவகர்கள் கேட்டு ஓடோடியும் பிடிக்கப் போனுர்கள். அப்போது உமர் தன் கையிலிருந்த குல்லாவை தலையிலிட்டுக்கொண்டார். உடனே ஒருவர் கண்ணுக்கு தெரியாமல் மறைந்துவிட்டார். அங்கிருந்து நடந்து ஓடி அலிறலி அல்லாகுவிடத்தில்வந்து இரமின் அரசன் இன்னவூரில் அவன் தம்பியினுடைய பட்டணமிருக்கின்றது. அங்கு ஓடிப்போயிருக்கிறுனென்று அங்கு நடந்த சங்கதிகளெல்லாம் ஒன்றுந்தவிராமல் ஆதியோடந்தமாகச் சொல்லினுர். அவைகளையெல்லாம் அலியார் கேட்டு நல்லது அவன் அவ்விடமாயிருக்கிறுன். ஆகையால் நாம் அங்கு போகவேண்டியதாயிருக்குது பேரிகை யடியுங்களென்று உத்திரவு கொடுத்தார். அதேபடி அங்குபோக பேரிகை அடித்தார்கள். எல்லாப் படைகளும் போகத் தயாராகிவிட்டார்கள். காலமேயெழுந்து வழிகளெல்லாம் தொலைத்து விடுதிவிடுதியாக இறங்கி அப்பட்டணத்தின் அருகிற் சொன்ருர்கள்.

அலங்காரக்கண்ணி

காடுமலைகளைத்தாண்டித்தாண்டியே கடுகநடந்துபோனுர
இவர்கள்வருகிறசெய்தியைத்தூதர்கள் ஓடிப்போய்ச்சொன்னுர்
அந்தச்சேதியைக்காதிலேகேட்டு அப்போஇம்லாக்கு
மந்திரிமார்களேதந்திரிமார்களே என்சொல்லைக்கேளும்
சிக்கிரமாகவேநம்முடபடைகளைக்கூட்டி வாரார்சண்டைக்கு
வீரியமாகவேவாரார்சண்டைக்கு வெல்லவேநம்மேலே
என்றசொல்லைக்காதிலேகேட்டு எல்லாமந்திரிமாரும்
படைகளைவரச்சொல்லிப்பேரிகையடிக்கப் பகர்ந்தார்அந்நேரம்
பேரிகைசத்தங்கேட்டார்வீரர்கள் பெரியசண்டைசெய்ய
சமுத்திரம்போலக்கூடினுரெல்லரம் சத்துவமிகப்பேசி
கத்திக்காரர்களுமீட்டிக்காரர்களும் கடுகஓடிவந்தார்

அம்புக்காரர்களும்தண்டக்காரர்களும் அலறிஓடிவந்தார்
பட்டாக்காரர்களும்சக்கரக்காரர்களும் பதறிஓடிவந்தார்
பெரும்படையாகக்கூடினுரெல்லாம் கோட்டைக்குள்ளாக
குமுகுமுவென்றுகுமுறுதுநகரா கோடையிடிபோல
வகைவகையானவாத்தியமாகுது வண்டர்படைக்குள்ளே
மேளவாத்தியமுழங்குதுமெத்த வேடிக்கைமிகவாக
சாமியைபோய்வரங்கள்கேட்டார் சத்ராதியைவெல்ல
புத்தைவரங்கள்கேட்டாரெல்லாம் பொடிப்பொடியாய்மடிய
கோட்டையைவிட்டுவெளியினில்வந்தார் கோடிபடையாக
வந்தபடைகளைக்கண்ணுற்கண்டார் வல்லஅசுஹாப்கள்
அந்தவேளையிலென்னுச்செய்தார் ஆதிப்புலியுல்லா
படைகளை அணியாகவகுத்தார் பாரஅலியுல்லா
பூமியதிர்ந்திடப்படைகளைநிறுத்தினர்பெரிய அலியுல்லா
அந்தவேளையில்இம்லாக்கோடு ஹிரமின்ராசாவும்
குதிரைமேலிரண்டுமேருமாகவந்தார் கோபமிகக்கொண்டு
படைமுன்வந்துஇம்லாக்கென்போன் பாரஇடிபோல
சையித்தூன்தன்னைச்சண்டைக்கியழைத்தான் இம்லாக்குராசன்
சிற்றப்பன்சண்டைக்கு அழைத்ததைக்கேட்டாள் தீரசையித்தூனு
அலியார்கிட்டேசையித்தூன்வந்து அபதாகைகட்டி
என்னுடன்சிற்றப்பன்சண்டையழைக்கிறுன் எனக்குவிடைதாரும்
என்றசொல்லைக்காதிலேகேட்டு ஏகன்புலியலியார்
பெண்டுகள்சண்டைக்குப்போறதுகாரியமல்ல பேசாமல்நில்லு
அவனைவெல்லஅசுஹாப்மார்களை அனுப்புகிறேனுனும்

வசனம்

இப்படி அலிறலி அல்லாகுசொல்ல, அதைச் சையித்தூன் கேட்டு, ஓ பாதஷாவே! என்னை இப்போது சண்டைக்கு அழைக்கிறது என்னுடைய சிறிய தகப்பன். ஆகையால் நான் அவனுடனெதிர்க்க எனக்கு விடைதர வேணுமென்று கேட்க, அச்சொல்லைக் கேட்டு அலிபுலி போக விடைகொடுத்தார். உடனே சையித்தூன் குதிரையின்மேலேறி தன் சிறிய தகப்பனுகிய இம்லாக்கின் முன்னில் போய் மிகுந்த ஆங்காரத்தோடு நிற்க, அதுகண்டு இம்லாக்கும் எதிரில்வந்து நின்று ஓ மகளே! என்று அதிககோபத்தோடு நீயென்னவிதத்திற்காக உன் தாய்தகப்பனுடைய பட்டணத்தை யழித்துக் கெடுத்துப்போட்டாய்? இன்னம் நம்முடைய பெரியசாமியைக்கொண்டும் உனக்கு வெட்கம் வரவில்லையா? இன்னும அதனுடைய பயமுமில்லையா? இன்னம் நீ உங்கள் பெரியவர்களுடைய நடத்தைகளையும் விட்டுவிட்டாய். இன்னம் நீ உன் மார்க்கத்தைவிட்டு இசுலாமார்க்கத்தைக் கைக்கொண்டாய்

இன்னமெங்களை மோசஞ்செய்து அவர்களுடன் அங்குபோய்க் கூடிட்டதனால் நீ பார்த்தாயா? உன்னை நம்முடைய பெரியசாமி இங்கே யிழுத்துக்கொண்டு வந்துவிட்டது. அது எதினாலெனில் நீ குற்றவாளியாயைபடியினாலே இங்கு வெட்டுண்டுபோக வந்து விட்டது. நீ இன்று என்னையால் வெட்டுண்டு போவாய். ஆகை யால் என்னுடைய தண்டாயுதத்தால் உன்னை யடிக்கிறேன். நீ தப்பித்துக்கொள்ளென்று உடனே தண்டாயுதத்தால் உன்னை யடிக்கிறேன். நீ தப்பித்துக்கொள்ளென்று உடனே தண்டா யுதத்தால் தலைமேலோங்கி யடித்தான். அவ்வடியைச சையித் தூன் தன் கையிலிருந்த கேடகத்தினால் தாங்கிக்கொண்டார்கள். பின்னுமடித்தான். அதையும் தாங்கிக்கொண்டார்கள். பின்பு மூன்றுவதுதரம் அவன் பலமெல்லாங்கூட்டிக் கத்தியையுருவி தன் னுடைய பெரியசுவாமியை மனதில் நினைத்து ஓங்கி வெட்டினான். அவ்வெட்டு எப்படி விழுந்ததெனில்? மாசியில்நின்று இடி வீழ்ந் தாப்போலிருந்தது. அவ்வெட்டையும் சையித்தூன் தப்பித்துக் கொள்ள அவன் பெருமூச்சுவிட்டு நம்முடைய மூன்றும் விரு தாவாய்ப் போயிற்றே யென்று ஆச்சரியப்பட்டு மெய்மறந்து திகைத்து நின்றுவிட்டான். அப்பொழுது சையித்தூன் தன்னு டைய வல்லமையை அவன்பேரில் காட்ட கோடையிடிபோல ஒரு வெட்டு வெட்டிப் பின்பு அவனுடைய இடுப்பில் கையைப்போட்டு சீனேடு மேனுக்குத் தூக்கிக்கொண்டு அலிநலி அல்லாகுவிடத் திற்குக் கொண்டுவந்து நீ கலிமாச்சொல்வாயாகில் உன்னுயிரோடு பிழைத்துப்போவாய். இல்லாவிடில் இப்படியே அடிபட்டுப்போவா யென்று சொல்ல, அதற்கு அவன் என்னுயிர்போனபோதிலும் ஒருபொழுதும் நான் கலிமா ஓதமாட்டேனென்று சொன்னான். அவன் சொன்னதைச் சையித்தூன்கேட்டு, உடனே தன்கத்தியை யுருவி இரண்டு துண்டாகத் தலையையறுத்து அவனை நரகத்திற்கு அனுப்பிவைத்தாங்கள்.

2-வது தம்பியிடத்திற்கு ஓடிப்போகுல்

இம்லாக்கு வெட்டுபட்டுப்போனதை இரமின் பாதஷாகண்டு பயந்து, இனிநாம் இங்கிருக்கக்கூடாது; இருக்கில் உயிருக்குச் சேதம் வருமென்றுபயந்து, தன்கூட சில குதிரைகளைச்சேர்த்துக் கொண்டு அவ்விடம்விட்டு இன்னெருதம்பியினுடையபட்டணத் திற்கு ஓடிப்போய் விட்டான். பின்பு அலிறவி அல்லாகு அப்பட் டணத்தைப் பிடித்துக்கொண்டு எல்லாரையும் தீனிலாக்கி ஈமான் கொள்ளும்படிச் செய்து அவ்விடமிருந்து உமரைக் கூப்பிட்டு,

ஹிறம்பாதஷா எங்கே ஓடிப்போயிருக்கிறான்? அவன் போயிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து வாவென்று சொல்ல, அதைக் கேட்டு உமர் சீக்கிரமாக வெளிப்பட்டு அவன் பின்றொடர்ந்து போய் இடைவழியிற் கண்டுபிடித்து அவனுக்குத் தெரியாமல் கூடவேபோனார். அப்போது தம்பியினுடைய பட்டண மருகாகி தான்வந்த செய்தியைத் தூதர்களால் தம்பிக்குத் தெரியப்படுத்த, உடனே தம்பி எதிர்கொண்டுவந்து அண்ணனை யழைத்துப்போய் ஒரு தோப்பினிடமாக உட்கார்ந்து இருவரும் பேசுகையில், தம்பி அண்ணனைப்பார்த்து உனக்கு என்ன மிடிமைப்பிடித்தது? இன்று பெரிய முசீபத்து வந்த வகையைச் சொல்லென்று கேட்டான். அதற்கு அவன் தம்பியைப் பார்த்து என் மகளால் எனக்கு இப்படிப்பட்ட முசீபத்துவந்து பிடித்தது. என்னூரையுமிழக்கும்படி நேரிட்டது. இன்னம் இசுலாமான படைகளைக் கூட்டிவந்து என் பேரில் விட்டாள். அவர்கள் என்னூரையும் பிடித்துக்கொண்டார்கள். இன்னம் இம்லாக்கையுங் கொண்டு அவ்வூரையும் பிடித்துக்கொண்டார்கள். அதனால் நான் அங்கிருந்து இங்கு உன்னிடத்திற்கு ஓடிவந்துவிட்டேன். என்னுயிரைத் தப்பித்துக் கொண்டேனென்று நானாவிதமாகிய பேச்சுகளெல்லாஞ் சொல்ல, அதற்குத் தம்பி நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவர்கள் இங்குவர என்ன வல்லமையுண்டு? நீ பயப்படாமலிரு மென்று சொல்ல, அப்போது உமர் தன் தலைமேலிருந்த குல்லாவைக் கழட்டவும், எல்லார் கண்ணுக்கும் தெரியலாயினர். அப்போது ஷாஹேஹிறம் உமரைக் கண்டு ஹாவென்றொரு சத்தமிட்டான். பின்பு இந்தப் பலாமுசிபத்து என்னை விடவேயில்லை. பின்றொடர்ந்தே வருகிறதேயென்ன, அதற்கு உமர் ஓ பாதஷாவே! உனக்கு இவைகளெல்லாஞ் சொல்லக் கொஞ்சமும் வெட்கமில்லையே; நாணமில்லையே; ஓடிஓடி அலைகிறாயே. அதுகேட்டு ஷாஹேஇறம் தம்பியைப் பார்த்து இந்தப்பாவி கால்நடையாக நான் எங்கே போகிறேனோ அங்கெல்லாம் வந்து கண்டுபிடிக்கிறான். எல்லா பலாவும் இவனைக்கொண்டே வருகிறதென்று சொல்ல, உடனே உவரைப் பிடிக்கும்படியாக உத்திரவுகொடுத்தான்.

அப்போது உமர் தன் கையிலிருந்த குல்லாவை எடுத்துத் தலையிலிட்டுக்கொண்டார். உடனே யார்கண்ணுக்குக் தெரியாமல் மறைந்துவிட்டார். அங்கிருந்து ஓடிவந்து சகல சங்கதிகளும் அவ்விடம் நடந்தவையெல்லாம் ஒன்றுந் தவறாமல் உமர் அமிறலி அல்லாவிற்குச் சொன்னார். உடனே அமிறலி அல்லாகு தன்னுடைய

படைகளை அவ்விடம்விட்டெழுந்து அவனோடி ஒளிந்திருக்கும் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அப்போது அவன் அலியார் வந்த செய்தியைக் கேட்டு தன்னுடைய படைகளெல்லாம் கோட்டையைவிட்டு வெளியேகொண்டு மைதானில் அணியணியாக நிறுத்தினான். உடனே அலிறலி அல்லாகு தன்னுடைய படைகளையும் அணியணியாக நிறுத்தினார். அப்போது இரண்டுபடைகளும் ஒன்றோடொன்று எதிர்த்து ரத்தாறு வோடிவிட்டது. எங்கே பார்த்த போதிலும் பிணங்கள் மலைமலையாகக் குவிந்துவிட்டது. இன்னம் கால்வேறாகவும் தலைவேறாகவும் கைவேறாகவும் வெட்டுண்டு பிணக்காடாய்விட்டது. அப்போது ஷாஹேறஇறமினுடைய தம்பியானவனுக்குக் கண்களிரண்டும் சிவந்து நெருப்புப் பறக்கும்படியாக இரண்டு படைக்கும் நடுவில் வந்துநின்று, ஒ அறபுகளே! நீங்கள் யாரும் என்னோடு எதிர்க்க வரவேண்டியதில்லை. சையித்தூனென்பவள் வரவேணுமென்று கூப்பிட்டுச் சொன்னான். அந்தச் சொல் எல்லார் காதிலும் விழுந்தது. அப்போது சையித்தூன் விடைபெற்றுக்கொண்டு தன் குதிரையின் மேலேறி மிகுந்த ஆரவாரத்தோடு அவன் முன்னுகைப்போய் நின்று, நீயேன் என்னையழைத்தாய்? என்று கேட்க, அதற்கு அவன் நீ இசுலாமாகி அந்த மார்க்கத்திலாய் உன் தகப்பனை ஊரைவிட்டுப் பறக்கும்படிச் செய்தாய் இன்னம் உன் சிறிய தகப்பனாகிய இம்லாக்கையும் கொன்றுபோட்டாய். நீ கேடுகெட்ட வழியே எடுத்து இன்று என்பேரிலும் சண்டைக்கி வந்தாய் என்றுசொல்லி, ஆங்காரத்தோடு அதிக கோபங்கொண்டு கத்தியையுருவி வெட்டினான். அவ்வெட்டைச் சையித்தூன் தன் கேடகத்தால் தாங்கிக்கொண்டு இப்போது நீ சிக்கிரமாகக் கலிமாவோதி ஈமான்கொள்வாயாகில் உன்னை உயிரோடு விட்டுவிடுகிறே னென்றுசொல்ல, அவன் பயந்து சந்தோஷத்தோடு கலிமாவோதி ஈமான்கொண்டு இசுலாமாகினான்.

மூன்றுவது தம்பியிடத்திற்கு ஓடிப்போகுதல்

அதன்பின்பு சையித்தூன் தன்சிறியதகப்பன் ஈமான்கொள்ளவும, அதிகசந்தோஷத்துடனே அலிறலி அல்லாகுவிடத்திற்குக்கொண்டுசந்திக்கவைத்து, அலியார் அவ்வரசனைமாரோடுகட்டியணைத்து அதிக பிரியஞ்செய்ய மற்றவர்களையெல்லாம்இசுலாமாக்கி, அவ்விடமேயிருந்தார்கள். அப்போது ஷாஹேறஇறம் அவ்வூரைவிட்டு சில

குதிரைகளுடன் இன்னொரு தம்பியினிடத்திற்கு ஓடிப்போய்விட்டான். பின்பு அலிறலி அல்லாகு ஷாஹேஇறமை தேடிப்பார்க்கையில் அவன் தன் தம்பியினிடத்திற்கு ஓடிப்போய்விட்டானென்று விசாரித்துவந்து சொன்னார்கள். அதை அலியார் கேட்டு உடனே உமரை யழைத்து அவனெங்கே போயிருக்கிறான்? பார்த்து விசாரித்துக் கண்டுவாவென்று உத்திரவு கொடுக்க, உமர் காற்றின் விசையைப்போல் நடந்துபோய் பின்தொடர்ந்து ஷாஹேஇறம் தம்பியின் கோட்டை கிட்டேபோய்த் தான் வருகிற செய்தியை ஒரு ஆளுடன் சொல்லியனுப்ப, அச்செய்தியை அவன் தம்பி கேட்டு எதிர்கொண்டு வந்து அழைத்துக்கொண்டுபோய் கோட்டைக்குள் நல்ல விரிப்புகள் விரித்து, அதன்பேரில் அண்ணனை உட்கார் வைத்து சகல சங்கதிகளையும் விசாரித்தான். அப்போது அவன் முகத்தைப் பார்த்து நானென்ன செய்வேன்? கோடரிக் காம்பு குலத்திற்கு ஈனமென்பதுபோல என் மகள் என்னை இக் கோலஞ் செய்து ஊரை யிழக்கவுஞ் சேனைகளை யிழக்கவுஞ் செய்தாளென்று சொல்ல, அதற்குத் தம்பியானவன் நீ ஒன்றுக்கு மஞ்சவேண்டாம். உன்னுயிருக்கு என்னுயிரைக் கொடுப்பேன். இன்னம் அதிக ஒத்தாசைகளும் செய்வேனென்று தைரியஞ் சொல்லிக்கொண்டிருக்க, உமர் இவையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்து தன் தலைமேலிருந்த குல்லாவைக் கழட்டிக் கையிற் பிடித்திடவும், உமரை யெல்லோரும் பார்த்தார்கள். அப்போது உமர் நிற்கிறதை ஷாஹேஇறம் பார்த்துப் பயந்து கிடுகலங்கி வாய்நீர் காய்ந்து தம்பியைப் பார்த்து, இதோ நிற்கிறானே இப்பாவி என்னை யெங்கும் விடாமல் நான் போகுமிடந்தோறும் பின் தொடர்ந்து கால்நடையாகவே யிருக்கிறானென்று சொல்ல, உமர் அவனைப் பார்த்து, அடா பயித்தியக்காரா! உனக்கு ஓடிப்போகிறோமென்று கொஞ்சமும் வெட்கமில்லையே. ஆனாலும் நீ எங்கெங்கே ஓடினாலும் உன்னைவிடாமற் பின்றொடர்ந்து வருவேனென்று சொல்ல. அதுகேட்டு சீக்கிரமாக இவனை விடாமல் பிடியுங்களென்றும் தன் சேவகர்களுக்கு உத்திரவு கொடுத்தான். அப்போது உமரைப் பிடிக்கச் சேவகர்கள் ஓடிவந்தார்கள்.

அந்நேரம் உமர் கையிலிருந்து குல்லாவை யெடுத்துத் தன் தலையிலிட்டுக்கொண்டார். உடனே யார்கண்ணுக்குந் தெரியாமல் மறைந்துவிட்டார். அங்கிருந்து நேரா அலிறலி அல்லாவினிடத்திற்கு வந்து, அங்கு நடந்த சங்கதிகளொன்றுந் தவறாமற் சொன்

ஞர். உடனே அலிறலி அல்லாகு அங்குபோக படைகளைக் கூட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டுப் போகையில் இந்தச் சங்கதிகளைத் தூதர்கள் ஓடிப்போய் அவ்வரசன் முன்னின்று இங்கு படைகளை யெடுத்துக்கொண்டு அலியார் வருகிறாரென்று சொல்லினார்கள். அலிறலியும் அப்பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். பொழுதும்போய்விட்டது. காலமை இரண்டு படைகளுமெழுந்து மயிதானில் வந்து நின்றார்கள். அன்று ஒன்றுக்கொன்றுபோரிட்டு ஆறாக இரத்தமோடினது. பின்பு இரம்ராஜன் தம்பி தன் குதிரையின்மேலேறி அந்த மயிதானில் வந்து நின்று, ஓ சையித்தூனே! நீ இங்குவர நான் உன்னிடத்தில் பழியை வாங்கவேணுமென்று கூப்பிட்டான். அந்தச் சத்தத்தைச் சையித்தூன் கேட்டு அலியிடத்திற்குப்போய் என் சிறிய தகப்பன் ஏனோ அழைக்கிறான், போகவிடைதாருமென்று விடைவாங்கித் தன் குதிரையின்மேல் ஆங்காரத்தோடு ஏறி சிறிய தகப்பன் முன்னாகவந்து நிற்கவும், அவன் சையித்தூனைக்கண்டு இரண்டு கண்களும் சிவந்து கடுங்கோபங்கொண்டு தன்னுடைய கத்தியினாலே சோடையிடிபோல் ஓங்கி வெட்டினான். அவ்வெட்டை சையித்தூன் கேடகத்தினாற் றாங்கிக்கொண்டு அவனிடையிற் கையைப்போட்டு அவனை மேலுக்குத் தூக்கி, ஓ சிறிய தகப்பனே! சீக்கிரமாகக் கலிமாவோதி ஈமான் கொள்வாயாகில் உன்னுயிர் தப்பும். இல்லாவிடில் இப்படியேவாரி பூமிமேலடித்து விடுகிறேனென்று சொல்ல, அவன் பயந்து கலிமாவோதி ஈமான்கொண்டு இசுலாமாகினான்.

நாலாவது தம்பியினிடத்திற்கு ஓடிப்போகுதல்

அப்பொழுது சையித்தூன் தன் சிறியதகப்பனை அலிறலி அல்லாகுவிடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடவும், இரம்பவும் சந்தோஷப்பட்டு அவன்படை முழுதையும் இசுலாமாக்கினார்கள். பின்பு ஷாஹேஹி அவ்விடம்விட்டு இன்னொரு தம்பியினிடத்திற்கு ஓடிப்போய்விட்டான். அன்று அலிபுலி உமரைக் கூப்பிட்டு இரமின்ராஜன் எங்கேபோயிருக்கிறதும் கண்டறிந்து வாவென்று விடைகொடுக்க, உடனே உமர் அவன் பின்றொடர்ந்து அவனுக்குத் தெரியாமல் கூடவேபோக இரண்டுபேரும் அப்பட்டணம் மடுக்கப்போனார்கள். கிட்டேபோன உடனே தான் வருகிறசெய்தியைத் தன் தம்பிக்குச் சொல்லி ஆளொன்று அனுப்பினான். அந்

தத் தூதன்போய்ச் சொல்ல, உடனே தம்பி எதிர்கொண்டுவந்து அண்ணனுடன் சந்தித்து ஒருவருக்கொருவர் க்ஷேமங்கள் விசாரித்துக்கொண்டு அவ்விடம்விட்டு குதிரைகள் மேலேறிக் கோட்டையைப் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு தம்பி அண்ணன் முகத்தைப் பார்த்து, அதிக மெலிவோடு தாங்கள் சேனைகள் விட்டுவிட்டு சில குதிரைகளுடனே இக்கோலமாக இங்கு வரவேண்டிய காரணமென்ன? வந்து நேரிட்டதென்று கேட்க, அதற்குத் தமையனை ராஜன் தம்பியின் முகத்தைப்பார்த்து, இப்படி என்னுடைய ஆள்களாயினது சையித்தூனுடைய உபகாரமென்று அவளால் தனக்கு வந்து சம்பவித்ததைச்சொல்ல, அதைக்கேட்டு இனிமேல் நீ ஒன்றுக்கும் பயப்படாதே. அவர்களிங்கு வரமாட்டார்கள். அப்படியே மிஞ்சிவந்தால் உன்னுடைய பழியை நான் வாங்குவேன். அஞ்சாதேயென்று தைரியஞ்சொல்லிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் உமர் தன்மே லிருந்த குல்லாவைக் கழற்றி கையிற் பிடிக்கவும் எல்லாரும் உமரைக் கண்ணுற்கண்டார்கள். அப்பொழுது இறமராஜனை உமர் கூப்பிட்டு, இப்படி நீ தேசதேசமாக ஒடுகிறதை நினைத்து உனக்குக் கொஞ்சமும் வெட்கமில்லையாவென்று சொல்ல, உமரை ராஜன் பார்த்து தம்பியின் புறமாகத் திருப்பி இப்பாவி என்னை விடுகிறதேயில்லை. நான் எங்கெங்கே போகிறேனோ அங்கங்கே விடாமல் பின்றொடர்ந்தே வருகிறான். இவனால்தான் எனக்குப் பெரிய பலாமுசிபத்திருக்கிறது. இன்னமிவன் பரியோ அல்லது ஜின்னோ தேவோ அல்லது காற்றோ நானென்ன சொல்வேன். ஒரு நொடிக்குள் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்துவிடுகிறானென்று நானாவிதமாகிய சங்கதிகளெல்லாம் சொல்ல, அதை அவன் தம்பி கேட்டு சேவகர்களைப் பார்த்து அவனைவிடாமற் பிடியுங்களென்று சொல்ல, உடனே சேவகர்கள் நகமுக்முஞ் சூழ்ந்துப்பிடிக்க வந்தார்கள். அப்போது உமர் தன் தலைமேல் குல்லாவையெடுத்து வைத்துக்கொண்டார். உடனே ஒருவர் கண்ணுக்குந்தெரியாமல் மறைந்துவிட்டார். இன்னம் எத்தனையோ பேர்களுடைய தலைப்பாகைகளைப் பிடிங்கித் தன் சோளியிலிட்டுக்கொண்டு அவ்விடம்விட்டு நீங்கி அலிறலி அல்லாகு விடத்தில் வந்து ஒன்றுந் தவறாமல் அங்கு நடந்த செய்திகளெல்லாம் தவறாமற் சொல்லினார். அந்தச் செய்தியை அலிறலி அல்லாகு கேட்டு மற்றுனாள் தன்னுடைய படைகளையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு அவ்விடம்விட்டு கிட்டே போனார்கள்.

அலங்காரக்கண்ணி

தூதர்கள்படைகள்வருவதைக்கண்டு திடுக்கமிகவாகி
கையும்நடுங்கக்காலும்நடுங்க கனத்தஓட்டமாக
ஓடியேபோனார்ராஜன்கிட்டே உற்றசெய்திசொல்ல
தெண்டமிட்டராஜாவுக்குத் தூதுசொல்லுவோர்கள்
ராணுவருடையஎங்களையாளும் ராஜாவேகேளு
பெரியகடல்போல்திரண்டுவருகுது படையின்பெருங்கூட்டம்
என்றசொல்லைக்காதிலேகேட்டான் எதிராளிராஜன்
நல்லதுநல்லதுவந்தால்வரட்டும் நாமறிவோம்சண்டை
மந்திரிமார்களேநம்முடையபடைகளை வரச்செய்யுமிங்கே
தயாராயிருந்தால்எதிரியைவெல்ல திராணிமெத்தவுண்டு
ராஜன்சொல்லக்கூட்டினார்படையை ரணக்களம்போக
அந்தவேளையில்வந்தாரங்கே ஆதிப்புலியலியார்
படைகள்வந்ததைராஜன்கண்டு படையையெடுத்துவந்தான்
கோட்டையைவிட்டுவெளியேவந்தான் கோடிபடைசூழ
அந்தவேளையிலிரண்டுபடைகளும் அடுத்தார்சண்டைக்கு
ஈட்டிவில்லுங்கையிலேபிடித்து எதிர்த்தார்சண்டைக்கு
அம்புவில்லுங்கையிலேபிடித்து எதிர்த்தார்சண்டைக்கு
மழையைப்போலப்பொழிந்தாரம்பு விருதுமிகப்பேசி
மின்னலைப்போலமின்னுது கத்திகள்மேகவிடிபோல
சண்டைபேரிகைஅடித்தார்நின்று சண்டைமூண்டுபோச்சு
மண்ணும்விண்ணும்மூடிக்கொண்டது மன்னவர்வாளாலே
ஆறுயோடிப்போச்சுரத்தம் அந்தச்சண்டையிலே
மலைமலையாகப்பிணங்கள்குவிந்து மாண்டார்களதனாலே
மூளைகள்தயிர்போல்சிந்திப்போச்சுது மூண்டசண்டையிலே
படைகள்முறிந்துபோனதைக்கண்டான் பட்டத்துராஜாவும்
குதிரைமேலேறிவந்தான்சண்டைக்கு கொக்கரித்துக்கொண்டு
வந்ததைக்கண்டுபோனார்குதிரைமேல் முகம்மதுஅனிபாவும்

வசனம்

அப்போது முகம்மதனிபு அவனுடைய இடுப்பில் கையைக் கோர்த்து குதிரைமேலிருந்தவனை மேலுக்குத் தூக்கிக்கொண்டு, ஓ ராஜனே! சீக்கிரத்தில் இப்பொழுது கலிமா ஓதுவாயாகில் உன்னுயிரையும் மன்னித்துவிடுவேன்; உன்னுடைய அரசையும் கொடுப்பேன்: நீயும் பிழைத்துப்போவாய். இல்லாவிடில் இப்படியே பூமிமேல் வாயுமோதிக் கொன்றும் போடுவேனென்று சொல்ல, அவன் பயத்துடனே கலிமாவோதி ஈமான்கொண்டு இசுலாமானான். உடனே அவனை அழைத்துவந்து அலிறலி அல்

லாகுவின் கிட்டே கொண்டுவந்து சந்திக்கச்செய்தார். அவனைப் பார்த்து அலியார் அதிக சந்தோஷப்பட்டார்கள். பின்பு ஷாஹே இறம் இவைகளெல்லாம் பார்த்து தன் தம்பியுங் கலிமாவோதி ஈமான்கொண்டதைக் கண்டு இனி நாம் இங்கிருக்கலாகாது: எங் கேயாவது ஓடிப்போகவேணுமென்று யோசனை பண்ணிக்கொண்டு நிற்கிறதை அலியார் கண்டு, இனி நாம் இவனைவிடலாகாது, விட் டால் ஓடிப்போவானென்றெண்ணி, உடனே துல்துல் குதிரை யின்மேலேறி அவன் முன்பாகப்போய் நின்று, ஓ இறமினுடைய ராஜனே! நீ எவ்வளவு தூரம் ஓடுவாய்? எங்கெங்கே ஓடிப் போவாய்? எங்களை எவ்வளவு தூரம் திரியவைப்பாய்? நீயும் எது வரைக்கும் ஊரூராயோடுவாய்? நீ ஆண்பிள்ளையானால் மயிதானில் நின்று உன் வல்லமைகாட்டென்று சொல்ல, அப்பொழுது இற மின் ராஜாவிற்கு அதிக வெட்கம் பிறந்து அதிக வீரியத்துடன் அலிறலி அல்லாகுடன் எதிர்த்துப் பேரிடிபோற் கத்தியையுருவி வெட்டினான். அவ்வெட்டை அலிறலி தப்பித்துக்கொண்டு அவ னைக் கோழிக்குஞ்சைப் பருந்து எடுப்பதுபோல் குதிரைமேலிருந் தவனை மேலுக்குத் தூக்கிக்கொண்டு அவனுக்கு அதிக ஒப்புகள் சொல்லி நீ கலிமாவை ஓதினால் உன்னுயிர் மீந்து சந்தோஷமடை வாய். இல்லாவிடில் வீணாக உன்னுயிரை யிழந்து நரகுக்கிரை யாய்ப் போவையென்று சொல்ல, அச்சொல்லை இறமின் அரசன் கேட்டு இரம்ப குன்றுதலாகி இனி நம்மால் ஒன்றுமாகிறதில்லை; இது கடைசிவேளை நமக்கு ஆகையால் இந்நேரவேளையில் நமக்கு உதவியாகப் படைகளுமில்லை, அண்ணன் தம்பிகளுமில்லை, இன பந்துக்களுமில்லை, ஓடிப்போகலாமென்றாலும் அகப்பட்டுக்கொண் டிருக்கிறோம். ஆனால் இவ்வேளையில் கலிமா ஓதாவிடில் ஓர் உத வியுமில்லை இந்நேரவேளையில் நாம் நித்தியகாலம் தவறாமல் பூசை கள்செய்துவந்த சாமிகளும் அல்லது பெரியசாமியாவது முன் னும் பின்னும் நமக்கு உதவி ஒத்தாசை செய்து நம்மை வெல்லும் படியாக உதவியாகவுமில்லையென்று தவபாச் செய்துவிட்டு வாக்கு மனதோஷத்தால் கலிமாஓதி ஈமான் கொண்டு இசுலாமாகினார். அப்போது அலிறலியல்லாகு அதிக கிருபைசெய்து என்னுடைப் பிறப்பாளாவென்று உடனே முகம்மது அனீபையும் தாலிபலியை யும் உமறலியையும் அழைத்து அவன் படைகளையெல்லாம் இசு லாமாக்கிவிட்டு பின்பு இறமிற்குப்போய்ப் பட்டங்கட்டி சிம்மா சனத்தின்மேல் உட்காரவைக்கவேணுமென்று சகல படைக

ளுடனே இறமிற்குப்போய் வரும்போது அவன் தம்பிமார்க ளுடைய பட்டணங்களை அவரவருக்கே ஆளும்படி கொடுத்து விட்டு பின்பு இறமிற்கு வந்து சேர்ந்தார்கள்.

பின்பு மற்ற ராஜர்களெல்லாம் அவரவர் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு இறம் பாதஷாவிற்கு பட்டங்கட்டி அருகில் உட்காரவைத்து, அலிறலியல்லாகு சைத்தூனை தகப்பனிடத்திற் குக் கொண்டுவந்து இப்பெண் உன்னுடைய மகள் சையித்தூன், இதுவரைக்கும் கற்பழியாமல் பரிசுத்தமாயிருந்தது. இப்போது இப்பெண்ணை முகம்மது அனிபாவிற்கு நிக்காச்செய்ய எனக்கு நாட்டமாயிருக்குது. நீயும் இசுலாமாய்விட்டாய். இன்னம் அல்லா றசூலுக்கும் உகப்புள்ளவனுயென்று சொல்ல, அந்தச் சொல்லு களையெல்லாம் இறம் பாதஷாக்கேட்டு அதிக சந்தோஷத்தோடு சம்மதிப்பட்டு மிகுந்த ஆடம்பரத்தோடு படைகளெல்லாம் சூழ வும் அசுஹாகபிமார்களும் மற்றுமுள்ளவர்களெல்லாம் அன்று முகம்மது அனிபாவிற்கும் சையித்தூனுக்கும் நிக்கா முடித்து விட்டார்கள். பின்பு இறமின்பாதஷா தன் மகளுக்காக அளவற்ற பணங்களும் முத்துமாணிக்கங்களும் வெள்ளியும் குலாம்களும் சீர்கொடுத்து மதீனம் போகும்படியாக விடைகொடுத்தார். அப் போது அலிறலியல்லாகு முன்னால் சிறையிலகப்பட்டிருந்த நாலு பேரையும் மீட்டுக்கொண்டு தன் படைகளெல்லாம் சூழ்ந்துவர இறமைவிட்டு வெளியாகி சிலநாள்வரைக்கும் விடுதி விடுதியாக இருந்து சந்தோஷத்தோடு மதீனமாநகர் வந்து சேர்ந்தார்கள். அப்போது அசுஹாபுமார்களெல்லாம் நபிசல்லல்லாகு அலைகிவ சல்லமுடைய றவுலாவின் கியாறத்துச்செய்துவிட்டு அவரவர் வீடுகள் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு அலிறலியல்லாகு முகம் மது றசூலுல்லாஉடைய றவுலாவின் கிட்டேபோய் சியாசிறத்து செய்து பின்பு அலேக்குலா மகளை விடுதலையாகவிட்டு அளவற்ற பணங்கள் கயிர் கயிராத்துக்கொடுத்து மிஸ்கீன்களுக்கும் அன்ன வஸ்திரங் கொடுத்துவிட்டு, பின்பு தானும் தன் மக்கள்மாருடன் வீடுபோய்ச்சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

ஆமீன் ஆமீன்

சை த் தூ ன் கி ஸ் ஸா

மு ற் றி ற் று.

இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

முஹ்யித்தீன்மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது	0	10	0
நசீகத்துல் இசுலாம்ஹனபியா	0	10	0
மேற்படி ஷாப்பியா	0	10	0
மெஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை	1	0	0
திருமுடியிறக்கிய ஹதீது	0	3	0
மரண விலக்கம் மனதை துலக்கம்	0	5	0
ராஜமணிமாலை	1	4	0
நசிஹத்துநாமா	0	3	0
காசீம்படைப்போர்	0	4	0
சக்கறுத்து நாமா	0	2	0
சத்துருசங்காரம்	1	0	0
சைபித்தூன் கிஸ்ஸா	0	10	0
ஞானமணி மாலை	0	14	0
ஷண்மூன்றலியார் கிஸ்ஸா	0	6	0
பெண்புத்திமாலை	0	2	0
தொழுகை அடவு	0	4	0
சலவாத்துப்பாட்டு	0	3	0
தொழுகைநாமா	0	3	0
இரத்தினமுஹம்மது காரணசரித்திரம்	0	10	0

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

27:331
(N 47)

புத்தக விளம்பரம்.

வைத்திய புத்தகங்கள்

	ரூ.	அ.	பை.
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0	0
புலஸ்திய மகரிஷி வாதசூத்திரம்-300	0	12	0
உரோமரிஷி சூத்திரம்-100	0	4	0
அகஸ்தியமுனி பூரண சூத்திரம்-216 பாடல்	0	8	0
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200 பாடல்	1	4	0
ஊர்வசி வைத்திய சிட்கா 1-ம் பாகம்	0	12	0
ஷ 2-ம் பாகம்	0	12	0
தன்வந்திரி கருக்கிடை நிகண்டு-300	0	8	0
ஆயுள்வேத சுருக்கம்	0	12	0
திருமூலநாயனார் வைத்தியகாவியம்	1	0	0
வைத்திய குறல் பழமொழி விளக்கம்-108	0	8	0
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8	0

சோதிட புத்தகங்கள்

கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம்	0	14	0
,, ,, 2-ம் பாகம்	1	0	0
,, ,, 3-ம் பாகம்	1	0	0
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12	0
சோதிட நூலாதாரம்	0	6	0
சர்வ கினவின் பலன்	0	6	0
களவுகாணும் சாஸ்திரம்	0	6	0
வீமகவி பாட்டு உரை	1	0	0
சுகர்நாடி சோதிடம்	1	0	0
சோதிமாமுனிவர் சோதிட கோளம்	0	12	0
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	0	0
சோதிட முகூர்த்த விதானம்	0	12	0
கணித முருகசேகரம்	1	0	0
ஹோரா சாஸ்திரம்	1	0	0
நவக்கிரக தோத்திரம்	0	6	0
மலையாள மாந்திரீக அரிச்சுவடி	0	5	0

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைதெரு, மதராஸ்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
111157

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. No. 172. C. 2000 27-1-47.

புத்தக விளம்பரம்

வைத்திய புத்தகங்கள்	ரூ.	அ.	பை
மணிமந்திர வைத்திய சேகரம்	1	0	0
புலஸ்திய மகாரிஷி வாதசூத்திரம்-300	0	12	0
உரோமரிஷி சூத்திரம்-100	0	4	0
அகஸ்தியமுனி பூரண சூத்திரம்-216 பாடல்	0	8	0
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200 பாடல்	1	4	0
ஊர்வசி வைத்திய சிட்கா 1-ம் பாகம்	0	12	0
ஷை 2-ம் பாகம்	0	12	0
தன்வந்திரி கருக்கிடை நிகண்டு-300	0	8	0
ஆயுள்வேத சுருக்கம்	0	12	0
திருமூல நாயனர் வைத்தியகாவியம்	1	0	0
வைத்திய குறல் பழமொழி விளக்கம்-103	0	8	0
புலஸ்தியர் விளக்கிய ஞானகற்பம்	0	8	0
சோதிட புத்தகங்கள்			
கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம்	0	14	0
,, ,, 2-ம் பாகம்	1	0	0
,, ,, 3-ம் பாகம்	1	0	0
நவக்கிரக சிந்தாமணி என்னும் சாதக சூடாமணி மூலமும்-உரையும்	0	12	0
சோதிட நூலாதாரம்	0	6	0
சர்வ கினவின் பலன்	0	6	0
களவுகாணும் சாஸ்திரம்	0	6	0
வீமகவி பாட்டு உரை	1	0	0
சுகர்நாடி சோதிடம்	1	0	0
சோதிமாமுனிவர் சோதிட கோளம்	0	12	0
சாதகலங்காரம் மூலமும் விரிவுரையுடன்	2	0	0
சோதிட முகூர்த்த விதானம்	0	12	0
கணித முருகசேகரம்	1	0	0
ஹோரா சாஸ்திரம்	1	0	0
நவக்கிரக தோத்திரம்	0	6	0
மலையாள மாந்திரீக அரிச்சுவடி	0	5	0

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலை தெரு, மதராஸ்.